மாத வெளியீடு

ஆசிரியர் : காரியாலயம் :

கா. சி. வேங்கடரமணி 34, அலமேலுமங்காபுரம், மயிலாப்பூர், சென்னை

வருட சந்தா ரூபா 3 தனிப் பிரதி அணா 4

மாலை 13	APRIL 1945 : பார்த்திபஹு சித்திரைமீ	முத்து 4

பொருளடக்கம்

	விஷயம்		பக்கம்
1.	போகிற போக்கில்—மணி	...	173
2.	ப்ரிஸ்கோ நாடகம்—கா. சி. வேங்கடரமணி	...	176
3.	ஏவா மக்கள்—வே. நாராயணன்	...	179
4.	ஸம்ஸ்கிருத கீர்த்தனை—ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல்.	...	181
5.	விளையாட்டின் விபரீதம்—எஸ். அலமேலு	...	184
6.	விளம்பர யுகம்—திவான்பகதூர் கே. எஸ். இராமஸ்வாமி சாஸ்திரி	...	187
7.	கவிஞனின் காதலி—" குகப்ரியை "	...	189
8.	இலக்கிய யாத்திரை—ரா. ஸ்ரீ. தேசிகன், எம்.ஏ. & ர. ரங்காச்சாரியார், எம்.ஏ.		195
9.	சீதையும் ஆற்றங்கரையும்—ஸ்ரீ. என். வி. துரைசாமி	...	201
10.	மனிதனின் மனம்—கே. வெ. கார்த்திகேயன்	...	203
11.	'சத்தியுக'க் கொள்கை—டி. பி. நவநீதகிருஷ்ணன்	...	206
12.	" கனவு "—தெ. நா. கிருஷ்ணமூர்த்தி	...	214
13.	மூவர் அழல்—த்ருஷ்டகர்மா	...	216
14.	சிறுவர் பகுதி : பூனை வால்—சூடாமணி	...	223
15.	தினமணி வெளியீடுகள்—டாக்டர் டி. வி. இராதாகிருஷ்ண சாஸ்திரி	...	226

" பாரத மணி"யில் வெளியாகும் கட்டுரைகள் கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

கோடை காலத்திற்குத் தகுந்த

குளிர்ந்த பானங்கள்

கும்பகோணம்

T. S. R.

கம்பெனியின்

"குங்குமப்பூ, நன்னறி,
ரோஸ், ஆரஞ்சு"

முதலிய சர்பத்துகள்.

*

Madras Agents :—

PUSHPAVANAM STORES,
Triplicane, Madras

Coimbatore Stockists—

B. BALAPATTABI,
Vaisyar Street, Coimbatore

L. R. V.

இந்தியன் பாங்க் லிமிடெட்

தலைமை ஆபீஸ்: **"இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"**

வடக்கு பீச் ரோடு, :: சென்னை

உள்ளூர் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட்	மவுண்ட் ரோட்	திருவல்லிக்கேணி
மயிலாப்பூர்	தியாகராய நகர்	புரசவாக்கம்

*

சென்னை ராஜதானியிலுள்ள எல்லா முக்கிய இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகள் உள்ளன.

வெளியிடப்பட்டு வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. **60,00,000**
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. **33,61,250**
ரிஸர்வ் நிதி	ரூ. **33,62,500**
டிபாஸிட்டுகள்	ரூ. **10½** கோடிக்குமேல்

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் கவனிக்கப்படும்.

[விவரங்களுக்கு பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது எழுதவும்.]

N. கோபால அய்யர்,
காரியதரிசி.

NP.B./101

நேர்த்திக்கும் உறுதிக்கும்

சாரதி கைத்தறி நெசவுகள்

எ. ஆர். பி. சாரதி

தபால் பெட்டி நெ. 45, மதுரை

கிளைகள் :—சென்னை, புதுச்சேரி, திருச்சி, பங்கலூர்.

போகிற போக்கில்



மழை காலத்து ரேஷன் விறகுபோல், கொஞ்ச காலமாய் போகிற போக்கிலேத் தீ மூட்ட மூட்ட அணைந்துக்கொண்டே வந்தது. எவ்வளவு விடா முயற்சியுடன் அடுப்பை ஊதினாலும் ஈரவிறகு கண்ணை அவிப்பதுதான் மிச்சம். தவிர, அடுப்பு ஊதுவதும் பிராணாயாமத்திற்கு நேர் விரோதம்; ஆயுள் குறைவு. விறகு பஞ்சத்தினால் அடுப்பு ஊதித்தான் இந்தியாவில் எதிர்பார்க்கக் கூடிய ஆயுள் 23 ஆக குறைந்துவிட்டது போலும்! இந்தச் சுற்றுக் கதை போகட்டும். புது வருஷம் பிறந்துவிட்டது. கோடையும் வந்துவிட்டது. இனிமேலாவது தங்குத் தடையன்னியில் மாதா மாதம் "போகிற போக்கில்" எழுதலாம் என்று நினைக்கிறேன்.

சென்ற தாரண வருஷத்தில் இந்தியாவில் பிறந்தவர்களுக்கு யாருக்குத்தான் என்ன பலன்? சூன்ய பலன்தான்—மகாத்மா காந்தி முதல் சிற்றெறும்பு வேங்கடாரமணி வரையில்! ஆனால் நேச நாடுகளுக்கு வெற்றி. கொண்டாட்டம்; அதில் நமக்கு பேருக்குத் தான் பங்கு. உழைப்பிற்கு இந்தியா, பிழைப்பிற்கு பிரிட்டனும், அமெரிக்காவும்! தாரண வருஷத்தைத் தள்ளுவோம். ஒருவருக்கும் பயன் இல்லாத வருஷம்—அப்த பூர்த்தி, விவாகம், ஷஷ்டி அப்த பூர்த்தி விழா கொண்டாடப்படும் சில புண்ணிய புருஷர்களுக்குத் தவிர.

தாரண வருஷத்தில் நான் அறிந்து கொண்டது ஒன்றும் இல்லை. 'டம்பர்டன் ஓக்ஸ்' என்ற ஒரு புது பேர் ஒன்றைத்தான் தெரிந்து கொண்டேன். அவ்விடத்தில் ஓர் ஆடம்பரமான அரசியல் நாடக மேடைக் கட்டி, அதில் உலகமே ஒரு நாடகம் என்று நடிக்கிறார்களாம். நாடகமும் பொம்மலாட்டமாம். நம் இந்தியாவிலிருந்துகூட இரண்டு மூன்று பொம்மைகள் ஆகாச விமானம் மூலம் அனுப்பப்பட்டதாம். உடையாமல் போய்ச் சேர்ந்ததாம்.

புதுத் தமிழ் வருஷம் பிறந்துவிட்டது. அதைக் கொண்டாடுவோம். பார்த்திப வருஷ பலனைக் கண்டு பிடிக்க, 'போகிற போக்கில்'க்கு என்ன நக்ஷத்திரம், என்ன கந்தாய பலன் என்று பார்க்க வேண்டும். பெயருக்குள்ள நக்ஷத்திரத்தைக் கண்டு பிடிக்க ஜோஸ்யரைத் தேடிப் போக வேண்டும். அதற்கு இப்பொழுது அவகாசமில்லை, பிந்திப் பார்த்துக் கொள்ளலாம். நமது வாசகர்களில் எவருக்காவது சோதிடம் வருமா?

* * *

சில இஞ்சினீர்கள் ரிடையர் ஆனவுடன், அப்பொழுதுதான் அவர்களுக்கு நல்ல கட்டிடங்கள் திட்டம் போட்டு நேர்மையாக கட்டும் தேர்ச்சியை பெறுகிறார்கள்—சில ஜட்ஜ்களுக்கு ரிடையர் ஆகும்பொழுதுதான் சட்டத்தில் நிறைவான தெளிவான அறிவு ஏற்படுவது

போல்!—அப்படிச் சொந்த வீடு கட்டியும் ஏதோ பாக்கியக்குறைவால்—எஸ்டிமேட்டுக்கும் கையிலிருந்த பணத்திற்கும் மேற்கொண்டு ஏமாந்துபோய் செலவு செய்துவிட்டபடியால், சொந்த பங்களாவை திருந்தக் கட்டியும், அதை வாடகைக்கு விட்டுவிட்டுப் பக்கத்துச் சந்தில் தாங்கள் குடி இருந்து சொந்த பங்களாவை தினந்தோறும் தெருவிலிருந்து பார்த்து வருவதுபோல், அந்த ஸ்திதியில் நான் இப்பொழுது இருக்கிறேன்.

சொந்தப் பத்திரிகையில்தான் எழுத வேண்டுமென்று எண்ணி பாரத மணியை வளர்த்தும் பல இடையூறுகளால் நான் எதிர்பார்த்தபடி இதுவரையில் எழுத முடியவில்லை. அடிக்கடி எழுதச் சொல்லி பல நண்பர்கள் வற்புறுத்தியும் வருகிறார்கள். எழுதாததற்கு முக்கியக் காரணம் என் மனப்பான்மையே. சமூகத்தின் சோர்வையான பார்வையே. நாட்டின் நிலைமையே. வருஷா வருஷம் பல இடங்கள் போய் நம் சமூக வாழ்வை அறிந்து ஆராய்ச்சி செய்திருக்கிறேன். நம் அடிமைத்தனம் விலகும் வரை நமக்குச் சுகம் ஏது ? நம் அடிமை வாழ்விலிருந்து ருசிகரமான கவிதை பிறக்குமா ; நிழலில் பூ பூக்குமா ? விலைமோரில் வெண்ணெயும் உண்டா ? அடிமைத்தனம் ஒழிந்தால்தான் நம்முடைய செயலுக்கும் சொல்லுக்கும் பயன் உண்டு. அதற்குள்ள ஒற்றுமை வெற்றி வழியையல்லவோ நாம் தேட வேண்டும்?

பார்த்திப வருஷ பிறப்பாவது நமது நாட்டிற்கு சுயேச்சையையும் மேன்மையையும் கொடுக்க வேண்டும் என்று ஈசனைப் பிரார்த்திக்கிறேன். பிரார்த்தனையும் சங்கல்பமும் போதுமா ? செயல் அல்லவோ வேண்டும். பருத்தி புடவையாகக் காய்க்குமா ? திடலில் சிதறிக் கிடக்கும் பருத்தியைப் பொறுக்கி கொட்டையை நீக்கி பட்டை போட்டு நூல் நூற்று ஓர் ஆடையாக நெய்தால்தானே பிரிந்து நின்று காற்றில் பறக்கும் மெல்லிய பருத்தி இழைகள் (fibre) நீடித்து உதவும் ஓர் துணியாகும் ? நிர்மாணவேலை மூலந்தான் நமக்கு ஸ்வராஜ்ய ஸ்வர்க்கம் கிட்டும். அதற்கு நாமே திட்டம் வகுத்துப் பாடுபடவேண்டும்.

* * *

தலைவர்கள் சிறையில் இருக்கும் வரையில், போகிற போக்கிலே அரசியல் கட்டுரைகள் எழுதுவதில்லை என்று தீர்மானம் செய்து 1942௵ செப்டம்பரில் எழுதி இருந்தேன். இரண்டரை வருடங்கள் ஆகியும் விடுதலை வழியைக் காணோம். ஒருவேளை அரசியலைப்பற்றி "போகிற போக்கில்" எழுத ஆரம்பித்தால் விடுதலை ஆகுமோ என்ற அவாக்கொண்டு இது முதல் மாதா மாதம் கூடிய வரையில் அரசியலைப்பற்றி எழுதலாம் என்று எண்ணுகிறேன்.

லார்ட் வேவல் சீமைக்குப் பறந்து போயிருக்கிறார். ஜப்பான் யுத்தம்தான் அதற்கு முக்கியக் காரணம் என்று நான் நம்புகிறேன். பிரிட்டனும் அமெரிக்காவும் ஜப்பான் சண்டையில் வெற்றியடைய வேண்டியது ஓர் முக்கிய லக்ஷ்யம். அது சுலபம் இல்லை. மூன்று வருடங்கள் ஏகாக்ரவ்ரதம் கொண்டு கடுமையாய்ப் போர் புரிய வேண்டும். அப்படிப் போர் புரிய இந்தியாவின் பல துறையிலும் மகத்தான ஒத்தாசை இன்றியமையாதது. பர்மா, ஐக்கிய மலேயா நாடுகள், சிங்கப்பூர் இவைகளை வெற்றிகரமாகப் பிடித்து பிரிட்டிஷ் ஆதிக்கியத்திற்கு மறுபடியும் கொண்டுவந்தால்தான் இந்த நாடுகளின் பொருளாதார உதவியைக்கொண்டு மறுபடியும் லண்டனையும் இங்கிலாந்தையும் புதுப்பிக்கலாம். சண்டைக்கு முன்னிருந்த வாழ்வின் திட்டத்திற்குக் குறைவில்லாமல் வாழலாம். இந்த அபார வேலைக்கு இந்தியாவின் எண்பது கோடி கைகளின் உழைப்பும், உதவியும் இனிமேல்தான் அவசியம். இந்த அரசியல் ரகஸ்யத்தை நன்றாய் வற்புறுத்திச் சொல்லுவதற்காகத் தான் சர்ச்சிலிடம் லார்ட் வேவல் சென்றிருக்கிறார் என்று ஊகிக்கலாம்.

* * *

என் கண் முன் :

லார்ட் வேவல் : "பிரதம மந்திரியே, இந்தியா பசுவிலிருந்து கறக்கக்கூடியது எல்லாவற்றையும் இந்தஐந்து வருடத்தில் கறந்து விட்டோம். தானுகவே வைக் கோலைத் தின்று தண்ணீரைக் குடித்து வெகு காலமாக கட்டிப் போட்டிருக்கும் இந்தியா பசுவில் கறக்கக்கூடிய பால் இவ்வளவு தான். மேல்கொண்டு பால் சுறக்க வேண்டுமானுல் பசுவைக் கொஞ்சம் அவிழ்த்துவிட்டு காம்பவுண்டிற்குள் உள்ள பச்சைப் புல்லையாவது காலாற மேயும்படி செய்யவேண்டும். பசுவைக் கொஞ்சம் தட்டிக் கொடுத்து கொட்டிலிலிருந்து தளர்த்தவேண்டும். இதனுல் நமக்கு வரும் லாபத்திற்கும் புண்யத்திற்கும் கணக்கே இல்லை. இந்த முறையில் தான் நமக்கு வெற்றி."

சர்ச்சில் : (சுருட்டின் சுருள் புகையை 'குப்', 'குப்' என்று வேகமாய் விட்டுக் கொண்டு) "கூடுதல் பால் சுரக்க வேறு வழி ஒன்றும் இல்லையா? மிரட்டினுல் போதாதா? சில கவுட்டு பசுக்கள் பாலை அடக்கி வைத்துக் கொள்ளும். மிரட்டிப் பார்ப்போமே"

லார்ட் வேவல் : "பசு உதைத்து துஷ்டத்தனம் செய்தால் மிரட்டலாம். இதுதான் பரம ஸாதுவாக இருக்கிறதே. கன்றுக் குட்டி இல்லாவிட்டாலும், எந்த நேரத்தில் கையாடினுலும் பால் சுரக்கிறதே. வஞ்சனையே இல்லை. தவிர இந்த ஐந்து வருடம் நாம் வைக்கோல் தண்ணீர் கூட சரியாகப் போட முடியாததால் மடியில் பாலும் வற்றிக் கொண்டு வருகிறது. கொஞ்சம் தவிடும் பிண்ணுக்கும் பச்சைப்புல்லும் போட்டுத் தான் அதைக் குஷிப்படுத்தவேண்டும். வெகு காலமாய் அதை கொட்டகைச் சாணியிலேயே கட்டிப் போட்டிருக்கிறோம். கொஞ்சம் அவிழ்த்துவிட்டு அது காலாறினுல் ஒரு பீல் பால் கூட கறக்கும். பால் இல்லாமல் என்ன செய்கிறது? தினசரி மூன்று தடவை காப்பி இல்லாவிட்டால் எந்த வேலைதான் நடக்கும்? அதுவும் யுத்த வேலை?"

சர்ச்சில் கொஞ்சம் தயங்கி பிறகு ஒரு தீர்மானக் குரலுடன், "வாஸ்தவம் தான். நீ சொல்லுவதும் ஒரு சரியான யோசனைதான். அதற்காகத்தான் நான் உன்னிடம் இந்தியா கொட்டிலை ஒப்புவித்தேன். சந்தோஷம். தவிர, நானும் ரூஸ்வல்டும் கொஞ்ச காலம் முந்தி வெள்ளைப் பசுக்களை கட்டிப் போடக்கூடாது ; அது ஒரு பெரிய பாபம் என்று அட்லாண்டிக் சார்டர் மூலம் பிரசாரம் செய்திருக்கிறேன். சிகப்புக் கறுப்புப் பசுக்களுக்கும் அது சரிதானே? ஆனுல் அவிழ்த்து விடாமல் கொஞ்சம் தவிடும் பிண்ணுக்கும்போட்டு 'ஸ்டால் பீடிங்' செய்தால் போதாதா? எதற்கு மேய விடவேணும், தவிடும் பிண்ணுக்கும் போதாதா?"

லார்ட் வேவல்: "பசுக்குப் புல் தானே பிரதானம்! தவிர தற்கால கால் நடை விஞ்ஞானத்தில் பசுக்களைக் கொஞ்சம் காலாற அவிழ்த்துவிட வேண்டியது தான் சரி என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனுல் பயம் ஒன்றும் இல்லை. பசு ஓடிபோய் விடமுடியாது. ஓடவும் தெரியாது. வெகு நாள் பழக்கமும் அப்படியே. தவிர காம்பவுண்ட் சுவர் தான் இருக்கிறதே!"

சர்ச்சில்: "ஓர் புதிய உலக்கை போலொத்த சுருட்டை எடுத்து தீ பற்ற வைத்துக் கொள்ளும் தருணத்திலேயே வேவல் திட்டத்தைத் தலையாட்டி, கை கொட்டி, ஆமோதித்தார். லார்ட் வேவல் புன்சிரிப்புடன் ஆகாயத்தில் பறக்க ஆரம்பித்தார்.

இந்த சம்பாஷணையை மானசிகமாய் கேட்கும் பாக்கியம் எனக்கு ஏற்பட்டது. பலன் என்ன ?

* * *

தலைவர்கள் கூடிய சீக்கிரத்தில் வெளி வருவார்கள். ஒட்டகையின் முதுகில் சுமத்தப்பட்ட அடிமையின் அரசியல் பாரங்களில் சில தள்ளப்படும். பொருளாதார பாரங்கள் ஒன்றும் தள்ளப்பட மாட்டாது. என் வேண்டுகோல், ஒட்டகம் ஏமாந்து போகக்கூடாது என்பது தான். விளம்பரப்படுத்தித் தகரத்தைத்

ப்ரிஸ்கோ நாடகம்

[கா. சி. வேங்கடரமணி]

தமிழ் புது வருஷப் பிறப்பு வெள்ளிக் கிழமை: 13-4-45. அன்றைய தினம் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் காலமானார். பார்த்திப வருஷத்திய முதல் செய்தி இதுதான். ரூஸ்வெல்ட் இந்த நெருக்கடியான சமயத்தில் காலமானதால், அரசியலில் ஏற்படும் பலாபலன்கள் பல. அரசியல் உலகத்திலேயே ஓர் அரசனாக சென்ற பத்து வருஷ காலமாகச் செல்வாக்குடன் ஆண்டு வந்தார். அமெரிக்காவின் மனப்போக்கையும், ஐரோப்பாவின் அரசியல் பொருளாதார சிடுக்குகளையும் தெளிவாய் அறிந்தவர்.

ரூஸ்வெல்ட் காரியத்தில் ஆழ்ந்த சாந்தர். ஆளைக் கவரும் சிரித்த, பரந்த முகம். படபடப்பு இல்லை. காரியத்தைச் சாதிக்கும் வழியில் பிஸ்மார்க்கைப்போல் வீரமும், யூகத்திறமையும் உள்ளவர். அரசியல், பொருளாதாரத் துறையில் மானிட மனப்போக்கை அலசி, தெளிவாய்த் தெரிந்துகொண்டவர். ஐரோப்பாவில் தன் வலது கையையும், சைனாவில்

தட்டித் தள்ளுவார்கள். சத்தம் பலமாகக் கேட்கும். நமது தரப்பிலும் சில கர கோஷங்களும் கேட்கும். தலைவர்கள் விடுதலையைக் கண்டு நாம் களித்து ஏமாந்து போகக்கூடாது. எல்லோரும் ஒன்று சேர்ந்து நின்று சாப்ரூ கமிட்டி முடிவிற்கு வந்திருக்கும் முக்கிய அம்சங்களையாவது பிரிட்டிஷ் சர்க்கார் ஒப்புத்துக்கொண்டு வரத் தயாராகவிருந்தால் மத்திய சர்க்காரில் நாம் பதவி ஒப்புத்துக் கொள்ளலாம் என்று நாம் சேர்ந்து நிற்கவேண்டும். மாகாணத்தையும் மத்திய சர்க்காரையும் நம் தலைவர்கள் ஒப்புவித்துக்கொண்டு நிர்வாகம் செய்யாவிட்டால் ஜப்பான் சண்டையில் வெற்றி பெறுவதற்கு வேண்டிய மனித சகாயமும் த்ரவ்ய சகாயமும் வேண்டிய அளவில் கிடைப்பது கஷ்டம். நம் கைகளையும் கட்டி வாழைத் தோட்டத்தையும் கொத்து என்றால் எப்படிமுடியும்? ஈரம் காயும் முன் தோட்டமோ கொத்தியாகவேண்டும்.

இதுதான் நமக்குத் தகுந்த சமயம். நாம் ஏமாந்து போகக்கூடாது. உறுதியாய்க் கேட்டது கிடைக்கும். சுயேச்சை பெற, ஐக்கியம் அடைய, நமது சரித்திரத்தில் இது ஓர் முக்கியமான சமயம் என்று எனக்குத் தோன்றுகிறது. நமது அரசியல் தலைவர்கள் இதை கைவிடக் கூடாது. நாம் ஒற்றுமையுடன் ஒன்று சேர்ந்து கேட்கும் அரசியல் திட்டத்தைச் சர்ச்சில் துரைகூட ஒப்புத்துக் கொண்டாக வேண்டும். வெற்றிக்கு நம் ஐக்கிய உழைப்பு மிக்க அவசியம்.

* * *

நிர்வாக சபையில் பதவி வகிப்பதால் பக்தியுடன் செய்யும் நிர்மாண வேலைக்குக் குறைவு ஒன்றும் ஏற்படாது. இரண்டிற்கும் பரஸ்பரம் விரோதம் இல்லை. பதவி வகிப்போர் சரியான நபராக இருந்தால் அவர்கள் நிர்மாண வேலையை, படுகையில் வளரும் வாழையை ஆறு ஊட்டுவதுபோல் ஊட்டி வளர்க்கலாம். நிர்மாண வேலைதான் ஜனங்களுக்குப் புத்துயிர் அளிக்க அவசியம். நாம் இதை மறந்துவிடக் கூடாது. வாழ்வுக்கு இரண்டும் அன்னம் வஸ்திரம் போல். நிர்மாணவேலைதான் அன்னம். பதவி வஸ்திரம். தேசிய சர்க்கார் வந்தாலும், ஸ்வய திட்டத்திலேயே சர்க்கார் உதவி அன்னியில் எந்த தேசத்தில் நிர்மாண வேலை நடக்கிறதோ, அந்த நாட்டில்தான் செல்வமும், செழிப்பும், மேன்மையும், வாழ்வில் சுகமும் செழித்தோங்கும்.

—மணி

தன் இடது கையையும் உல்லாசமாய்ப் போட்டுக் குலுக்கிக்கொண்டு,ரூஸ்வெல்ட் சென்ற பத்து வருடங்களாக உலக அரசியலையே அடக்கி ஆண்டவர். மனம் போல் அரசியல் மண்ணைப் பிசைந்து உருவாக்கக் கூடியவர். அரசியல் பொருளாதாரத் துறையில் பிள்ளையார் பிடித்தால், சில சமயங்களில் அது குரங்காக முடியும். அந்தக் குரங்கையும்கூட கோலாட்டிச் சரி செய்யக்கூடிய மன்னர் ரூஸ்வெல்ட். பார்த்தால் பசு பாய்ந்தால் புலி. மார்ல்பரோ வீர வம்சத்தில் பிறந்த பிரதம மந்திரி சர்ச்சில்கூட ரூஸ்வெல்டிடம் தன் வாலைச் சுருட்டி வைத்துக் கொண்டு மரியாதையாய், பவ்யமாய் நடந்துகொண்டு வந்தார். "லீஸ் அண்ட் லெண்ட" வேண்டுமே - யுத்த நெருக்கடியில்.

ஆங்கில பாஷை சிமிட்டியைப்போல் ஈரப்பசுக்கு இருக்குமிடமெல்லாம் தானகவே ஒட்டிக்கொள்ளும். அன்பு வியர்வை வியர்க்கும்! அப்படியே, பிரதம மந்திரி சர்ச்சில் ரூஸ்வெல்டிடம் ஒட்டிக்கொண்டு தான் விட்டார். லட்சுமணன் ராமரைத் தொடர்ந்ததுபோல், ரூஸ்வெல்ட் இழுத்த இழுப்புக்கு வந்தார். பல குலம், பல ஜாதி சேர்ந்து அமைக்கப்பட்ட அமெரிக்காவும், பிரிட்டனும் இப்படி ஒன்று சேர முக்கியக் காரணம் அவர்களின் தாய் பாஷை ஆங்கிலம்தான். இந்தப் பாஷை காரணமாய்த்தான் இந்தியாவும் பிரிட்டனேடு ஒட்டிக்கொள்கிறது போல்!— மொகாலே போட்ட கல்லைச் சிமிட்டு!

ஆங்கில பாஷையின் மகிமையே மகிமை! பிறந்த இடத்தில் வேற்றுமையை மாற்றி ஒற்றுமை; ஒண்டிய இடத்தில் ஒற்றுமையை மாற்றும் வேற்றுமை—இந்தியாவில்.

2

அமெரிக்காவில் லட்சுமி கடாக்ஷத்தையோ,ஸரஸ்வதி கடாக்ஷத்தையோ, அரசியல் சக்தியையோ பெற்றவர்கள், தங்கள் வாழ்வில் விநய சம்பத்தையும்கூட ஒட்டி, தங்கள் லட்சியங்களையும் கைவிடாமல் நடத்தி வருவதால், அவர்களை எற்றபடி எட்டாத் தொலையிலிருக்கும் நாம் நிர்ணயிக்கிறது இல்லை. வேறுபாடான மனே பாவங்கள் உள்ள சொந்த அல்லது அன்னிய தலைவர்களையும், சமூக கூட்டங்களையும் ஒன்று சேர்த்து அடக்கி ஆண்டு விரட்டி ஓட்டி தான் எண்ணிய காரியத்தில் வெற்றி பெற வழி தெரிந்து சாதிக்கக்கூடிய சக்தி வாய்ந்தவர் ரூஸ்வல்ட். அவர் தலைமை யில்லாவிட்டால் அமெரிக்கா இவ்வளவு தூரம் இந்த யுத்தத்தில் ஈடு கொடுக்காது. நேச நாடு இந்த பூர்ண வெற்றி பெறுது. அவர் நயத்துடன் கார்யத்திலே கண்ணுள்ள தீர்க்கதர்சி.

இவர் மறைவால் பொதுப்பட இந்தியாவுக்கும், உலகத்திற்கும் ஒரு பெரும் நஷ்டம்தான். பிரிட்டிஷ் அரசியல் வாழ்வில் சில முக்கிய மாறுதல்களுக்கு இடம் கொடுக்கும். தற்காலம் தன் மனேபாவங்களை இன்னம் தங்கு தடையன்னியில் அமுலுக்குக் கொண்டுவர பிரதம மந்திரி சர்ச்சிலுக்கு இதனால் பல வசதிகள் ஏற்பட்டாலும், அதை அவர் இந்தியா சம்பந்தப்பட்ட வரையில்தான் முழுவதும் செலுத்தலாம். ரூஸ்வெல்ட்டுக்கும் சர்ச்சிலுக்கும் சில அரசியல் ஏகாதிபத்யக் கொள்கைகளில் ஓர் ஒற்றுமைப்பட்ட மனது. பிரிட்டனும் அமெரிக்காவும் ஒத்துழைத்தால் பரஸ்பரம் க்ஷேமம் இரண்டு பேருக்கும் உண்டு. அதுமாத்திரம் அல்ல. உலகத்தையே ஆளலாம். இந்த ருசி கண்ட பூனை உரியைத் தாவாதா? பொதுவில் ரூஸ்வெல்ட் காலமானது, இந்த நெருக்கடியில் சர்ச்சிலுக்கு வலது கையை யிழந்ததுபோலத் தான். அமெரிக்கா மறுபடியும் தீர்மானிக்கலாம். "அகன்றுவிட்ட காலை குறுக்கி கொண்டால்தான் தேவலை; உலகம் எக்கேடு கெட்டுப் போனல் என்ன நம் கார்யத்தை நாம் நன்றாய்ச் செய்தால் போதாதா?"

சிரமசாத்தியமான வேலையாகத் தோன்றும் சுழல் நிறைந்த ஐரோப்பிய அரசியல் பெருங் கடலில், குட்டை போல் எண்ணி அலட்சியமாய் நீஞ்சிய ஜனதிபதி ரூஸ்வெல்ட் காலமாய் விட

டார். அந்த ஸ்தானத்தை ஜனாதிபதி ட்ருமன் ரூஸ்வெல்ட் நோக்கத்தோடே உண்மையில் வகிப்பரா என்பதுதான் முக்கிய கேள்வி. வெண்டல் வெல்கியா யிருந்தால் நிச்சயம் இன்னம் மேற்கொண்டு உயர்தரமாக வகிப்பார் என்று நான் உறுதிமொழி கூறுவேன்.

3

தாரண வருஷத்தில் டம்பர்டன் ஒக்ஸ் நாடகம், பொம்மலாட்டம் மிக்க விளம்பரப் பெருமையுடன் நடந்தது. பார்த்திப வருஷத்தில் ப்ரிஸ்கோ நாடகம் நடக்கப் போகிறது. அதற்குச் சூத்திரதாரனை ரூஸ்வெல்ட் காலமானாலும் அது நடக்கும் என்று தெரிகிறது. இது பொம்மலாட்டம் அல்லவாம். உண்மையில் முண்டாசு கட்டின வீரர்கள் (போர்வீரர்கள் அல்ல ; அரசியல் வாய்ப்பந்தல் அழகாய்ப் போடும் வீரர்கள்) எல்லோரும் ஒன்று சேர்ந்து பேசி, உலகத்திலே உலக சமாதானம் நிலவும்படி திட்டம் போடப் போகிறார்களாம். உலக பந்தோபஸ்து சபை நிர்ணயம் செய்யப் போகிறார்களாம். ஆனால் அவரவர்கள் கையில் அகப்பட்ட பண்டத்தை மாத்திரம் பிறருக்குக்கொடுக்கமாட்டார்களாம். குரங்குப் பிடி. "என் கையில் கிட்டியது எனக்குதான்" என்ற கோலாட்டத்தை அடிக்கப் போகிறார்களாம். கரையான் அரித்து மடிச்சுபோன பழய கால்களையே வைத்துக்கொண்டு போட்ட புதுப்பந்தல் நீடித்து நிற்குமா? ஏன் வீண் சிரமம்? தியாக மன்னியில் சமாதனம் என்ற புதுப் பிறப்பு உலகில் உண்டா?

இந்தத்தியாகத்திற்குப் பிறந்த நாடு நம் நாடே. இந்தியாவுக்கு உண்மையான ஸ்வராஜ்யம் வந்தால்தான், உலகத்தில் சமாதானம் நிலவும். 40 கோடி ஜனங்கள் கோழைப்பட்டு, பயத்தில் கட்டுப்பட்டு, தாழ்மையான வாழ்வில் கஷ்டப்பட்டால், உலகத்திற்கு க்ஷேமம் ஏது? முன்னேற்றம் ஏது? நம்முடைய தொண்டால் வீரத்தைப்போற்றி,செயலை ஊட்டி புத்துயிர் உண்டாக்கி, அதன்மூலம் பெற்ற பலத்தால், சுயநலம் பாராட்டாத எந்நாளும் நிலைபெறும் ஒரு சமாதானத் திட்டத்தை உலகத்திற்குப் போடவேண்டும். நம்முடைய பழமையான நாகரீக கொள்கையின்படி தினசரி வாழ்வை அளந்து வகுத்துத் திட்டம் போட்டு, எதையும் கரையான்போல் அழிக்கும் பேராசையை ஒழித்து, எங்கும் சாந்தம் உலவும்படியான மனப்பான்மையைப் பெருக்கித் திட்டத்தைப் போடவேண்டும்.

தியாகமும், அஹிம்சா தர்மமும், பிறந்து வளர்ந்த நம் நாட்டில்தான் உண்மையான உலக சமாதானக் கூட்டம் கூடவேண்டும். கங்கை நதிக் கரையில், திரிவேணியில். பாக்கியெல்லாம் அரசியல் மேடையில் நடக்கும் வீண் பொம்மலாட்டம்தான்.

ஏவா மக்கள்

[வே. நாராயணன்]

பரம்பரையாக மக்களைப் பெற்று வமிசம் அபிவிருத்தியாவதால் ஒருவகை நித்யத்வம் ஏற்படுகின்றது. தானே பிள்ளையாகின்றான் என்பது வேத வசனம். மனைவியின் வயிற்றிலே தானே கருவுருக்கொண்டு வளர்ந்து குழந்தையாகப் பிறக்கிறான் என்பதாலே மனைவிக்கு வடமொழியிலே 'ஜாயா' என்ற பெயர் எழுந்தது. தமிழர்கள் தங்கள் பௌத்திரர்களுக்குப் பாட்டன் பெயரை இடுவதும் இக் கொள்கையை வற்புறுத்துகிறது. அதாவது, 'மகன் பெயரால் மட்டும் தந்தையினின்று வேறுபடுகிறான். பேரன் பெயராலும் வேறுபடுவதில்லை'- என்பதைப் பேரன் என்ற சொல்லே விளக்குகின்றது. ஐரோப்பிய நாடுகளிலும் தந்தைக்கும் மனைவிக்கும் மகனுக்கும் ஒரே பெயர் இருப்பதும் இவ்வகைக் காரணம்பற்றியே போலும்.

ஆனாலும், எல்லாப் பிள்ளைகளும் பிள்ளைகளாகி விடமாட்டார்கள். அறிவுடைய மக்களே பிள்ளைப்பேறாகக் கொள்ளத் தக்கவர்கள். தீய குணங்கள் ஒன்றும் இல்லாத மகனைப் பெற்றவர்களுக்கு ஏழு ஜன்மத்திலும் யாதொருதீங்கும் நேரிடாது என்பர் திருவள்ளுவர்.

நன் மக்கள் எவ்வாறு இருப்பார்கள்? அவர்களைக் கண்டவர்கள் அனைவரும் அவர்களைப் பெற்றோர் பாக்கியசாலிகள் என்று புகழுமாறு நடந்துகொள்வார்கள். 'என்ன நோன்பு நோற்றாள் கொல்லோ இவனைப்பெற்ற வயிறுடையாள்' என்னும் வார்த்தையை எய்துவிக்கும் மகனே நன்மகன்.

மகன் தந்தை(க்)கு ஆற்றும் உதவி,
'இவன் தந்தை
என் நோற்றான் கொல்?' எனும் சொல்.

ஆணைப் பிறந்தான் என்று கேட்டவுடனே பிள்ளைப் பெற்ற தாய் பிரசவ வேதனையை மறந்துவிடுவாள். உவகையால் அவள் மனம் நிரம்பி யிருக்கும். ஆனாலும்,

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

இவன் அறிவுடையவன், பழிபிறங்காத பண்புடையவன், அறநெறிக்குச் சான்று ஆவதற்குரியவன், சான்றோரால் நிரம்பிய சபையிலே தந்தைக்கு முன் இருக்கும் தகுதியுடையவன். தந்தையினும் அறிவுடையவன் என்றெல்லாம் உலகோரால் போற்றப்பெற்று தாய்க்கும் தந்தைக்கும் பேருவகையைத் தருபவனே நன்மகன் ஆவான்.

மக்களே உண்மையான செல்வம் என்பது திருக்குறள். 'தம் பொருள் என்ப தம் மக்கள்.' அவர்களே பெற்றோர்க்கு இன்பம் பயப்பவர்கள். மக்களின் சிறுகைகள் அளாவிய உண்டி கூழாயினும் அது அமிர்தத்தினும் இனிதாக இருக்கும். அந்த மக்களைப் பெற்றவர்களுக்கு அவர்களுடைய மழலைச் சொல் வீணாநாதத்தினும் இனிதாகத் தோன்றும். அவர்களைத் தழுவிக்கொள்வதைக் காட்டிலும் இனிய சுகம் இல்லை. மக்களுடைய சொல்லும் அவர்கள் உண்ட மிச்சிலும் அவர்களை உச்சி மோந்து அணைத்துக் கொள்வதும் கிடைத்து விட்டால் என்றும் இளமையுடையவர்களாக இருக்கலாம். இவை யெல்லாம் மூப்பு வாராதபடி தடுக்கும் மருந்துகள் என்னலாம். அவர்கள் வளர்ந்து அறிவுடையோராயினும் சரி; அறிவிலிகளாயினும் சரி; பழிகாரர் ஆயினும் சரி, பண்புடையவராயினும் சரி, சான்றோராயினும் சரி, புல்லியராயினும் சரி, இளம் பருவத்திலே தங்களைப் பெற்றெடுத்தவர்களுக்கு உண்டாகும் இன்பத்திலே யாதொரு குறைவும் இல்லை. ஆனால் இவ்வின்பம் மக்கள் ஐந்து வயதாகும் பருவத்தை அடையும்வரை மட்டுமே குறைவற்று இருக்கும்.

ஐந்து வயதாகிவிட்டால், மக்களை அடிமையைப்போல் ஏவிப் பணிகொண்டு திருத்தவேண்டும். குழந்தைகளை ஐந்து வயது நிரம்பும்வரை, தெய்வமாகப்

போற்று ; பிறகு பத்தாண்டுகள் அடிமையாகக் கருது ; மூவைந்து பதினைந்தானால் தோழமை பூண்டு வாழ்'' என்பது வடமொழி மூதுரை. இவ்வாறு மக்கள் பத்து வருஷ காலமேனும் ஏவ ஆட்செய்தால், அந்தக் கைங்கர்யங்களாலே தாய் தந்தையர் உள்ளம் பூரித்து அக மகிழ்வார்கள். அதனால், அவர்கள் கிழத்தனத்தை அடையாதிருப்பார்கள். இந்தக் கருத்துத்தான் 'ஏவா மக்கள் மூவா மருந்து' என்னும் பழமொழியால் விளங்குவதாக முதன் முதலிலே தோன்றும். ஆயினும் சற்று ஊன்றிக் கவனித்தால், இதினும் அரிய கருத்துகள் இவ்வசனத்தில் உள்ளதைக் காணலாம்.

ஏவிப் பணிகொள்ள வேண்டிய அவசியமின்றியே பெற்றோர்க்குரிய கைங்கர்யங்களைச் செய்யும் மக்களை 'ஏவா மக்கள்' என்னலாம். "பெற்றோர்க்கு நன்றி செலுத்தமுடியாது. அவர்களை முதுமைப் பருவத்திலே நீராட்டி நல்லாடை புனைவித்து இன்சொற் கூறி இனிய உணவு அளித்துப் போஷிப்பதே மக்களால் ஆகக்கூடிய காரியம்'' என்று ஸ்ரீராமர் வசிஷ்ட முனிவரிடம் விஞ்ஞாபித்துக் கொள்கிறார். அவ்வாறு தாய் தந்தையரின் கருத்துக்களை அவர்கள் வாய்விட்டுச் சொல்லாதபோதே அறிந்து கொண்டு அக்கருத்துக்களின்படி நடந்து கொண்டால், அவர்கள் என்றும் இளமை மாறாதவர்களாய் இருப்பார்கள் என்று 'ஏவா மக்கள் மூவா மருந்து' என்பதற்குப் பொருள் கூறலாம்.

வேறொரு பொருள் சீவகசிந்தாமணிச் செய்யுள் ஒன்றால் விளக்க முறுகின்றது. அச்செய்யுள் வருமாறு :

ஏவாவிருந்த அடிகள் இவர் வாய்ச்சொல் [மால்
கோவாமணி கொழித்துக் கொண்டாலே போலு
சாவா கிடந்தார் செவிச்சார்த்தின் அப்பொழுதே
மூவா வமராய் முத்தணிந்து தோன்றுவரே.

இச்செய்யுளில், 'ஏவா' 'மூவா' 'சாவா' என்பவை எதுகையாக வருகின்றன. இதன் உரையிலே, 'ஏவா - சொல்லி' என்றும் 'துறந்த மகிழ்ச்சியால் இறைவனைத் துதித்திருந்த அடிகளுடைய பரந்த வாய்ச் சொற்கள்' என்றும் உள்ளது. ஆகையால் 'ஏவா மக்கள்' என்பதற்கு 'துதி செய்யும் மக்கள்' என்று கொள்ளுதல் கூடும். 'மாத்ருதேவோ பவ', 'பித்ருதேவோ பவ' என்று வேதம் உபதேசித்த முறையிலே தாய் தந்தையரை முன்னறி தெய்வமாகக் கொண்டு துதித்து வழிபடும் மக்களைப் பெற்றால், அவர்களைப் பெற்றவர்கள் தெய்வமாகவே ஆய் விடுகிறார்கள் ; மூப்பு என்பது மானிடர்க்கே உரியது. தேவர்கள் எப்பொழுதும் முப்பது வயதானவர்களைப் போலவே யுவர்களாய் இருப்பார்கள். அவர்களைப் போலவே மக்களின் பணிவிடையாலும் அதற்கு அடிப்படையான பூஜைகளாலும் புகழுரைகளாலும் பெற்றோர் மனம் எப்பொழுதும் அமுதமயமாய் இருக்கும். இருக்கவே, என்றும் இளமையோடு வாழ்பவர்கள் ஆவார்கள். அவர்கள் சரீரம் விழுந்து போனாலும் அவர்களுடைய புகழுடம்பு என்றும் அழியாது இவ்வுலகத்திலே நிலவியிருக்கும். மக்களுடைய நற்செயல்களைக் கண்டவர்கள், பரதனை பரத்வாஜ முனிவர் போற்றியது போலவும், இலக்குவனை ஸ்ரீராமன் போற்றியதுபோலவும் போற்றுவர். பரத்வாஜ முனிவர் தமது ஆசிரமத்திற்கு ஸ்ரீராம பாதுகைகளோடு திரும்பி வந்த பரதனைக் கண்டதும் "உன் தந்தை அமரத் தன்மை எய்தி விட்டான். உன் செய்கைகளிலே தசரதனையே காண்கிறேன்'' என்கிறார். பர்ணசாலையை அமைத்து நின்ற தம்பியை நோக்கி இராமபிரானும் "என் தந்தை சாகவில்லை'' என்று இலக்குவனைத் தன் பிதாவைத் தழுவுவதுபோலத் தழுவிக் கொள்கிறான். இவ்வாறு மனத்தாலும் செய்கையாலும் வாக்காலுமே பெற்றோர்களைப் பூஜித்து வழிபடுபவர்களாய் வாழும் மக்களால் அவர்களைப் பெற்ற புண்ணியசாலிகள் தங்கள் வாழ்நாளை மூப்பின்றியே கழித்து, சென்ற பின்பும் இப்பூவுலகிலேயே மூவா மருந்துண்ட அமரர்களைப் போல புகழுடம்போடு நிலைத்திருப்பார்கள் என்பதை விளக்குகின்றது 'ஏவா மக்கள் மூவா மருந்து' என்னும் முதுமொழி.

கும்பகோணம் அத்வைத ஸபா பண்டிதராயிருந்த
காலஞ்சென்ற மஹாமஹோபாத்யாய, சாஸ்திர ரத்னாகர, மஹோபதேசக,
பிரும்மஸ்ரீ - யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் இயற்றிய

ஸம்ஸ்கிருத கீர்த்தனை

[ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல்.]

கீர்த்தனை 15

பிலஹரி ராகம்] [ரூபக தாளம்

ஸாஹித்யம்

பல்லவி

கருணா ஸமுத்ர ராமசந்த்ர

அனுபல்லவி

ஸரஸி ஜாஸனாதி ஸுமனோ வந்தித
பரமாத்புத ஸுக்ருதா ஜாத்மஜ ஹிதபர பாஹிமாம்.

சரணம்

கௌசிகமக பரிபாலன கௌதுக ப்ருதஹ்ருதய
கௌதம சமதன தல்லஜ கார்ஹஸ்த்யதசரண
சங்கரதனு ராரோபண ஸாதித லக்ஷ்மீக
சாஸிதஜ மதக்னிதனு ர்ஜாக்ருத சக்திவிசேஷ
ஸகல யக்ஞகர்ம பலதான சண.

தாத்பர்யம்

பிரும்மா முதலான தேவர்களால் வணங்கப்பட்டவரே, அதி ஆச்சரியத்தைத் தரக்கூடிய புண்ய கர்மாக்களைச்செய்த அஜன் புதல்வன் தசரதனின் ஆவலைத் தம் அவதாரத்தினால் பூர்த்தி செய்தவரே, விச்வாமித்ரரின் யக்ஞ ஸம்ரக்ஷணத்தில் நிரம்பிய குதூஹலமுடையவரே, முனிச்ரேஷ்டரான கௌதமருக்கு (அஹல்யையைப் பரிசுத்தையாகச்செய்து) மறுபடி கிருஹஸ்த நிலையை அளித்த சரணமுடையவரே, சிவதனுஸை ஆரோபணஞ்செய்து (தனக்குரிய) லக்ஷ்மீ தேவியை (திரும்ப) அடைந்தவரே, பணியும்படி செய்யப்பட்ட பரசுராமனின் (வைஷ்ணவ) தனுஸ்ஸை எடுத்து வளைப்பதில் தன் திவ்யசக்தி விசேஷத்தை வெளிப்படுத்தியவரே, எல்லா யக்ஞங்களுக்கும் பலன்களை அளிக்கும் திறமையுடையவரே, கருணைக்கடலே ராமசந்திர, என்னை ரக்ஷியும்.

குறிப்பு—அனுபல்லவியில் ஸாஹித்யம் சிறிது மாற்றப்பட்டிருக்கிறது.—ய. ம.

பல்லவி

(1) மக பா தா ஸ்ா ஸநிநித ஸா
கரு ணா ஸஅ முஉ உஉஉஉத் ராஆ

ஸா ஸநிதா பா தப மக கரி
ரா அஅஅ மஅ சங்ங் ங்ங் த்ரஅ

(2) கக பா தா ரீ ஸநிதா ஸா
கரு ணா ஸஅ முஉ உஉஉத் ராஆ

நீஸநி தாநித பா தப மக கரி
ராஅஅஆஅஅ மஅ சங்ங் ங்ங் த்ரஅ

(3) ஷ ஷ
கரு ணா ஸஅ மு த்ர

ஸாஅரி நித பா நிததப பமமக கரி
ராஅ அஅ மஅ சங்ங்ங் ங்ங்ங் த்ரஅ

அநுபல்லவி

(1) தத தா தா தப தாஅநிதாஅநி பா
ஸா ஸிஇ ஜா ஸஅ நஅ அஅ திஇ

பப மா மககா பா ஆ பா
ஸா மனே வங்ங் திஇ ஈ தஅ

(2) தத தா தா பதநித பாஅத நிதாநி பா
ஸா ஸிஇ ஜா ஸஅஅஅ நஅ அஆ திஇ

பபாஅதபமமா மககா பா ஆ பா
ஸாமஅ னேஐஐ வங்ங் திஇ இஇ தஅ

(3) ஷ தரி ஸ்ா ஸா
ஸா ஸி ஜா ஸஅ நா திஇ

பத பா மக ரிக பா பா
ஸாமனேவஅங் திஇ இஇ தஅ

(4) ஷ தஸ்ரீ ஸ்ா ஸா
ஸாஸி ஜா ஸஅஅ நா திஇ

ஷ ஷ
ஸாம னே வங் தி த

(5) ஷ பாதப தாஅநி தாஅநி பா
ஸாஸி ஜா ஸஅஅ நஅஅஅ திஇ

பதபா மக ரிக பா பா
ஸாமனே வங் திஇ இஇ தஅ

(a) மகபா தத ஸஸ தா தா
கவிதா மித ஸ்க்ருதா ஜா

ஸா ஆ ஆ ஸா ஆ ஆ
ரீ ஈ ஈ ஈ ஈ ஈ

(b) ஷி ஷி
கலிதா மித ஸுக்ருதா ஜா

பதஸா ஸநிநிதி பா தாதப பமமா மககரி
இஇஈ இஇஇஇ ஈ ஈஇஇ இஇஈ இஇஇஇ

(c) நீஸநி தாநித பா ஷி
ஈஇஇ ஈஇஇ ஈ ஷி

(d) மகபா தத ஸஸ தா தா
கலிதா மித ஸுக்ரு தா ஜா

கஸ ரிஸ ஸஸ ஸா ஸநிநித பப
தமஜ ஹித பா பா அஅஅஅ ஹிமாம் கருண

சரணம்

(1) நீதப மக பாதப நீதப
கௌசிக மக பரிஇ பாலன

பா மக ரிக பக பாஆ
கௌதுக ப்ருத ஹ்ருத யஅஅஅ

நீ தப கப தப நீதப
கௌதம சம தன தல்லஜ

பா மக ரிக பக பாஆ
கார் ஹஅஸ் த்யத சர ணஅஆ

(2) கா பத ஸத ஸா தா தத
சஅங் கர தனு ராரோ பண

ரீஸ்ஸ தா ரீ ஸா ஆ
ஸாதித லஅ க்ஷ்மீ கஅஆ

ஸாநிநி நிநி நீஇத பபபா
சாஸித ஜம தஅக் னிதனுஉர்

பதநிதபம கரிக ககபா பாஅ
ஜாஅஅஅக்ருஉ தசஅக் திவிசே ஷஅ

ஸ்ஸ்ரி க்ஸ்ரி ஸ்ா ஸ்ஸ் ஸ்ா
ஸகல யஅக்ஞ் கஅர் மப லஅ

நீஸநி தாநித பா தாதப பமமா மககரி
தாஅஅ ஆஅஅ னஅ சஅஅ அஅஅ ணஅஅஅ கருண.

விளையாட்டின் விபரீதம்

[எஸ். அலமேலு]

"ஏன்னு! நான் செத்துப் போனல் நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்று கல்யாணி தன் கணவன் பாஸ்கரனை வினவினுள்.

"இது ஒரு கேள்வியா? ஏன்! நீ செத்துப் போனல் நான் கட்டாயம் அழுவேனே?" என்றுன் பாஸ்கரன் குறும்பாக.

"செத்த வீட்டில் அழுவதென்பது தான் வழக்கமாயிற்றே. நான் அதைக் கேட்கவில்லை. நான் செத்தால் நீங்கள் வேறு கலியாணம் செய்துகொள்வீர்களா, என்பதுதான் என் கேள்வி" என்றுள் கல்யாணி.

"அதிருக்கட்டும், கல்யாணி! நான் செத்துப் போனல் நீ என்ன செய்வாய்! அதை முதலில் சொல். படித்துவிட்டு உத்யோகத்திற்கு போவாயா? அல்லது மன்னியிடமோ, ஓர்ப்படியிடமோ பயந்துக்கொண்டே காலத்தைக்கடத்துவாயா, எப்படி?" என்றுன்.

"சிவ சிவா! இதென்ன கன்றுவிப் பேச்சு. அப்படி நேர்ந்தால் அந்த நிமிஷமே என் பிராணனும் போய்விடும்" என்று உணர்ச்சி மேலிட்ட குரலில் கல்யாணி சொன்னுள்.

"சரிதான்! படுத்துக் கொள்ளப் போ. இதற்காக இப்பொழுதேபிடித்து விசாரப்படுவானேன்? இன்னும் முப்பது வருஷங்களுக்குப் பிறகு இதைப் பற்றி யோஜிக்கலாம்" என்றுன்.

இந்த தம்பதிகளுக்கு இரண்டு வருஷங்களுக்கு முன்புதான் விவாகம் நடந்தது. விவாகத்திற்கு முன்பே பாஸ்கரனுக்கு பெங்களூரில் உத்யோகமாயிருந்தபடியால், கலியாணமான உடனேயே தனிச் சம்சாரம் ஆரம்பித்துவிட்டிருந்தான். அவர்களுடன் கூட வந்து வசிக்க பாஸ்கரனின் பெற்றோர்களுக்கோ இதர உறவினர்களுக்கோ சௌகரியமில்லாததால், நம் இளம் தம்பதிகள் வெகு அன்யோனிய பாவத்துடன் சம்சாரம் செய்து வந்தார்கள். இளம் தம்பதிகளின் விளையாட்டுக்குக் கேட்க வேண்டுமா? தோன்றியதைப் பேசுவது, நினைத்ததைச் செய்வது இந்த மாதிரி களியாட்டத்திலேயே அவர்கள் வாழ்க்கைப் படகு இரண்டு வருஷங்கள் நடந்தது. இப்படியே அநேக வருஷங்கள் தாங்கள் சந்தோஷப்படப்போவதாய் எண்ணி இவர்கள் பலவித மனக்கோட்டைகள் கட்டினுர்கள். நாம் ஒன்று நினைப்பதும் அதைத் தெய்வம் வேறுவிதமாய் நடத்தி வைப்பதும்தான் உலக வழக்கமாயிருக்கிறதே! ஆனுலும் கூட நம் இளம் தம்பதிகள், நான் ஆரம்பத்தில் சொன்னதைப்போல், வேடிக்கைத் தனத்தில் பேசினதே இவ்வளவு சீக்கிரத்தில் வினையாக முடியுமென்பதைச் சொப்பனத்தில்கூட யாரும் எதிர்பார்க்க முடியாது.

பாஸ்கரன் 'க்ரிஸ்மஸ்' லீவிற்காக மதராஸிற்குத் தன் நண்பன் வீட்டிற்குப் போனுன். இந்த நாளில் இச் சோல்ஜர்களின் கூட்டத்தில் கல்யாணியை ரயிலில் அழைத்துப் போக அவனுக்குப் பயமாயிருந்ததால், அவளைத் தகுந்த துணையுடன் பெங்களூரிலேயே விட்டுவிட்டு, தான் மட்டும் சென்னை வந்தான். அவன் சென்னைக்கு வந்த மறுநாள் மௌண்ட் ரோடில் உலாவிக்கொண்டிருக்கையில் அங்குள்ள பெரிய போஸ்டாபீஸ் அவன் கண்களில் தென்பட்டதும் அவனையு மறியாமல் அவனுக்கு ஓர் எண்ணம் உதித்தது. சிறிதுகூட யோஜனை செய்யாமல் அந்த 'போஸ்டாபீஸ்' உள்ளே சென்று, தன் நண்பனின் பெயரில் தன் மனைவிக்கு ஒரு தந்தியடித்தான். "இன்று காலை பஸ்ஸில் எதேச்சையாய் அறைப்பட்டு உடனே பாஸ்கரன் இறந்துவிட்டான்" என்பது தான் அத் தந்தி. ஆனுல் அவன் அவசரத்தில் நண்பனின் பெயருக்குப் பதில் தன் பெயரிலேயே தந்தி எழுதியிருந்தான். இதை அவன் கவனிக்கவில்லை.

அன்று சாயந்திரம் ஏழு மணிக்குக் கல்யாணி சுவாமி விளக்கை ஏற்றிவிட்டு வழக்கம்போல் வீணை வாசிக்க ஆரம்பித்துக் கம்பீரமான கல்யாணி ராகத்தை ஆலாபனம் செய்துவிட்டு, “ நீ தாலானு தாலுடனி ” என்னும் தியாகையர் அவர்களின் கீர்த்தனத்தை ஆரம்பித்துப் பல்லவியை முடித்தாள். அதற்குள் தந்தி ஸேவகன் கூப்பிட்டான். தந்தியைப் படித்துப் பார்த்த கல்யாணிக்குத் தன் கணவனின் குறும்பையும் விளையாட்டையும் பற்றிச் சிரிப்பே வந்தது. ஏனெனில் பாஸ்கரன் என்ற தன் கணவனின் பெயர்கொண்ட நண்பர்களோ ஸ்நேகிதர்களோ சென்னையில் இல்லை என்பதுதான் அவளுக்கு நிச்சயமாய் தெரியுமே! ஆகவே தன் கணவனே தமாஷுக்காகத்தான் இறந்துவிட்டதாய் தந்தி யனுப்பியிருப்பதை நினைக்க அவளுக்குச் சிரிப்பு வருவதில் ஆச்சரியமென்ன ?

பாஸ்கரனுக்கோ தந்தி யனுப்பிய பிறகுதான், தான் அப்படிச் செய்தது பிசகென்றும், பாவம்! கல்யாணி தந்தியைக் கண்டு எப்படி மனம் துடிப்பாளோ, அன்று சொன்னமாதிரி ஒரு வேளை உண்மையாகவே, என் மரணத்தைக் கேட்டவுடன் அவளுக்கும் உயிர் போய் விட்டால்? என்று நினைக்கையில் அவனுக்கு மனம் ஒரு நிலையில்லாமல் எண்ணுதெல்லாம் எண்ணித் தவிக்கிறான். அன்றிரவு அவனுக்கு நித்திரையே கிடையாது. ஏதேதோ சாக்குப் போக்குகள் சொல்லி மறுநாள் மத்தியான ‘எக்ஸ்ப்ரஸ்’ வண்டியிலேயே பெங்களூருக்குப் புறப்பட்டான். நண்பனுக்கோ பாஸ்கரன் ‘க்ரிஸ்மஸ்’ பத்து நாளும் தன்னுடனிருக்கப் போவதாய்ச் சொல்லி இப்பொழுது மூன்றும் நாளே புறப்பட்ட மர்மம் புரியவில்லை.

“ ஈச்வரா ! என்னைச் சோதிக்காதே ! என் விளையாட்டுத் தந்தியை என் கண்மணிக்கு யமனுக்கி விடாதே ! இந்த தரம் என்னைக் காப்பாற்று ! இனிமேல் இந்த ஜன்மத்திலில்லை, இன்னும் ஏழேழு ஜன்மத்திலும்கூட நான் இந்த மாதிரி அசட்டு விளையாட்டு விளையாட மாட்டேன். இது சத்தியம் ” என்றெல்லாம் கடவுளை மனதில் வேண்டினன். அந்த க்ஷணமே கல்யாணியைக் காண அவன் மனம் துடியாய்த் துடித்தது. இந்தப் பாழும் ரயில் ஏன் இப்படி ஊருகிறது? சீக்கிரம் என்னை என் கல்யாணியிடம் சேர்த்துவிட்டால்தான் என்ன, குடியா முழுகிப் போய்விடும்? இதற்கு நான் சீக்கிரம் என் கண்மணியைக்கண்டுவிடப் போகிறேனே என்கிற வயிற்றெரிச்சற் போலிருக்கிறது. அதனல்தான் இப்படி ஆடி வழிகிறது. இல்லாவிட்டால் வேகமாய் ஓடாதா என்ன? என்றெல்லாம் அர்த்தமில்லாமல் ரயில்மீது கோபங் கொள்கிறன் பாஸ்கரன்.

ரயில் சரியான காலத்திற்கே பெங்களூர் வந்து சேர்ந்தது. இவன் கூட்டத்தை நெருக்கித் தள்ளிக்கொண்டு ரயிலிலிருந்து கீழ் இறங்கி ப்ளாட்பாரத்தைக் கடந்து (டிக்கட் கலெக்டரிடம் டிக்கட் கூட கொடுக்காமல், யார் சொல்வதையும் லக்ஷியமும் செய்யாமல்) ஒரு டாக்ஸியை பேசிக்கொண்டு இரவு 9 மணிக்கு வீடு வந்து சேர்ந்தான். வாசல் வராந்தாவில் ஏறினன். ஆனல் என்ன ஏமாற்றம்? இவன் எதிர்பார்த்ததென்ன? அங்கு நடப்பதென்ன? இவன் மனைவி இவனுக்கு ரொம்பவும் பிரியமான “தொரகுனு இடுவண்டி சேவ” என்னும் பிலஹரி ராக கீர்த்தனத்தை வெகு அருமையாக வாசித்துக் கொண்டு இனிமையாகப் பாடிக்கொண்டிருந்தாள். வழக்கமாகக் கல்யாணி இதைப் பாடும்போது இந்தக் கீர்த்தனத்திற்காக அவளுக்கு தன் உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் கொடுத்துவிட விரும்புவதாக சொல்லும் பாஸ்கரனுக்கு, அவளை நல்ல நிலைமையில் காணப் போகிறோமா? என்று தவியாய்த் தவித்து ஆவலுடன் வந்த பாஸ்கரனுக்கு, இன்று அந்தக் கீர்த்தனத்தை இனிமையுடன் பாடக் கேட்டும், அவன் காதுக்கு கர்ண கடூரமாய்க் கேட்டது. ஏன்! நான் நேற்று பஸ்ஸில் அறைபட்டு இறந்த சாமாச்சாரம் கேட்டபின்னும் இவளுக்கு வீணை வாசிக்கத்

தோன்றுகிறதா ? நான் இறந்தால் அந்த நிமிஷமே தன் பிராணனும் போய்விடு மென்று அன்று சொன்னளே! அப்படிப் பிராணன் போகா விட்டாலுங்கூட ஒருத்திக்கு வருத்தமாகவாவது இருக் காதோ ? ஐயோ! உலகமே! எல்லாம் வெறும் 'ஹம்பக்'. அவன் அறைப்பட் டுச் செத்தால் சாகட்டும்! நாம் பாட் டுக்கு அவனுக்கு இஷ்டமான பாட்டையே பாடி ஆனந்தப்படுவோம் என்பதுபோலல்லவா இருக்கிறது இவ ளுடைய செய்கை? ஒருவேளை தந்தி கிடைக்கவில்லையோ? கிடைக்காமலிருக் குமா! இந்த பொம்மனட்டிகளையே நம்பக் கூடாது" என்று பலவாறு பாஸ்கரன் எண்ணினன். அவனுக்குப் பொறுக்க முடியாமல் கோபமும் வருத்தமும் ஏற் பட்டது. அவனை யறியாமல் அவனு டைய கால்கள் பலமாக வாசற் கதவை உதைத்தன.

"யார்!" என்று கேட்டுக்கொண்டே வந்து கதவைத் திறந்தாள் கல்யாணி.

"நீ இன்னும் இருக்கிருயா?" என் னும் கடுமையான குரல் ஒன்று அவன் வாயிலிருந்து வந்தது.

"ஆமாம்! ஏன்? நானிங்கில்லாமல் எங்குப் போவேன்? நீங்கள் ஒரு வாரம் கழித்து வருவதாய்ச் சொல்லிப்போனீர் களே! அதற்குள் ஏன் வந்துவிட்டீர் கள்? உங்கள் நண்பர் அங்கிருக்க வில்லையா? அல்லது போன இடத்தில் உங்களுக்கு உடம்புக்கு ஏதாவது வந்து விட்டதா? என்ன சமாசாரம்?" என்று கவலையுடனும் அன்புடனும் கேட்டாள் கல்யாணி.

பாஸ்கரன் அவள் கேட்ட கேள்வி களுக்குப் பதில் சொல்லாமல் "தந்தி வந் ததா இல்லையா?" என்று ஒரு கேள்வி யைக் கேட்டான்.

"வந்ததே!" என்று சிரித்துக் கொண்டே சொன்னள் கல்யாணி.

இந்த சிரிப்பு எரிகிற புண்ணில் கோலிடுவதாய்த் தோன்றியது பாஸ்கர னுக்கு. "சரி, போ" என்று அவள்மீது சீறினன். அவள் எவ்வளவு சொல்லியும் அன்றிரவு சாப்பிடாமலேயே படுத்துக் கொண்டு விட்டான். கல்யாணிக்கு அவன் அவ்வளவு கோபமாயிருப்பதன் காரணமே புரியவில்லை. இந்தச் சமயத் தில் அவனுடைய தந்தியை அவனிடம் காண்பித்து அவனைப் பரிகசித்து விளை யாட அவளுக்குத் தைரியமே வரவில்லை. திடீரென்று தன்மீது இவ்வளவு கோபம் அவனுக்கு வரக் காரணமென்னவென்று யோஜித்ததில் அவளுக்குத் தலைவலியும் ஜுரமும் வந்துவிட்டது. இதை மறு நாள் காலையில் அறிந்த பாஸ்கரனுக்கு "இவளுக்குத் திடீரென்று நான் திரும்பி வந்ததுபிடிக்கவில்லை.நான் இறந்தசெய்தி இவளுக்குச் சந்தோஷத்தைஅளித்திருக் கிறது. அந்த ஆனந்தத்தை முழுவதும் இவள் அனுபவிப்பதற்குள் நானே உயி ருடன் வந்துவிட்டதானது இவளுக்கு வருத்தமாயிருக்கிறது போலிருக்கிறது. அந்த அதிர்ச்சி தான் இவளுடைய ஜுரத் திற்குக் காரணம்" என்றெல்லாம் தோன்றி ஒரு தப்பு அபிப்பிராயத்தை மனதில் பதியவைத்துக் கொண்டுவிட் டான். எனவே, ஏதோ கடமையை உத்தேசித்து ஒரு டாக்டரை அழைத்து வந்து வைத்தியம் செய்வித்தான். தானே அவளுக்கு ஆகவேண்டிய சிச்ருஷைகளை யெல்லாம் செய்தான். ஆனாலும் அன் பில்லாத வரண்ட இதயத்துடன் செய்தா னதையால், இவன் சிச்ருஷைகள் செய் யச் செய்யக் கல்யாணியின் வியாதியும் அதிகரித்து வந்தது.

அன்று காலையில் ஏதோ கடிதங்களை யெல்லாம் கிளறிக்கொண்டிருந்த பாஸ் கரனுக்கு அகஸ்மாத்தாய் அவன் கல் யாணிக்கு அனுப்பிய தந்தி கிடைத்தது. அதைப்படித்துப்பார்த்த அவனுக்கு அப் பொழுதுதான் தான் தன் பெயரி லேயே தந்தி யனுப்பினது தெரிந்தது. "இதென்ன அநியாயம்! நான் என் கல் யாணியை அவ்வளவு அன்புடன் நடத் திக்கொண்டிருந்தவன், ஏதோ குறும்புக் காக அவளுக்கு ஒரு தந்தி யனுப்பி விட்டு, அதுவும் நான் உத்தேசித்ததற்கு மாருக என் கையெழுத்தும் தந்தியிலே போட்டுவிட்டு, இப்பொழுது அவளை இப் படி ஹிம்ஸிக்கிறேனே! இது என்

விளம்பர யுகம்

[திவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

இந்தக் காலத்தைப் பலர் கலி காலம் என்று கூறுகின்றார்கள். சிலர் கலியுகம் முடிந்துவிட்டது. கிருத யுகம் வந்து நடக்கின்றது என்று கூறுகின்றார்கள். எனக்கு என்னமோ இந்த விஷயத்தில் மிகச் சந்தேகம். அது எப்படியாவது இருக்கட்டும். இக்காலம் விளம்பர யுகம் என்பதைப்பற்றி எனக்கு ஐயமே இல்லை.

நான் இதைப்பற்றி நீண்டதோர் கட்டுரை எழுத வேண்டியது அவச்யம் இல்லை. சென்னையில் உள்ள குட்டிச் சுவர்கள்கூட இந்த விஷயத்தைப்பற்றி மௌனப் பிரசங்கங்களை தினந்தோறும் இடைவிடாமல் அநேக வர்ணமுள்ள மைகளில் வெகு விநோதமான படங்களுடைய உதவியுடன் செய்துகொண்டிருக்கின்றனவே. 'ஒருநாள் விளம்பரங்களைப் பற்றி காளப்பனைக் கேட்கவும்' என்ற விளம்பரத்தைக் கண்டேன். பிறகு தான் விளம்பரத்திற்கும் ஒரு மூலப் பொருளான தெய்வம் உண்டு என்ற தத்துவம் புலப்பட்டது.

நேற்றைய தினம் என்னுடைய நண்பர் நேசன் அவர்கள் ஓர் ஆச்சர்யமான சம்பவத்தைப் பற்றிக் கூறினார். அவர் அரசியல் விஷயங்களிலும் பத்திரிகை உலகத்திலும் மிகுந்த அனுபவசாலி. ஒருநாள் தற்கால அரசியல் நிலையைப் பற்றி ஒரு முக்கியமான தினசரிப் பத்திரிகைக்கு அவர் ஒரு நிருபத்தை எழுதி யனுப்பினார். தற்கால அரசியல் நிலையைப்பற்றி பேசாதவர்கள் எழுதாதவர்களே கிடையாது. வேறு ஒன்றும் பேசவோ எழுதவோ கிடைக்கா விட்டால் அது எப்பொழுதும் காத்திருக்கும். அது எழுத்தாளர்களுக்கும் சொற்

னுடைய முட்டாள்த்தனமே யல்லாமல் வேறு என்ன?" என்றெல்லாம் நினைத்து பாஸ்கரன்உடனே கலியாணியைப்போய் அணைத்துக்கொண்டான். ஆனால் அவளுக்கோ பிரஞ்ஞையேயில்லை. ஏதோ பிதற்றிக்கொண்டிருந்தாள். அவள் விட்டுவிட்டு அலற்றியதிலிருந்து "ஐயோ, எனக்குத் தெரியாமல் நான் உங்களுக்கு என்ன தப்பு செய்திருந்தாலும் அதை என்னிடம் சொல்லி எந்த விதமாக வேணும் என்னைத் தண்டித்தால் நான் சந்தோஷமாயிருப்பேனே. இப்படி நீங்கள் என்னிடம் பேசாமல் பயங்கர மௌனமாயிருப்பதை நான் சகிக்கவே மாட்டேன்" என்று சுய அறிவுடனிருக்கும்பொழுது தன்னிடம் சொன்னதை இப்பொழுது பிதற்றுகிறாள் என்று அறிந்த பாஸ்கரன் வருத்தமும் பச்சாத்தாபமும், அன்பும் கூடிய குரலில் "கண்ணே! கல்யாணி! எங்கே, என்னைப் பார்! எனக்கு உன்மீது ஒரு கோபமும் கிடையாது. நீ எனக்கு ஒரு தவறும் செய்யவில்லை. நான்தான் என்னுடைய படித்த முட்டாள்த்தனத்தினால் உன் மனம் நோவ நடந்துகொண்டுவிட்டேன். இனி சத்தியமாக இம்மாதிரி செய்யவே மாட்டேன்" என்று சொல்லி அவள் அதரங்களை முத்தமிட்டான். ஆனால் கல்யாணிக்கு இதெல்லாம் தெரிந்துகொள்ள சக்தியேது? அன்று சாயங்திரமே இந்த நம்பிக்கையற்ற பாழ் உலகத்தைவிட்டு அவள் உயிர் நீங்கிவிட்டது. பாஸ்கரனுக்கோ தன் அசட்டுச் செய்கையே அவள் மரணத்திற்குக் காரணமென்று தோன்றி அதே மனதில் உறுதியாய்ப் பதிந்தும் விட்டபடியால் மூளை கலங்கிவிட்டது. யாரைப் பார்த்தாலும் "நான் ஒரு கொலைபாதகன். தாலிகட்டிக் காப்பாற்றுகிறேன் என்று ஏற்றுக்கொண்ட மனைவியை கொன்ற காதகன்" என்று சொல்லிக்கொண்டு தெருத்தெருவாய் அலைகிறான்.

பொழிவாளர்களுக்கும் ஒரு காமதேனு வாக விளங்குகின்றது. ஆனால் அதைக் கண்டால் பத்திரிகை ஆசிரியர்களுக்கு மிக அலுப்பு. அதைப்பற்றி தினசரி வாசித்து வாசித்துக் கேட்டுக் கேட்டுப் புளித்துப்போய் விட்டது. ஆகையால் நேசன் அரசியல் நிபுணனானாலும் அவனுடைய கடிதத்தை அந்தப் பத்திராதிபர் கி. கூ. வில் போட்டு விட்டார். கி. கூ. என்ற ஒன்று தெரியுமா? அதற்குக் கிழித்த கடிதக் கூடை என்று பொருள். ஆங்கிலத்தில் அதற்கு ய. ந. என்று திருநாமம். ஆனால் நேசன் அதைக் குறித்து ஏங்கவில்லை. அவர் தேர்ந்த கையல்லவா? அடுத்த நாள் மாலைப் பொழுதில் கடற்கரைக்குச் சென்றார். நானும் தற்செயலாக அங்கே போயிருந்தேன். என்னைக் கண்டவுடன் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றார். "பௌண்டென் பேனா இருக்கின்றதா" என்றார். "இருக்கின்றது" என்றேன். உடனே அவர் என்னைத் தலைவனாகக் கோரிய பிறகு அவருடைய தனிப்பட்ட முறையில் கடற்கரைப் பிரசங்கத்திற்குத் தொடங்கினர். நான் பிரமித்துப் போய்விட்டேன். அவர் மூச்சு விடுவதற்காகப் பேச்சு நின்றவுடன் "கூட்டத்தையே காணவில்லையே. எவரை நினைத்து இந்தச் சொற்பொழிவு?" என்றேன். அவர், "தலைவர் நீங்கள் இருக்கின்றீர்கள். சொற்பொழிவாளர் நான் இருக்கின்றேன்" இந்த அளவற்ற அலைகள் எல்லாம் "சபையோர்களே" என்று சொல்லி நீண்ட சொற்பொழிவைச் செய்து முடித்தார். முடிவில் ஒரு தீர்மானத்தைப் பிரேரேபித்தார். அது முழு மனத்துடன் பின்னுபிப்பிராயமின்றி வெற்றிகரமாக நிறைவேறியது. அவர் முன் கடிதத்தில் எழுதிய விஷயத்தைத்தான் அந்தத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருந்தது. அவர் சொன்னபடி நான் அதை எழுதினேன். அது அந்தப் பிரசித்தமான பத்திரிகைக்கே பெருங் கூட்டத் தீர்மானமாக அனுப்பப்பட்டது. அடுத்த நாள் வெகு வியப்பான விஷயம்! அந்தப் பத்திரிகையில் அந்தத் தீர்மானம் முக்கியமான இடத்தில் கொட்டை கொட்டையான எழுத்தில் பிரசுரப்படுத்தப்பட்டிருந்ததைக் கண்டு பிரமித்துப் போனேன்.

விளம்பரம் என்றால் சாதாரண சம்பவமா? வேலையில்லாத திண்டாட்டத்தில் திண்டாடுகிறவர்கள் வேலைகளைப் பற்றியுள்ள விளம்பரங்களைப் படிக்கப் பத்திரிகையை வாங்க ஓடுகிறார்கள். வேலையைப்பற்றிய விளம்பரங்கள் அபரிமிதம். ஆனாலும் ஏனோ தெரியவில்லை. வேலைகளே உலகத்தில் இல்லை. வேலையின்மை (Unemployment) உலகம் முழுவதும் பரவிவிட்டது என்று கூவி பறை சாற்றுகின்றார்கள். மருந்துகளைப் பற்றியுள்ள விளம்பரங்களுக்கோ கணக்கே இல்லை. ஒவ்வொரு மருந்தும் சஞ்சீவி. ஏகமூலிகாப் பிரயோகம். அத்தகைய அமிருத சஞ்சீவிகள் இருந்தும் பிணிகள் எப்படியோ விருத்தியாகின்றன. பிணிகள் அதிகப்படுவதால் மருத்துவர்கள் அதிகமா, மருத்துவர்கள் அதிகம் ஆனதால் பிணிகள் அதிகமா என்றுதான் நன்கு விளங்கவில்லை. கொஞ்ச காலமாக விவாக விளம்பரங்கள் ஏறிக்கொண்டே போகின்றன. மற்ற எவைகளுக்கு முன்னேற்றம் ஏற்பட்டாலும் ஏற்படா விட்டாலும் அவைகளினுடைய முன்னேற்றத்திற்குக் குறைவேயில்லை. அவைகளை நோக்கும் பொழுது படிப்பும் நடிப்பும் பாட்டும் அழகும் நிறைந்த பெண்களையே இக்காலத்தில் பிரமன் பெரும்பான்மையாகப் படைக்கின்றார் என்று விளங்குகின்றது. அந்த விளம்பரங்களில் யுவர்கள் பெரிய வேலைகளில் இருப்பதாகவே கூறப்படுகின்றது. போர்க் காலத்தில் பெரிய வேலைகள் நாணயத்தைப்போல் மலிந்து கிடப்பதை நாம் ஒருவாறு உணரக் கூடும். ஆனால் இந்த விசேஷம் விவாக விளம்பரங்களைப் பற்றிய வரையில் இப்பொழுது நடைபெறும் உலக மகா யுத்தம் தொடங்குதற்கு முன் காலத்திலேயே தொடங்கிவிட்டது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் தற்

(221-ம் பக்கம் பார்க்க)

கவிஞனின் காதலி

[சுதர்சன்ஜீயின் கதையைத் தழுவி எழுதியது]

["குகப்ரியை"]

1

கவிஞன்

இளமை முதல் நானும் அவனும் ஒன்றாகவேதான் படித்தோம். ஒருவரை விட்டொருவர் ஒரு நிமிஷமும் பிரியமாட்டோம். பள்ளிக்கூடமோ வேறு வேடிக்கையோ விநோதமோ, பந்தாட்டமோ எதுவானாலும் சரி, எங்களிருவரையும் சேர்ந்தேதான் பார்க்கவேண்டும். என்றைக்காவது ஒருநாள் தப்பித் தவறி எங்கேயாவது போய்விட்டால் உடனே, 'அவன் எங்கே?' 'ஏது நீ மட்டும் தனியே வந்துவிட்டாய்?' என்ற கேள்வி எழாமலிராது.

எப். ஏ. பரீட்சை முடிந்த உடனே எங்கள் பாதைகள் பிரிய ஆரம்பித்தன. அவன் கங்காதரன் "வைத்தியக் கல்லூரி"யில் சேர்ந்தான். நான் கலைகளை ஆராய்வதிலும் கவிதைகளைச் சுவைப்பதிலும் ஈடுபடத் தொடங்கினேன். சம்பாதித்துத் தான் ஆகவேணுமென்ற கவலையில்லை. பெரியவர்கள் ஏராளமாய்த் தேடி வைத்திருந்தார்கள். குடும்பம், கவலை,இவைகளெல்லாம் என்னவென்றே தெரியாது. ஆனந்தமாய் இரவும் பகலும் கவிதா ரஸத்திலேயே மூழ்கித் திளைக்கலானேன். பீ. ஏ. பரீட்சையில் இராஜதானிக்கே முதலாவது நான்தான். கேட்பானேன்! இலக்கியத்திற்கு எத்தனை தங்கப் பதக்கங்களுண்டோ எல்லாம் எனக்கே!

ஒவ்வொரு சமயம் சினேகிதர்கள் வந்தால் கூட, ஏன் வந்து தொண தொணக்கிறார்கள் என்று எரிச்சலாய் வரும். அவர்களோ, 'கவிதை வீசை என்ன விலை?' என்று கேட்கக்கூடியவர்கள்; அவர்களோடு மணிக்கணக்காய் வீண்பொழுது போக்குவதென்றால் யாருக்குத் தான் மனம் வரும்.'

நாட்கள் செல்லச் செல்ல நான் கவிதைக்கே அடிமையானேன். அருமையான கவிதைகள் தாமாகவே என் மனதிலே தோன்றின. அந்தப் புது மலர்ச்சியிலே தோன்றிய அற்புதக் கவிதைகளை ஏடுகளில் எழுதி எழுதிக் குவித்துவிடுவேன். கம்பன், காளிதாஸன், வால்மீகி, பாரதி, துளசிதாஸர் முதலியவர்களுடைய அபிப்ராயங்களோடு புதிய கருத்துகளும், புதிய அழகும், புத்தம் புதிய நடையுமாய் வெளிவரும் என் கவிதைகள். நானே படித்துப் படித்துப் பார்த்துப் பெருமை யடைவேன்.

'என் கவிதைகள் பிறரைக் கவருகின்றனவா?' என்று ஆராய்வதிலும் சந்தேகப்படுவதிலும் கொஞ்சம் நேரம் செலவாகும். மறுபடி முயற்சி. முன்னிலும் பன்மடங்கு அழகிய கவிதை ஒன்று தோன்றவேண்டும் என்னும் ஆவலோடு ஓயாமற் சிந்திப்பேன்.

ஆனால், என் கவிதைகள் பத்திரிகைகளில் வெளிவந்தவுடன் விதவிதமான விமர்சனங்கள் கிளம்பும். அப்பொழுது என் பெருமையும் கர்வமும் சற்றே ஒடுங்கும். மறு விநாடி மேன்மேலும் முயற்சி செய்து புகழ் தேடவேண்டும் என்னும் ஆவல் மேலெழும். இப்படி நான் கவிதைக்கே அடிமையானேன்.

சில வருஷங்கள்தான்! அதற்குள் எத்தனை விசித்திரமான மாறுதல்கள். இலக்கிய உலகில் என் பெயர் முன் அணியிலே, ஓர் உயர்ந்த நிலையை அடைந்துவிட்டது. கவிதையில்லாமல் எனக்குச் சுகமில்லை. இதன்பயனாக, நண்பர்களின் கூட்டம் அதிகரிக்க ஆரம்பித்தது. பிறகு கேட்பானேன்? நண்பர்

களுக்கு விருந்து, களியாட்டங்கள், சீட்டுக் கச்சேரி, அரட்டைக் கச்சேரி. இப்பொழுது இந்த ஆடம்பரங்கள் இல்லாமல் இருக்கமுடியவில்லை. முன்போல, கவிதைகள் புனைவதிலே அவ்வளவு வேகமும் உற்சாகமும் இல்லை. முன்பு கலைத் தெய்வத்தை வழிபடுவதிலேயே பொழுதைக் கழித்தேன். அதுவே இன்பமயமாயிருந்தது. ஆனால் இப்பொழுதோ அது வெறும் பொழுது போக்காகவும் உற்சாகமாய்ப் பொழுதைக் கழிப்பதற்குரிய ஒரு கருவியாகவும் தோன்றத் தொடங்கிற்று. இது பிசகென்று ஒரு சிறு குரல் சொல்லும்.

பாவம்! கங்காதரன்! வைத்திய புஸ்தகங்களுக் கிடையே புதையுண்டு கிடந்தான். பரீக்ஷை முடிந்ததும் ஒரு 'டிஸ்பென்ஸரி' ஆரம்பித்தான். பரீட்சை முடிந்து பட்டம் பெற்றபொழுது ஒரே ஒரு முறை அவன் பெயர் பத்திரிகைகளில் வந்திருந்தது. பிறகு ஒருமுறையேனும் அவன் பெயர் வெளிவந்ததில்லை. ஆனால் என் புகழோ தினசரிகளில் பல பக்கங்களை அலங்கரித்தன. "அவன் பெயர் யாருக்குத் தெரியும். எங்கேயாவது நோயாளிகளோடு தானும் ஒரு நோயாளியாய் உழன்று கொண்டிருப்பான்" என்று நினைப்பேன். கர்வம் தலைகொள்ளாது.

* * *

ஒருநாள் ஒரு கடிதம் வந்தது. அதிலே என்கவிதையைப்பற்றி வானளாவப் புகழ்ந்திருந்தது. இது எனக்குப் புதியதன்று. இத்தகைய கடிதங்கள் எத்தனையோ? பார்த்துப் பார்த்து அலுத்துப் போயிருந்தது. ஆனால் இதுவரையில் புருஷர்கள்தான் எழுதுவார்கள். நானும் அலக்ஷியமா யிருந்துவிடுவேன். ஆனால் இதை எழுதியர் ஒரு பெண்மணி. அதைப் புறக்கணிப்பது மரியாதையா? அதிலும் எழுதியவர் சாதாரணமானவரல்ல. மிகவும் பிரசித்தி பெற்ற ஒரு செல்வ வந்தரது மகள் சாவித்திரி என்பவள். சென்ற வருஷம் பீ. ஏ. வகுப்பில் முதன்மையாகத் தேறி யிருந்தாள். அவளைப்பற்றித் தினசரிகளில்கூட வெளிவந்திருந்தாற்போல, கனவுபோல ஒரு ஞாபகம்.

இந்தக் கடிதம் அந்தப் பழைய நிகழ்ச்சிகளை நினைவு மூட்டிற்று. பேனாவை எடுத்துக்கொண்டு பதில் எழுத உட்கார்ந்தேன். கை எழுதிக்கொண்டே இருந்தது. ஒவ்வொரு வார்த்தையையும் நிறுத்தி, நிறுத்தி எடைபோட்டு அழகுள்ள புதிய வார்த்தைகளைத் தேடி அமைத்து ஒரு கடிதம் எழுதி முடித்தேன். ஏற்கெனவே அந்தப் பெண்மணியின் கல்வி யறிவையும், புத்தி சாதுர்யத்தையும் பற்றிக் கேள்விப்பட்டிருந்தேன். என்னுடைய தாழ்மையையும் கூடச் சொல்லிக்கொண்டேன்.

"நீங்கள் என்னை மிகவும் கௌரவித்திருக்கிறீர்கள். அது உங்களது பெருந்தன்மையைக் குறிக்கிறதேயன்றி என்னுடைய கவிதைகளில் நீங்கள் நினைக்கிறபடி அத்தகைய உயர்வு ஒன்றுமேயில்லை. கற்பனையில் ஏதாவது விசேஷமான அழகுதா னிருக்கிறதா? அல்லது சொற்களில்தான் ஏதாவது இனிமையுண்டா? ஓசை நயமுண்டா? சுவைதான் கவிதையின் உயிர். என் கவிதைகளுக்கும் அதற்கும் காத வழி—இத்யாதி, இத்யாதி. சொல்லிக்கொள்ள வேண்டிய அவசியமில்லாவிட்டால், இப்படி எழுதுவது ஒரு நாகரீகம்.

பதில் வந்தது. "நீங்கள் எழுதியிருக்கும் பதிலிலிருந்து, வொர்ட்ஸ்ஓர்த், டென்னிஸன் முதலியவர்களைவிடத் தாங்கள் பன்மடங்கு உயர்ந்தவரென்று சொல்லுகிறது என் நெஞ்சம். தங்களுடைய கவிகளில் இனிமை யில்லை என்று நீங்கள் நினைக்கிறீர்கள். அதைப் பற்றி எனக்கு கவலையே இல்லை. அதை, ஆராய்ச்சிக்காரர்களும், சுவைக்கத் தெரியாமல், அக்கக்காய் பிய்த்து எறியும் விமர்சகர்களும் பார்த்துக்கொள்ளட்டும். அது எப்படி இருந்தாலும் சரி. என்னிடம் அது தனது மந்த்ர சக்தியைக் காட்டிவிட்டது. மணிக் கணக்காய் அந்தக் கவிதையின் பதத்திலே ஈடுபட்டு மெய்ம்மறந்து விடுகிறேன். சாப்பாடு தூக்கம் ஒன்றிலுமே நாட்டமில்லை.

தங்களுடைய பேனாவை முத்தமிட நெஞ்சு கெஞ்சுகிறது."

இந்தக் கடிதம் என்னை என்னமோ செய்தது. கடைசி வாக்கியத்தைப் படித்ததும் நெஞ்சிலே கனல் மூண்டது. 'பேனாவையா? அல்லது பேனாவைப் பிடிக்கும் கையையா?' என்று நானே கேட்டுக்கொண்டேன். அவ்வளவுதான்! உடனே மறு கடிதம். மனதைத் திறந்து வெள்ளையாக எல்லாவற்றையும் எழுதி விட்டேன். 'தெரியாதா? கவிஞன் தங்களுக்குப் பிடித்துவிட்டால் வானளாவப் புகழ்வார்களென்று.' அதே ரீதிதான்.

"இந்த விஷயத்தில் நீங்கள் என்னைத் தோற்கடித்து விட்டீர்கள். நானும் எத்தனையோ கவிதைகளையும், கவிஞர்களையும் பார்த்திருக்கிறேன். அவர்களால் கூட, உங்களைப்போல உட்பொருளையும் கருத்துக்களையும் செம்மையாய் அறிந்து கொள்ள முடியவில்லை. உங்களுடைய அபூர்வமான திறமையை எண்ணஎண்ண, ஆச்சர்ய மிகுதியினால் என் மனம் பூரிக்கிறது. உங்களைப் போன்ற தவப் புதல்வி களை அடைந்த தாய்தந்தையர் போற்றற் குரியவர்கள்." இந்தமாதிரி வர்ணனைகள் தான்.

நானும் நூற்றுக்கணக்கான கதைகள், கட்டுரைகள், கவிதைகள் எல்லாம் படித்திருக்கிறேன். கற்பனை செய்து மிருக்கிறேன். ஆனால் சாவித்ரியின் கடிதத்திலிருந்த அந்த இனிமையை, அந்த ரஸத்தை, வேறொன்றிலும் நான் காணவில்லை. அதையே திரும்பத் திரும்ப எத்தனை முறைதான் படிப்பது? மீண்டும் படிக்கவேண்டுமென்று மனம் துடிதுடிக்கிறது. படிக்கப் படிக்கப் புதுமையாகவேதான் தோன்றுகிறது.

2

சாவித்திரி

"ஆம்! சந்தேகமே இல்லை. அவர் என்னை விரும்புகிறார். இல்லாவிட்டால் உடனே பதில் எழுதுவாரா? கடிதம் சேர்ந்தவுடனேயே பதில் வந்துவிட்டதே! என் கடிதத்தை எதிர் பார்த்துக் கொண்டேதான் இருந்திருப்பார் போலிருக்கிறது. ஆகா! கடிதம் தான் எப்படி இருக்கிறது. அவருடைய கவிதைகளைவிட கடிதம் அற்புதமான வசன கவியாகவல்லவா இருக்கிறது. என்ன சாதுர்யம்! என்ன நயம்! சொல் அடுக்குகளின் அழகுதான் என்ன? படிக்கும்பொழுதே உள்ளத்தில் இன்பப் பெருக்கு. ஆனந்த மிகுதியினால் நெஞ்சு துடிக்கிறது. படத்தை அனுப்புங்கள் என்று கேட்டதற்கு அனுப்பியிருக்கிறேன் என்று எழுதியிருக்கிறார். ஏன் இன்னும் வரவில்லை என்று கவலைப் படுவானேன்? வரும் என்று நினைத்தேன். உடனே வந்துவிட்டது. சரி! நம்முடைய படமும் இதற்குள் சேர்ந்திருக்கலாம்."

"இந்தச் சில நாட்களுக்குத்தான் என்னென்ன எண்ணங்கள். 'கிழவனோ? குமரனோ? ரூபியோ? குரூபியோ........' என்று எத்தனை அலைகள். சே! அப்படி இருக்க முடியாது. அழகன் என்று சொல்ல முடியாவிட்டாலும் குரூபியாயிருக்க முடியாது. அப்படி ஏதாவது குற்றங் குறைகளிருந்தால் பாடல்களிலே கொஞ்சம் சாயலாவது இராதா? சுமாராய் இருக்கலாம் அல்லது நல்ல அழகும் இருக்கலாம் எப்படி நிர்ணயிக்க முடியும்? இப்படி நூற்றுக்கணக்கான சிந்தனைகள்.

"படத்தைப் பிரித்தேன். அவ்வளவுதான். ஆச்சர்ய மிகுதியினால் திகைத்துப் போனேன். அடாடா! என்ன அபூர்வமான செளந்தர்யம்! ராஜ குமாரனைப் போன்ற காம்பீர்யமும் லாவண்யமும்! ஆம்! அரசன்தான்! சந்தேகமென்ன? கவியரசரல்லவா? அதற்குரிய சின்னங்கள் இராதா? பார்வையிலேதான் என்னமோ கன சக்தி? ஏற்கனவே மனம் அமைதியை இழந்து நெடுநாளாயிற்று. எப்பொழுதும் ஏதேதோ அசட்டு, அல்ல, குருட்டு யோசனைகள். இந்தப் படம் அடியோடு என் மனதைக் கொள்ளைகொண்டு விட்டதே! முந்தி என் உயிரை அம்முறுவல் உண்டதே! இனி தூக்கமேது? உறக்கமேது?

"ஆம்! அவருடைய கடைசிக் கவிதையில் இருதயத்தையே திறந்து காண்பித்

திருந்தார். அதன் ஒவ்வொரு அணுவி லும் அசைவிலும் அன்பின் முழு வேகம் குடிகொண்டிருந்தது. இதற்கு முன் எழுதிய சிறு கவிதையில் என்னையே கதாநாயகியாய்க் கற்பித்திருந்தார்.”

எனக்கு ஒரு போலிக் கோபமும் வந் தது. “நீங்கள் என்னைக் களங்கப்படுத்தி விடுகிறீர்கள். ஏன் என்னையே பின்பற் றிக் கவிதைகள் அமைய வேண்டும்? என்று எழுதினேன்.

பதிலில் வேறொன்றும் விவரமாய் எழுதவில்லை. “கவி, தெய்வமே என்று பாவம்! தனிமையினால் நொந்து போன வன்” என்ற கருத்துத்தான் தொனித் தது. விஷயம் விளங்கிவிட்டது. அவர் விவாகமாகாதவர். பிரம்மசாரி. கவனிப் பவர் ஒருவருமில்லை. ஆனால்........என் இவ்வளவு சிரமப்படவேணும்? ஓயாமல் படித்துப் படித்து, சிந்தித்து, உடல் வலிமை குறைந்து உளுத்துப்போகிறது. ஒரு வேளை அப்படித்தானிருக்கும். “படிப்பதையும் எழுதுவதையும் கொஞ் சம் நிறுத்திக்கொண்டு உடம்பைக் கவ னித்துக் கொள்ளுங்கள்” என்று எழுதி னேன்.

சிறுகச் சிறுக அவரைப்பற்றிய தக வல்களை யெல்லாம் விசாரித்துவிட்டேன். மறுபடி ஒரு கடிதம். இதில் கொஞ்சங் கூட ஒளிவு மறைவு ஒன்றுமே கிடை யாது. “தங்களுடைய கடிதங்களினால் முன்பு அமைதி கிடைத்தது. இப்பொ ழுது அவைகளினால் ஒன்றுமே பிரயோ சனமே இல்லை. நேரில் தரிசித்துப் பாதங்களில் வீழ்ந்து அந்த மலரடிகளை முத்தமிட வேணுமென்று நெஞ்சு துடி துடிக்கிறது. தங்கள் சாப்பாட்டு விஷ யங்களை யார் கவனிக்கிறார்கள்? இரவில் அதிக நேரம் விழித்தால் உடல் நலம் கெடும். உடம்பை ஜாக்கிரதையாய்க் கவனித்துக் கொள்ளுங்கள். கடிதம் எழுத மறக்க வேண்டாம்.”

மறு தபாலில் பதில் வந்துவிட்டது. துள்ளிக் குதித்தேன். இதயம் படீர் படீர் என்று அடித்துக்கொள்ள ஆரம் பித்தது. விஷயமென்ன? கவி காதற் பிச்சை கேட்கிறார்! கண்களை மூடிக் கொண்டு எதிர்கால நிகழ்ச்சிகளைக் கற் பனை செய்துகொண்டு ஆனந்த வாரிதி யில் திளைத்துக் கொண்டிருந்தேன்.

“யாரோ வருவதுபோல் காலடி ஓசை. கடிதத்தை முன்றானையினால் மூடி மறைத் துக்கொண்டேன். வந்தது என் தம்பி. கையில் ஒரு “கட்டு” போட்டோக்களு டன் எதிரே நின்றான். விஷயத்தைச் சொல்ல மறந்துவிட்டேனே. அப்பா மிகவும் மும்முரமாய் வரன் தேடிக் கொண்டிருக்கிறார். ‘ஊரிலே ஒரு பணக் கார வீட்டுப் பிள்ளை பாக்கியில்லை. வலை வீசிப் பிடித்துச் சலித்து எடுத்து அனுப் பியிருக்கிறார்’ என்று பிறகுதான் தெரிந் தது.

ஒன்றுமே புரியாதவளாய் “என்னடா இது! என்ன? என்றேன் ஆச்சர்யத் துடன்.

“என்னவா? எல்லாம் நல்லதுதான். இந் தப் படங்கள், இவைகளோடு வைத்திருக் கிற விவரங்கள் எல்லாவற்றையும் பார்” என்று விஷமச் சிரிப்புடன் சொன்னான். அவன் இருக்கும்பொழுதே பார்க்க வேண்டாமென்று அலக்ஷியமாய் மேஜை யின்மேல் எறிந்தேன். அவன் முகத் தைக் கோணி, அழகு காண்பித்துக் கொண்டே வெளியே ஓடினான்.

சற்று நேரம் உட்கார்ந்திருந்தேன். பிறகு எழுந்து கத்தையைப் பிரித்தேன். அதில் இருந்தவைகள் எல்லாம் என்னை மணந்துகொள்ள விரும்பியவர்களுடை யது. மேலெழுந்த வாரியாய்ப் பார்த் தேன். ஒன்று வக்கீல். ஒன்று டாக்டர். ஒன்று பாரிஸ்டர். இப்படி எத்தனையோ விதங்கள். என் இருதயத்தில் ஒருவருக் குத்தானே இடம் உண்டு. அதில்தான் ஏற்கனவே ஒருவர் இடம் பெற்றுவிட் டாரே!

நெடு நேரம் சிந்தனையில் ஆழ்ந்தேன். அப்பாவிடம் என்ன பதில் சொல்லுவது? இந்தப் படங்களைப் பார்க்கவோ அல்லது விவரங்களைப் படிக்கவோ மனம் ஒன்றி னால்தானே? பளிச்சென்று ஒரு யோசனை தோன்றிற்று. எழுந்து பெட்டியைத் திறந்தேன். அவருடைய போட்டோவை

எடுத்தேன். "இதுதான்" என்று அதன் பின்புறம் எழுதி அப்பாவுக்கு அனுப்பினேன்.

அப்பாவுக்குத் தூக்கி வாரிப்போட்டது. நான் ஒரு லக்ஷாதிபதியின் மகனை வரிப்பேனென்று எதிர்பார்த்திருப்பார். நானே கவிஞனைத் தேர்ந்தெடுத்தேன். 'அவர் ஏழையா? பணக்காரரா?' என்பது கூட நிச்சயமாய்த் தெரியாது. என்னை விரும்பிய வரன்களுள் பலர் அவரையே விலைக்கு வாங்கக்கூடிய பெருஞ் செல்வர்கள். ஆனல் என்ன? காதலுக்குக் கண் உண்டா?

அப்பா என் இஷ்டப்படியே நடக்க ஒப்புக்கொண்டார். ஏற்கனவே தாயில்லாப் பெண் என்று அசாத்ய செல்லம். என் படிப்பு, சங்கீதம் இவைகளில் கூசாமல் ஆயிரக்கணக்காய் செலவு செய்திருந்தார். கலியாண சம்பந்தமாய் என் சுயேச்சைப்படி நடக்கலாமென்று சொல்லிவிட்டார். தன் அபிப்ராயத்தைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை.

3

எந்த விஷயத்திற்காகக் கவலைகொண்டிருந்தேனே அதுவே வந்து சேர்ந்தது. அவருடைய நண்பர் ஒருவர் வந்திருந்தார். அவருக்கு அடிக்கடி ஜ்வரம் வருவதாகவும் டாக்டர்கள் T. B. என்று சந்தேகிப்பதாகவும் சொன்னர். அப்பா கவலைப்படத் தொடங்கினர். "இருந்திருந்து ஒரு நோயாளியையா வரிக்க வேண்டும்? இந்தப் பெண்ணுக்கு இப்படிப் புத்தி போயிற்றே!" என்று எண்ணியிருக்கலாம். அவருக்கே வியாதி பிடித்துவிட்டதுபோல் இடிந்து உட்கார்ந்திருந்தார். எப்படியாவது இந்தக் கல்யாணத்தை நிறுத்திவிட வேண்டுமென்று அதற்கான முயற்சிகளில் ஈடுபடத் தொடங்கினர்.

ஆனல் நான் இதைச் சட்டை செய்யவில்லை. உலகத்தாருக்கு எதிரில் விவாகம் நடைபெறவில்லை. 'எப்பொழுது மனம் ஒன்றுபட்டு விட்டதோ, பிறகு சடங்குகள்தானே பாக்கி' என்று நினைத்தேன். நான் அவருக்கே உரியவள். வியாதியாவது, வேறு எந்தச் சக்தியாவது எங்களைப் பிரிக்க முடியுமா? யமனுக்குக்கூட அவ்வளவு துணிவு இருக்காதென்று நிச்சயமாய் நம்பினேன். புராணத்தில் சாவித்ரி சத்யவானை யமனிடமிருந்தே மீட்கவில்லையா? நான் இந்த வியாதியிலிருந்துகூட மீட்க மாட்டேனு? இந்த என் உடலும் அதேமாதிரி பவித்ரமான பாரத பூமியின் மண்ணிலிருந்து தானே உண்டாயிற்று. நானும் ஏன் வெற்றி பெறக் கூடாது?

* * *

சாயங் காலம். அப்பா தன் அறையில் உட்கார்ந்திருந்தார். எனக்குக் கொஞ்சம் கவலையா யிருந்தது. ஒரு நாளும் சாயங்கால வேளைகளில் வீட்டில் தங்கவே மாட்டார். நான்கு மணி அடிக்க வேண்டியதுதான். உடனே தடியைச் சுழற்றிக் கொண்டு கிளம்பி விடுவார். குளிர், வெயில், மழை, பனி எதுவானுலும் சரி. குறித்த நேரத்தில் புறப்பட்டாக வேண்டும். அது அவர் சுபாவம். வழக்கத்திற்கு மாருக அவர் வீட்டிலிருந்தது எனக்கு ஏதோ போலிருந்தது. உள்ளே போனேன்.

"ஏன் அப்பா! கிளப்புக்குப் போகவில்லையா?"

"பதிலே இல்லை"

"ஏன் ஒரு மாதிரியாய் உட்கார்ந்திருக்கிறீர்களே?"

"மாதிரி என்ன, மாதிரி? அதைப் பற்றி உனக்குத்தான் ரொம்ப கவலை?"

நான் மிகவும் தணிந்த குரலில் "உடம்பு சரியாயில்லையா?"

"ஒன்றுமில்லை."

"முன்பு சாப்பிடுவதில் பாதிகூடச் சாப்பிடுவதில்லையே?"

"அது எனக்கும் தெரியும்."

"டாக்டருக்குப் போன் பண்ணட்டுமா?"

"டாக்டரா? யமன்தான் எனக்கு டாக்டர்."

எனக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது. கண்களில் கண்ணீர் துளித்து நின்றது. அப்பா என்னைப் பார்க்காமல் முகத்தைத் திருப்பிக்கொண்டார். ஆனல் அழுகிறேன் என்பதைக் கண்டுகொண்டார்.

மிகவும் மெல்லிய குரலில், "சாவித்திரி! நான் உன்னுடைய பாக்கியத்திற்குத் தான் கவலைப்படுகிறேன். உனக்கென்ன வந்துவிட்டது? நீ ஏன் அழவேண்டும்?" என்றார். அவர் குரலில் அன்பும் பரிவும் தொனித்தது.

நான் அவைகளைச் சட்டை செய்தால் தானே! மிகவும் கொடுமை செய்த வரைப் பார்ப்பதுபோல் அவரை ஏறிட்டுப் பார்த்தேன். மிகவும் துடுக்காய், "நான் ஏன் அழுகிறேனென்று உங்களுக்குத் தெரியாதா? உங்களுடைய ஒவ்வொரு சொல்லும் விஷம் தோய்த்த பாணம்போல் தகிக்கிறது. உங்களுக்கென்ன? கிளப் இருக்கிறது. சிநேகிதர்கள் இருக்கிறார்கள். வேலைகளும் இருக்கின்றன. நீங்கள் வெளியே போகலாம், வரலாம். என் விதியை நினைத்து நான் அழுதுகொண்டிருக்கிறேன்" என்றேன்.

அப்பாவுக்கு என் வார்த்தைகள் எரிச்சலை உண்டு பண்ணியிருக்குமென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. முகத்தைச் சுளித்துக்கொண்டு "என்ன! சாவித்திரி, உனக்குத் துளிகூடப் புத்தியே இல்லையே! கண்ணை மூடிக் கொண்டு கிணற்றில் விழுவதுண்டா? உன்னுடைய சாமர்த்தியத்தினால் வியாதியைக் குணமாக்கிவிட முடியுமா?"

"ஆமாம். சந்தேகமென்ன? நிச்சயமாய்க் குணப்படுத்த முடியும்? அவருக்குத் தனிமையில் உடம்பைக் கவனித்துக் கொள்ள முடியாமலிருக்கலாம். வசதிகளும் இராது. நாள் முழுவதும் எழுதுவதிலும் படிப்பதிலுமே ஈடுபட்டிருப்பார். வேலைக்காரர் கைபார்த்துச் சாப்பாடு. அது உடம்பில் ஒட்டுமா? முகஸ்துதி பேச ஏராளமான மனிதர்கள் இருக்கலாம். அநுதாபத்துடனும், பரிவுடனும் செய்பவர்கள் ஒருவரும் இருக்கமாட்டார்கள். இந்த நிலையில் வியாதி எப்படி குணமாகும்? நான் செய்கிறேனா இல்லையா என்றுதான் பாருங்களேன்."

அப்பாவின் கோபம் கொஞ்சம் தணிந்ததுபோல் தோன்றிற்று. நெடுநேரம் வரையில் இருவரும் ஒன்றுமே பேசாமல் உட்கார்ந்திருந்தோம். அவர் அறையில் குறுக்கும் நெடுக்குமாய் உலவினார், சற்று நேரம். நானும் பேசாமல் உட்கார்ந்திருந்தேன்.

"அதெல்லாம் சரிதான். சொல்வது எளிது, செய்வது அரிது. நீ சொல்லுகிறபடி உன்னால் நடக்கமுடியுமா? உன் குணம் பெற்று வளர்த்த எனக்குத் தெரியாதா? அதுவும் வியாதியுடன் போராடி வெற்றி பெற உன்னால் முடியுமா என்பதுதான் சந்தேகம்" என்று மிகவும் தணிந்த குரலில், அன்பு ததும்பக் கூறினார் அப்பா.

என் முகம் சிவந்தது. சமாளித்துக் கொண்டு, உங்கள் சந்தேகத்திற்குப் பதில் சொல்லுவதைவிட செய்தே காண்பிக்கிறேன்.

அவர் பரிகாசச் சிரிப்புடன் "இவைகளெல்லாம் வீண் வார்த்தைகள். செய்யும்பொழுது எல்லாம் பறந்துவிடும்" என்றார்.

"சிந்தை, சொல், செயல், எல்லாம் ஒன்றிலிருந்து தானே மற்றொன்று. சொல்லாமலே செய்யமுடியுமா? பேச்சிலிருந்து முயற்சி செய்தால் வெற்றி இல்லாமற் போய்விடுமா?

அப்பா உதட்டைப் பிதுக்கியவராய், "அதென்னமோ அம்மா! நீ என்ன செய்வாயோ? அதைப் பிறகல்லவா பார்க்க வேணும்? உன் வயதிலே உன்னைக் காட்டிலும் நூறு மடங்கு பேசினேன். ஆனால் செயலில் வரும்போது—எல்லாம் ஒரே குளறுபடிதான். நீயோ ஒரே பிடிவாதம்பிடிக்கிறாய். மகளே! உன்சமர்த்து! என்ன வேணுமானாலும் செய்துகொள்" என்று சொல்லியவராய் வெகு அலக்ஷியமாய் எழுந்து வெளியே சென்றார்.

நிறைந்த சபையிலே மூக்கறுத்தாற்போல இது என்ன வார்த்தை? நானும் பார்க்கிறேன். நோயாளிகளுக்கு மருந்தைக் காட்டிலும் பணிவிடைகள்தான் முக்யம் என்று யாரோ ஒரு டாக்டர் சொன்ன ஞாபகம். அந்த அளவிலாவது நான் வெற்றிபெற முடியாதா?"

(தொடரும்)

இலக்கிய யாத்திரை

[ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ. & ர. ரங்காச்சாரியார், எம். ஏ.]

வால்மீகி, இளங்கோ அடிகள் இவர்களுடைய வர்ணனைகளின் உயர்வுக்குக் காரணமென்ன? தாங்கள் கண்டு தொட்டு அறிந்து அனுபவித்த பொருள்களை உள்ளபடி அவர்கள் சொல்லுகிறார்கள். உள்ளபடி சொல்லுவதென்றால், ஒன்றுவிடாமல் புகைப்படம் பிடிப்பதன்று. ஆங்காங்கு கூறப்படும் பொருள் பதிந்த ஒரு சிறு விஷயமே (Significant detail) படத்திற்கு உயிர் அளிக்கிறது. 'கவிதையென்றால், முன்னர் கவிகள் பலரும் சொல்லிய விஷயங்களையே கல்வித்திறம் நன்கு புலனாகச் சொல்லுவதுதான்' என்று கொள்ளும் இக்கால அறிஞர்களில் சிலர் 'வால்மீகியின் வாக்கிலே கவிதையே இல்லை' என்று சொல்லவும் முற்பட்டிருக்கின்றனர். இத்தகைய மனோபாவம் பிறநாடுகளிலும் ஒரு காலத்தில் இருந்ததை, ருஷியப் பேரறிஞர் டால்ஸ்டாய் நன்கு கண்டித்திருக்கிறார். வால்மீகி, இளங்கோ அடிகள், இவர்களின் உயிர்ச்சித்திரங்களுடைய தனிப்பெருமை, மற்றக் கவிகளின் வர்ணனைகளோடு ஒத்துப் பார்த்தால்மட்டுமே விளங்கும். கம்பராமாயணத்தின் முதலிற் காணப்படும் நாட்டு நகரவர்ணனைகளை இப்பொழுது நாம் ஆராய்வோம்.

"சூரியகுலத்தில் தோன்றிய பல வேந்தர்களின் நல்லொழுக்கம்போல் ஓட்டத்தை யுடைய சரயு ஆற்றின் நீர்ப்பெருக்கு எல்லா உயிர்க்கும் தாய்ப்பால் போன்றது. அந்நதி, சோலைகள் தோறும், சண்பகக்காடுகள்தோறும், பொய்கைகள் தோறும், புது மணல் தடங்கள்தோறும், குருக்கத்திச்செடிகளை வேலியாகக் கொண்ட கமுகுத் தோட்டங்கள் தோறும், வயல்கள்தோறும், உடல்மிசை உயிரெனக் கரந்துலாவியது. கோசல நாட்டிலே, கரும்பாலைகளினின்று வழிந்தோடிய சாறும், சோலைகளில் உதிர்ந்த பழங்களின் சாறும் வெள்ளமாயோடிக் கடலில் சேர, மீன்களெல்லாம் கள் உண்டு களித்தன.

இன்சொற் கடைசியரின் பரந்துநீண்ட கண், கை, கால், முகம், வாய் இவைகளை ஒக்கும் குவளை தாமரை மலர்களாகிய களைகள் தவிர, வேறு களைகள் கழனிகளில் இல்லை. ஆகையால், கள் வழியும் கடைவாய் உழவர்கள், களைபிடுங்காது உலாவி நிற்கின்றார்கள்.* மகளிரைப் போல நடையிலும் அன்னப்பறவை தன் மழலைப்பிள்ளையை நளினப்பள்ளியில் கிடத்திச் செல்லுகிறது. சேற்றிலே சிக்கிய எருமை தன் கன்றை நினைத்துப் பால் சுரக்க, அது அன்னக் குஞ்சின் வாயிலே விழுகிறது. உண்டு களை தீர்ந்த அந்தக் குழந்தையைப் பச்சைத்தேரை தாலாட்டித் துயிலச் செய்கிறது. வயல்களில் நிற்கும் இன்னும் சில எருமைகள் இவ்விதமே கன்றை நினைந்து சுரந்த பாலினாலே, பயிர்கள் தழைக்கின்றன. தோயும் வெண்தயிரை மத்து ஒலி துள்ளவும், கையிற் பொருந்திய வெண்சங்கு வளைகள் கதறவும், தேய்கின்ற நுண்ணிய இடை சென்று தாழவும், ஆயர் மங்கையர் கைவருந்திக் கடைவார்கள். பூமாலைகள் எங்கும்

---

*இந்த இடங்களில் கம்பர், திருமங்கையாழ்வாரின் பாடல்களைப் பின்பற்றுகிறார். உதாரணமாக :—

" ...நெய்தலோடு
மையிணைந்த குவளைகள்தம் கண்களென்றும்
மலர்க்குமுதம் வாயென்றும் கடைசிமார்கள்
செய்யிணைந்து களைகளையா தேறும் காழிச்
சீராம விண்ணகரே சேர்மினீரே"

(பெரிய திருமொழி-3 பத்து-4)

ஆண்டாளின் சொற்களையும் ஆங்காங்கு காணலாம்.

தேனைச் சொரிகின்றன. மரக்கலங்கள் பொன்னையும் மணியையும் சொரிகின்றன. காற்றுநீர் திவலைகளைச் சொரிகின்றது. பாடல்கள் செவிக்கினிய இசைகளைச் சொரிகின்றன.

அயோத்திநகரை நாம் என்னென்று உரைப்போம்? நிலமகள் முகமோ? திலகமோ? திருமகள் உறையும் மலரோ? ஊழியின் இறுதி உறையுளோ? அதனுடைய பொன்மதில்களின் உயரந் தான் என்னே! சக்கரவாளகிரியைச் சூழ நிற்கும் அலைகடல் போல, இம்மதில்களை ஓர் அகழி சூழ்ந்து நிற்கிறது. அந்நகரத்தில் உள்ள மாளிகைகளில் சில, சிப்பிச் சுண்ணும்பினுல் பூசப்பட்டிருக்கின்றன. அவைகளின் வெண்மைக்கு முன்னே சந்திரமண்டலமும் கரிதெனத் தோன்றுகிறது. ஓங்கி உயர்ந்த வெண்ணிற மாளிகைகள் கடுங்காற்று வீசுவதால், மேலெழுந்த பாற்கடலின் அலைகளை ஒக்கும். வீடுகளெல்லாம் உயர்ந்த பொன்னினுல் அழகாய்ச் சமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் மின்னல் போலவும், தீச்சுடர் போலவும், வெயிற்பிழம்பு போலவும் ஒளி வீசுகின்றன. அவ்வொளி பட்டே தேவருலகம் பொன் உலகாயிற்று. அந்நகரத்து மகளிர் தங்கள் கூந்தலுக்கு ஊட்டிய அகிற்புகை மேகத்தில் படிகின்றது. அதனுல் மேகங்கள் மணங்கமழும் மழையைச் சொரிகின்றன. சிறுவர்கள் யானைகளுடன் விளையாடும்பொழுது அந்த யானைகள் கால்களால் பெரிய பள்ளங்களை உண்டாக்குகின்றன. அப்பள்ளங்களை சிறுவர்களின் மேனிகளிலிருந்து விழும் வாசனைப்பொடிகள் தூர்க்கின்றன.....”

இம்முறையிலே இன்னும் செல்லுகின்றது. கம்பரின் நாட்டு நகர வர்ணனை அவருடைய பாடல்களிலே, வால்மீகி, இளங்கோ அடிகள், இன்னும் மற்ற வடமொழி, தென்மொழிக் கவிகள் சொல்லும் பல விஷயங்களையும் காணலாம். ஆனுல் இப்படி எல்லாம் சேர்ந்தும், ஒரு தனி நாடோ நகரமோ, நம் மனத்திலே எழவில்லை. இது ஏன்? பெருமை கொண்ட ஒருவன், உலகத்தில் பல்வேறு இடங்களில் அழகிலோ, மதிப்பிலோ, உயர்ந்தன என்று பலர் சொல்லக்கேட்டவைகளை எல்லாம் பெயர்த்துக் கொண்டு வந்து தன் வீட்டிலே குப்பையாகக் கொட்டி வைத்திருக்கிறுன். அக்காட்சியைக் காணப் பலரும் வருகின்றனர். ஒரு சாரார், “உலக முழுவதையும் இங்கு காண்கின்றேமே” என்று வியக்கின்றனர். இதற்கு மாருக இன்னும் சிலர், இக்காட்சியைக் கண்டு கண்ணீர் விடுகின்றனர். “அவைகளுக்குரிய இடங்களிலே அழகுபெற அமைந்த பொருள்கள் இப்படியா இங்கு சிதறிக் கிடக்க வேண்டும், பல அற்பப் பொருள்களோடு கூட” என்று அவர்கள் மனம் பதைக்கின்றனர். இதுபோலேதான் கம்பரின் நாட்டு நகர வர்ணனைகளில் தோன்றும் கல்விப் பயிற்சி நல்ல கவிதைப் பண்புக்குப் பதில் ஆகாது. *கம்பரின் உள்ளத்திலேயே ஓர் நாட்டின் உருவம் தனியாக அமையவில்லை. இங்ஙனம் பிறந்த பாடல்கள் படிப்போர்களின் மனத்தில் எவ்வாறு ஒரு தெளிவான உருவை எழுப்பும்? கம்பர் சொல்லும் நாடும் நகரமும், பழைய கோசலமும் அயோத்தியுமல்ல. தன்னுடைய சோழநாட்டைத் தான் சொல்லுகிறுர். ஆனுல் அந்நாட்டின் வளத்தைமட்டும் தெரிவிக்க முயல்கிறுரே ஒழிய, இளங்கோ அடிகள்போல அந்நாட்டின் முழு உருவையும் பலதிறப்பட்ட அம்சங்களைக் கொண்டு சொற்சித்திரமாகக் காட்டினுரில்லை. வளத்தைச் சொல்லும் அழகிய பாடல்களும், மிகைப்படக் கூறுவதால், பயனற்றுப் போகின்றன. ஊரில் நின்றகன்று உள்ளிட, எருமைகள் மழைபோலக் கழனிகளிலே சொரிந்த பாலினுலேயே பயிர்கள் தழைக்

---

*திரு. T. K. சிதம்பரநாத முதலியார் போன்ற ரஸிகர்கள், கம்ப இராமாயணத்தின் முதலிலே காணப்படும் நாட்டு நகரப் பாடல்களில் பலவும் செருகு கவிகள், கம்பன் வாக்கல்ல என்று அபிப்பிராயப்படுவதும், இப்பாடல்களின் கவிதைப் பண்புக்குறைவுக்கு ஒரு சான்றுகும். ஆராய்ச்சி முறையிலே ‘இந்த முடிவு சரியா?’ எனத் தீர்மானிப்பது வேறு விஷயம்.

கின்றன என்று கம்பர் சொல்வதை மேலே குறிப்பிட்டோம். ஆயர்பாடியின் வளத்தைக் கூறும் ஆண்டாளின் வாக்கையும் நோக்குவோம்—“ குடம் நிறைக்கும் வள்ளற் பெரும் பசுக்கள் ”, “ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி மீதளிப்ப, மாற்றாதே பால் சொரியும் ”, “ கனைத்திளங் கற்றெருமை கன்றுக்கிரங்கி, நினைத்து முலைவழியே நின்று பால்சோர, நனைத்து இல்லம் சேறாக்கும் நற்செல்வன் ”— இப்பாடல்களிலே இருக்கும் எளிமையும், உண்மையும், நம் மனத்தில் படிகின்றன. கம்பரின் வெறும் சொற்சாதுரியம் இதை இயற்ற முடியவில்லை. ஆயர்மங்கையரைச் சித்திரிக்கும் கம்பரின் பாட்டையும் மேலே குறித்துள்ளோம். பாட்டு முழுவதையுமே பார்ப்போம் இப்பொழுது:—

“ தோயும் வெண்தயிர் மத்தொலி துள்ளவு(ம்)
மாய வெள்வளை வாய்விட் டரற்றவும்
தேயும் நுண்ணிடை சென்று வணங்கவும்
ஆயர் மங்கையர் அங்கை வருந்துவார். ”

இப்பாட்டிலே, ஓசை நயத்தையும் சொல் எளிமையையும் காண்கிறோம். வளத்திலே விளைந்த வருத்தத்தைக் கவி பொதுப்படவே கூறுவதால் கவிதை அழகு குறைகிறது. தனிச் சித்திரமாக அமையவில்லை. ஓர் இளங்கன்று, ஒரு தவழும் குழந்தை, ஒரு தோழன் அல்லது ஒரு தோழி, இவர்கள் போன்ற பாத்திரங்களின் செயல்களை உள்ளடக்கிய ஒரு காட்சியை மட்டும் சித்தரித்திருந்தால், அக்காட்சி நம்மனத்திலே சொல்லாதனவெல்லாம் சொல்லியிருக்குமே, கூடலூர் கிழாரின் அழியாச் சித்திரம்போலே!—

“முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளையுண் கண்குய்ப்புகை கமழத்
தான்துழந்து அட்ட தீம்புளிப்பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின்மகிழ்ந்தன் றுஒண்ணுதல்முகனே ”

இறுகிய தயிர் பிசைந்த கையைத் தன் ஆடையிலே துடைத்தபடியே கணவனுக்குப் புளிக்குழம்பிட்டு அவன் இனிதென உண்ண, அது கண்டு முறுவலித்து நிற்கும் இளமங்கையின் காட்சியிலே நாம் காணுத வளமும், அன்பும், அழகும் உண்டோ ?

ஆற்றுப்படலத்திலே மேகத்தை வர்ணிக்கிறார் கம்பர் :—

“நீறுஅணிந்த கடவுள் நிறத்த வான்
ஆறுஅணிந்து சென்று ஆர்கலி மேய்ந்து அகில்
சேறுஅணிந்த முலைத்திரு மங்கைதன்
வீறுஅணிந்தவன் மேனியின் மீண்டதே.”

ஆண்டாளின் வாக்கையும் பாருங்கள்:-

“ஆழி மழைக்கண்ணு! ஒன்று நீகைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்து கொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்
ஆழிபோல்மின்னி வலம்புரிபோல் நின்றுஅதிர்ந்
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல் [து
வாழ உலகினில் பெய்திடாய்......”

கம்பர் பாட்டிலே மேகத்தைப்பற்றியோ மழையைப்பற்றியோ ஒரு சித்திரமும் எழவில்லை. முதலில் வெளுப்பாயிருந்த மேகம் பிறகு கறுத்தது என்ற விஷயத்தைத் தவிர வேறு வர்ணனை இல்லை. சிவபிரான், திருமால், இவர்களின் நிறங்களை உவமைகளாகக் கூறி இருப்பதில் ஒரு புதுமை இல்லை. வெறும் சாதுரியமான சொல்தான். இது பக்தியிருந்து எழுந்ததுமன்று. பக்தி யென்பது தெய்வத்தினிடம் வைக்கும் காதல் தான். அக்காதல், எங்கும், எப்பொருளிலும் காதலனின் உருவத்தையே காட்டும். பல்வேறு உருவங்கள் தோன்றினும், ஒன்றோடு ஒன்று அவைகள் பொருந்தியே நிற்கும். இத்தகைய பொருத்தம் - அழகு - ஆண்டாளின் கவியிலே இருக்கிறது. மேகத்தின் வாழ்க்கைச் சரிதம் முழுவதும் அதிலே காண்கிறோம். அச்சித்திரத்திலே அவள் காதலித்த தெய்வத்தின் முழு உருவும் தோன்றுகிறது. கண்ணன் கைச்சார்ங்கம்* உதைத்த சரம்போலே என்று ஓயா மழையை வர்ணித்திருக்கும் பதங்கள்தான் எவ்வளவு அழகு உடையன!

*சார்ங்கம் - வில். வான வில்லையும் இங்கு குறிக்கலாம்.

ஓசையும், இனிமையும் செறிந்த எளிய சொற்களினாலேயே பாட்டு முழுவதும் அமைந்திருக்கிற விசித்திரத்தைத் தான் என்னென்று சொல்லுவது! இதற்கும் மற்றப் பாடல்களுக்கும் உள்ள வேற்றுமை, ஒன்றைக் கேட்டுப் பேசுவதற்கும் கண்டு அனுபவிப்பதற்கும் உள்ள வித்தியாசம்தான். கோவர்த்தன கிரியின் முகட்டிலிருந்து (brow of the hill) மேகங்கள் மழை பொழிவதைப் பெரியாழ்வார் வர்ணிப்பதையும் இங்கு நோக்கத் தகும் :—

"மணிவண்ணன் மலையுமோர் சம்பிரதம்
முடியேறிய மாமுகில் பல்கணங்கள்
முன்நெற்றி நரைத்தனபோல எங்கும்
குடியேறி யிருந்து மழை பொழியும்
கோவர்த்தனமென்னும்கொற்றக்குடையே."

இதிலே உள்ள வர்ணனையில் எத்துணை இயற்கை அழகு பொலிகிறது!

ஆங்கிலக்கவி ஷேக்ஸ்பியர் (Shakespeare) தன்னுடைய "சண்டமாருதம்" (Tempest), "லியர் அரசன்" (King Lear), "பெரிக்ளீஸ்" (Pericles) என்னும் நாடகங்களிலே பாத்திரங்களின் வாயிலாகக் காற்றையும் மழையையும் ஒரு சிறிது வர்ணிக்கிறான். அவ்வர்ணனைகள் பாத்திரங்களின் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் நோக்கத்தோடேயே அமைந்திருப்பனவால் அம்முறையிலே ஒரு தனி அழகு பெறுகின்றன.

"வானோ கொதித்து அழுக்குடன், தார்நாற்றம் வீசும் கீல் (Tar) போன்ற மழையைக் கொட்டும். கடலோ தானும் எழுந்து வானத்தின் கன்னத்திலே தட்டி அதன் நெருப்பை அவிக்கும். இந்தக் கோரக்காட்சியைக் கண்டு அதில் அகப்பட்டுத் தவித்த பிராணிகளுடன் நானும் பரிதவித்தேன். ஐயோ!"

* * *

"காற்றும் மழையும் போரிடும் இந்நள்ளிரவினிலே இளம் குட்டியுடன் கரடி வெளிக்கிளம்பாது உறங்கும். பசி பிடுங்கும். சிங்கமும் ஒட்டிய வயிறுடைய ஓநாயும்கூட, தங்களைப் போர்த்திருக்கும் உரோமத்தை நனையாது வைக்கும். ஆனால் கிழ அரசனோ ஒரு போர்வையுமின்றி நட்ட வெளியிலே அலைகிறான், அந்தோ!"

* * *

ஆற்றில் உள்ள சிறு நீர்வீழ்ச்சிகளைக் குறித்துக் கம்பர் சொல்லுகிறார் :-" அரங்கின் ஆடுவார் சிலம்பின், நின்று நின்று இரங்கு வார் புனல்ச் சரயு". இது வெகு அழகிய இயற்கை வர்ணனையே.

கம்பரின் பாடல்களை நன்று அனுபவிக்க வேண்டுமானால் அவைகளை வாய்விட்டு இசையுடன் பாடவேண்டும் என்று சொல்வது பொருத்த முடையதே. ஆனால், அது எல்லாக் கருவிகளுக்கும் பொதுவான வழியே. வால்மீகி இராமாயண சுலோகங்களை, குசலவர்கள் கானம் தான் செய்தனரன்றோ? ஓசை யின்பத்தை மட்டும் நோக்குவோமானால் பல கவிஞர்களிடமும் அதைக் காணலாம். மேலும் பாடகனின் இசைத் திறத்தாலே எக் கவியையும் அழகுபெறச் சொல்லலாம். இதனாலேதான் கோல்ட்ரிட்ஜ் (Coleridge) என்னும் இலக்கியப் புலவன், "இசைநயம் இலக்கிய ஆராய்ச்சிக்குக் குறுக்கே நிற்கும்" என்றான்.

கம்பரின் வர்ணனைகளிலே ஒரு தெளிவு (concreteness) இல்லை என்றால் அவருடைய முறை மில்டனுடையதைப் போன்றது என்று ஒருவர் சொல்லலாம். ஆனால், மில்டன், சுவர்க்க-நரக-பூதகண வர்ணனைகளை வேண்டுமென்றே தெளிவில்லாமல் செய்திருக்கிறார். அவர், அப்பிராகிருதமான உலகுக்குப் புறம்பான காட்சிகளை, சாதாரண இயற்கைக் காட்சிகளைப்போல் சொல்வது தக்கதன்று என்று கொண்டார். பேருலகை விவரிக்க முற்பட்ட வேதமும், அது "இருளுக் கப்பால் உளது" என்று மட்டுமே கூறி நின்றதன்றோ? மில்டன், கம்பன், இவர்கள்போல் அல்லாது, தாந்தே (Dante) தன் "திவ்ய மங்களம்" காவியத்தில் ஒவ்வொரு காட்சியையும் மிகவும் நுணுக்கமாக வர்ணிக்கிறான் :— "அந்த 'நிம்ராட்' என்னும் அரக்கன் தோற்றத்திலே மிகப் பெரியவனாக இருந்தான். அவனுடைய முகம் ரோமாபுரியி

னுள்ள பீட்டர் (Peter) கோயிலின் கோபுர விமானத்தைப்போல இருந்தது. மற்ற அவயவங்கள் இந்த அளவுக்கு ஒத்து அமைந்திருந்தன. அவனுடைய இடுப்பிலே ஒருவர்மேல் ஒருவராக மூன்றுநெட்டை ஜெர்மானியர்கள் நின்று கொண்டாலும் அவர்களால் அவனுடைய கேசத்தை எட்டிப் பிடிக்க முடியாது....” வெறும் கவிமரபை ஒட்டி, “அவன் தலை விண்ணை முட்டியது. அவன் பாதம் ஆதிசேடன் தலையை உதைத்தது” என்றெல்லாம், தாந்தே சொல்லவில்லை. ஏனெனில், அவர் நோக்கம், தான் சொல்லும் கனவை எல்லோரும் நனவாகவே கொள்ளவேண்டு மென்பது. நுணுக்கமாய் வர்ணித்தும், தெரிந்த பொருள்களை அடிக்கடி உவமைகளாகக் காட்டியும் இந்த நோக்கத்தை நிறைவேற்றுகிறார். ஹோமர் (Homer), டிராய் (Troy) நகரத்தை ஓரிடத்தில் சேர்ந்தாற் போல் வர்ணிக்கவில்லை. ஆனால் ஆங்காங்கு சுருங்கச் சொல்லி, விளங்க வைத்திருக்கிறார் :—“அகன்ற வீதிகள்”, “தலை தூக்கி நிற்கும் மதில்கள்” “கண்ணாடிபோல், பளபளவென்னும் தூண்கள் நிறைந்த அழகிய அரண்மனை”, “அரசிளங் குமரர்கள் தூங்கும் ஐம்பது நெருங்கிய அறைகள். எதிரிலே, மருமகற்காக உன்னதமாய்க் கட்டப்பட்ட, பன்னிரண்டு அறைகள் கொண்ட மாளிகை” என்று அவர் சித்திரம் வரைகிறார். கம்பருடைய நாட்டு நகரக் காட்சிகள், மில்டனுடைய காட்சிகள்போல உலகத்திற்குப் புறம்பானவையல்ல. தாந்தேயினுடையவை போல் கனவுச் சித்திரங்களுமல்ல. ஹோமரின் நாடு நகரம் போன்ற இவ்வுலகக் காட்சிதான். ஆகையால் மில்டனுடைய முறை கம்பருக்கு ஒவ்வாது. தெளிவின்மை இங்கு ஓர் குறையே ஆகும்.

கம்பர், தம்முடைய உவமைகளிலே ஒரு முறையை அடிக்கடி கையாளுகிறார். நாம்காணும் இயற்கைக்காட்சிகளை அருவ (Abstract) உவமைகளைக் கொண்டே விளக்க முயல்கிறார் :—“வெள்ளத்தின் ஓட்டம்”, “செல்லுறு கதியின் செல்லும் வினையெனச் சென்றது”, “பல்பெருஞ் சமயம் சொல்லும் பொருளும்போல் பரந்தது, ஓதிய உடம்பு தோறும் உயிரென உலாவியது”. மதில், “நால்வரைத் தொடர்ந்து பயத்தொடும் பழகி, நுணங்கிய நுவலரும் உணர்வேபோல்” உயர்ந்தது. அகழி, “பொன் விலைமகளிர் மனமெனக் கீழ்போய்ப் புன்கவியெனத் தெளிவின்றி....நன்னெறி விலக்கும் பொறியென எறியும் காத்தது”.

இம்முறை பொருள்களைத் தெளிவுபடுத்துவதற்குத் தகுந்தது அன்று. ‘பாஸன்’ முதலிய வடமொழிக் கவிகளும், ஆங்கிலக் கவிகளில் சிலரும் இம்முறையைக் கையாண்டிருந்தாலும், அது ஒரு குறையேயாகும். வால்மீகி, தமிழ்ச் சங்கப் புலவர்கள், ஹோமர் முதலிய ஆதி கவிகள், இம்முறையைக் கையாளாதது இங்கு நோக்கத் தகும். ஷெல்லி (Shelley) அருவ உவமைகளிலே திளைக்கிறான். ஆனால், அவை சாதுரியமான சொற்கள் என்ற அளவிலே தனியாய் நிற்காமல், அவனுடைய மனோபாவத்திலே கலந்து வருவதால் ஒரு சிறப்பை எய்துகின்றன. ஒவ்வோரிடங்களில் கம்பர் வாக்கும் இப்படிச் சிறப்பெய்துவதைப் பின் காண்போம். ஆனால் தெளிவின்மை, ஷெல்லியிடமும் பிறரிடமும் ஒரு குறையே. தெரிந்த பொருள்களையே உவமைகளாகக் காட்டினால் தான், அறியாத பொருள்கள் தெளிவுபடும். கம்பரின் அருவ உவமைகளை, நாம் சுவைக்க வேண்டுமானால், உண்மைக் கவிதையா, பொருத்தமுடையனவா என்றெல்லாம் ஒவ்வொரு இடங்களிலும் நோக்கக் கூடாது. அவைகளில் தோன்றும் அதிசயமான அவருடைய மனோதர்மத்தைத் தான் பாராட்டவேண்டும். உதாரணமாக :—

கல்வி என்கிற விதை முளைத்து எழுந்து, கேள்விகள் ஆகிற கிளைகள் விட்டு, தவமாகிற இலைகள் தழைத்து அன்பெனும் அரும்புத் தோன்றி தர்மமாகிய பூ விரிந்து இன்பமாகிய கனி பழுத்தது என்று கம்பர் சொல்லுவதில்

தோன்றும் அவருடைய நல்ல மனப் பண்பு வியத்தற்குரியது.

"எகம் முதல் கல்வி
முளைத்தெழுந்து எண்ணில் கேள்வி
யாகம் முதல் திண்பணை
போக்கி அருந் தவத்தின்
சாகந் தழைத்து அன்பு
அரும்பித் தருமம் மலர்ந்து
போகம் கனி யொன்று
பழுத்தது போலும் அன்றே."

கோசலம் ஒன்றும் குறைவில்லாத நாடு என்பதை நேரிலே சொல்லாமல், ஒன்றுமில்லை என்பதுபோலச் சொல்லும் சாதுரியமான பாட்டையும் பாருங்கள்:

"வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லை நேர்செறுநர் இன்மையால்
உண்மை இல்லை பொய்யுரை இலாமையால்
வெண்மை இல்லை பல்கேள்வி மேவலால்."

ஆனல் இந்தப்பாட்டு, ஒரு நிகழ்ச்சியோடு பொறுத்தப்படாமல், கவியின் தனிக்கூற்ருக நிற்பதால் அழகு பூர்ணமாகவில்லை. திலீப மஹாராஜன் தவங்கிடந்து அருமையாகக் குழந்தை பிறந்ததைக் கொண்டாட விரும்புகிருன். இத்தகைய வைபவ சமயங்களிலே, அரசர்கள் கைதிகளுக்குச் சிறையினின்று விடுதலை அளிப்பது வழக்கம். ஆனல், திலீப மஹாராஜனுக்கு இப்படிச் சந்தோஷம் அடைய முடியவில்லை. நாட்டில் குற்றம் செய்து சிறைவாய்ப் பட்டவர் இருந்தாலன்ருே அரசன் அவர்களை விடுதலை செய்ய! பிள்ளையில்லாக் கவலை என்கிற மனச் சிறையினின்று தன்னைத்தான் விடுவித்துக்கொள்ள முடிந்தது. பிதிர்க் கடனிலிருந்தும் விடுதலை பெற்ருன்" என்கிருன் காளிதாஸன். இதிலே சாதுர்யமும் அழகும் ஒருங்கே கலக்கின்றன.

"கல்வியிற் பெரியவன் கம்பன்", "அவன் சொல்லின் செல்வன்" என்று போற்றும் பெரியாரிடம், ஏதோ ஒரு குறுகிய அளவுகோல் கொண்டு, குற்றமும் குறையுமே நாங்கள் காண்கிருேம் என்று ஒருவரும் தூற்ற வேண்டுவதில்லை. கம்பரின் பெருமையை, நாம், அவர் ஆவேசத்துடனும், சொந்த அனுபவத்திலே தோய்ந்த உணர்ச்சியுடனும், தன் மனப் பண்புக் கொப்பவே பாடிய இடங்களிலேதான் காணவேண்டும். எங்கள் இலக்கிய யாத்திரையிலே, அத்தகைய இடங்களில் தங்கியேதான் இனிச் செல்வோம். பழைய வழக்கத்துக்கும், வறண்ட ஞானம் படைத்தோருக்கும் உட்பட்டு, கம்பர் நிர்ப்பந்தமாகப் பாடிய பாடல்களும், செருகு கவிகளும், ஆவேசம் தோன்ருத சொற் சித்திரங்களும், உணர்ச்சி மிக்க காட்சிகளும், எல்லாம் ஒரே அழகு, பெருமை உடையன என்று சொல்வது, அவரிடம் "பக்தி"யைக் காட்டலாம். ஆனல் அவருடைய மனப் பண்பிற்கே அது விரோதந்தான் ஆகும். இக்கட்டுரை, நாட்டு நகரக் காட்சிப் பாடல்களை மட்டும் முக்கிய விஷயமாய்க்கொண்டது என்பதையும், "லோகோ பின்ன ருசி:" என்பதையும் ரஸிகர்கள் மறக்கலாகாது.

குடும்ப ரக்ஷகன்

எல்லா ஊர் ஷாப்பு, மளிகை,
மருந்து கடைகளில் கிடைக்கும்.

சீதையும் ஆற்றங் கரையும்

[ஸ்ரீ என். வி. துரைசாமி]

திரிச்சி ஜில்லாவில் காவிரிக் கரையின்மீது இருப்பது அல்லூர் என்னும் அழகிய கிராமம். வைதிக நெறி தவருது வாழ்க்கை நடத்தும் வேதியர்கள் நிறைந்தது அவ்விடம். அவ்வூர் ஸம்ஸ்கிருத பாடசாலையில் ஓர் உபாத்தியாயர் ஸ்தானத்தை வகித்துக்கொண்டு வாழ்க்கையை நடத்தி வந்தார் எனது மாமா.

அப்போது நான் திரிச்சியில் காலேஜில் படித்துக்கொண்டிருந்தேன். ஹாஸ்டல் வாசம் செய்துவந்த நான் சனி ஞாயிறு முதலிய விடுமுறை நாட்களில் எனது மாமா அகத்துக்கு விஜடம் செய்யத் தவறுவதில்லை.

காலை ஒன்பது மணி யிருக்கும் அன்று ஞாயிற்றுக் கிழமை யாதலால், அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு மாமா சாவகாசமாக வீதித் திண்ணையில் உட்கார்ந்துகொண்டிருந்தார். நானும், "ஷேவ்" எடுத்தல், "கிராப்" சீவுதல் "காப்பி" அருந்தல் ஆகிய எனது நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு அவர் அருகில் அமர்ந்து அளவளாவிக் கொண்டிருந்தேன்.

இடுப்பில் தண்ணீர் நிறைந்த ஒரு பெரிய பித்தளைக் குடம், தோளில் துவைத்துப் பிழிந்த ஒரு சுமை ஈரத் துணி, மற்றொரு கையில் பளபள வென்று தேய்த்து சுத்தப்படுத்திய தாமிரத் தோண்டியில் நிறைய காவேரித் தீர்த்தம், இத்தியாதி கோலத்துடன் நடுத்தர வயது நாரீமணி ஒருத்தி கால் மெட்டி கலீர் கலீர் என ஒலிக்கத் தெருவில் நடந்து செல்வதை என் கண்கள் கவனித்தன. ஆனல், அன்று நான் கேட்கப் போகும் ராமாயண கால வாழ்க்கைக் குறிப்பிற்கு இப்பெண்மணிதான் காரணமாவாள் என்பதை அப்போது நான் சற்றும் அறிந்திருக்கவில்லை. ஆம். நடக்கப் போகும் காரியங்களை முன்கூட்டியே அறிவதற்கு எனக்குத்தான் ஆருடம் தெரியாதே!

அந்த ஸ்திரீ அடுத்த வீட்டு வாசற்படியில் காலடி வைத்ததுதான் தாமதம். உள்ளேயிருந்து ஓர் ஆண் சிங்கத்தின் கர்ஜினை மூண்டெழுந்தது. "வைகறைத் துயிலெழுந்த தேவி திருமஞ்சன மாடிவர இந்நேரமாகி விட்டது. ஏதடா! வீட்டில் ஒரு ஆத்துமா இருக்கிறதே! அதற்குச் சிறிது அளவு காப்பி வைத்துக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால்தானே!" என்று கிண்டலாகவும் எகத்தாளமாகவும் உள்ளே இருப்பவர் உறுமினர்.

"என்னமோ தினமும்தான் பறக்கப் பறக்க சமையலும் சாப்பாடுமாக இருக்கிறதே. இன்று ஞாயிற்றுக் கிழமை தானே. சற்று சாவகாசமாக ஸ்நானம் செய்துதான் வருவோமே என்று காவேரிக் கரைக்குப் போனேன். போன இடத்தில் கோடி வீட்டுக் கோமதி மாமியிடம் நாலு வார்த்தைச் சொல்லிக் கொண்டிருந்து விட்டேன். அதற்கு இந்தக் கூச்சல் போடுகிறீர்களே! லீவு நாள்தானே. சற்றுத் தாமதமாகி விட்டால், என்ன?" என்று பதிலளித்தது பெண் தெய்வம். பெண் சிங்கமானுலும் சிங்கம் சிங்கம்தானே என்று எண்ணமிட்டேன் நான்.

அப்போது ஏதோ காரியமாக வெளியே வந்த எங்கள் அம்மாமி, "என்னமோ, பக்கத்து வீட்டு ஸீதை யம்மாமி கூச்சலிடுகிறுளே!" என்றுள்.

"ஸீதை என்று பெயர் வைக்கப்பட்டவர்கள் எல்லாம் ஸீதையாகி விடுவார்களா என்ன?" என்று ஆரம்பித்தார் எங்கள் மாமா. "ஆதியில் ராமபிரானின் தேவி ஸீதையும் இப்படித்தான் ஒருநாள் நீராடச் சென்றவிடத்துச் சற்றுத் தாமதமாகிவிட்டதாம். அப்போது அவள் நடந்துகொண்ட விதம் உங்களுக்குத் தெரியுமா?" என்று கூறி எங்கள் முகத்தை நோக்கினர்.

"தெரியாது, சொல்லுங்கள்!" என்றேன் நான், கதை கேட்டும் ஸ்வாரஸ்யத்தில்.

"ஆனால், சீக்கிரம் சொல்லுங்கள். அடுப்பில் வேலையிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே அம்மாமியும் கதவின் பின்புறமாய் நின்று கொண்டாள்.

மாமா ஒரு சிட்டிகைப் பொடியை எடுத்து உறிஞ்சிவிட்டு சுவாரஸ்யமாகச் சொல்லத் துவக்கினர்.

"இளைய அன்னையின் இச்சைக்கு இணங்க ஈரேழு ஆண்டு அடவியில் வாழ இளையவனுடன் இராமன் துறவறம் பூண்டு துணைவியும் தொடரச் சென்ற வரலாறு நீங்கள் அறிந்ததே. அவ்வாறு சென்ற காலே கோதாவரித் தீரத்தில் தண்டகாரணியத்தைக் கண்ணுற்றதும் அவர்கள் மனது ஆங்கு பற்றுக்கொண்டது. கனியும் கிழங்கும் இயற்கையின் எழிலும் நிறைந்த அவ்விடத்து, தம்பி இலக்குவன் அழகுற அமைத்த பர்ண குடீரத்தில் சின்னுட்கள் இனிது வசித்து வந்தனன் இராமன், தம்பியும் மனைவியும் தானுமாக.

ஒரு நாள், இயற்கை யன்னையின் அருள் அருவியேபோல் குளிர்ந்து ஒளிர்ந்த கோதாவரிப் புனலில் நீராடிய பிராட்டி கரையேறினுள். சர்க்கரை விரித்தாற் போன்ற அவ்வெண்மணற் பரப்பின்மீது ஆங்காங்கு அன்னப் பறவைகள் இணையிணையாக அசைந்து அசைந்து நடந்தன. 'ஆகா! வெள்ளை மேனியும் சிவப்பு அலகுமாக இவற்றின் அழகுதான் என்ன! அதனினும் அவற்றின் நடையழகுதான் என்ன சிறப்பு!' எனத் தன்னையும் மறந்து வியந்து நின்ருள்.

நொடிப் பொழுதில் உணர்வு பெற்ற மைதிலி துணுக்குற்று விரைந்து நடந்தனள். "அந்தோ! நீராடப் போந்த இடத்து நெடுநேர மாகிவிட்டதே. மதியிலி யான், அன்னத்தின் அழகில் மயங்கி நின்றுவிட்டேன். இனி, கொழுநன் யாது கூறுவானே" என உள்ளம் பதைத்துக் கடுகி நடந்தாள்.

தொலேவில் வரும்போதே பர்ணசாலேயில் வீற்றிருக்கும் தலைவனின் வதனத்தை அவள் கண்கள் அச்சத்துடன் நோக்கின. மறு வினடி அவள் உடல் வியர்த்தது. தாமரை போன்ற அவளது அழகிய கைகள் கூம்பி அஞ்சலி செய்தன, அறியாது செய்த பிழைக்கு மன்னிப்பு வேண்டும் பாவனையாக!

ராமாயண சரிதையைத் திராவிடத்திலும், ஆரியத்திலும் திறம்பட வர்ணித்துள்ளனர் பல கவிகள். பவபூதி என்னும் கவி தமது ஸம்ஸ்கிருத நாடகத்தில் இக்காட்சியைப் பின் வருமாறு எவ்வளவு அழகாய் அமைத்துள்ளார், பாருங்கள்.

"..........ஸா ஹம்ஸை:
 க்ருத கௌதுகா சிரமபூத்
கோதாவரீ ஸைகதே॥ ஆடாந்த்யா
 பரிதுர் மனாயிதமிவ
த்வாம் வீக்ஷ்ய பத்தஸ்தயா,
 காதர்யாத் அரவிந்த
குட்மல நிபோ முக்த:
 ப்ரணமாஞ்ஜலி:॥"

என்று மாமா இனிமையாகப் பாடி நிறுத்தினர்.

கதவின் மறைவிலிருந்து சற்றே வெளிப்பட்ட அம்மாமி, "சரிதான், இப்போதுள்ள பெண்கள் ஸீதையைப்போல் பதிபக்தி செலுத்துவதில்லே என்பது என்னவோ உண்மையாக இருக்கலாம். ஆனால் இன்றைய ஆண்கள் மட்டும் சரித்திர கால ராமனைப்போல் பத்னீ விரதத்தை எம்மாத்திரம் கடைபிடிக்கிறூர்கள்? "இந்த இப்பிறவிக் கிருமாதரை சிந்தையாலும் தொடேன்" என்று இராமபிரான் உறுதி பூண்ட விரதத்தை சிந்தையிற் கொள்ளும் ஆண் மக்கள் எத்தனை பேர் இருக்கிறூர்கள்? ஸ்திரீ தர்மத்தை எடுத்துக் காட்டும் சுலோகத்தை மட்டும் அழகாக உருப்போட்டு ஒப்புவித்து விட்டீர்களே!" என்று சொல்லி உள்ளே சென்று விட்டாள்.

நானும் எழுந்து, சோம்பல் முறித்துவிட்டு, எதிர் வீட்டு, 'ஸார்' வைத்துக் கொண்டிருக்கும் பேப்பரைப் பார்க்கச் சென்றேன்.

மனிதனின் மனம்

(கே. வெ. கார்த்திகேயன்)

அவன் மலையின் உச்சிமீது ஏறிவிட்டான். தெற்குப் பக்கமாகவும் திரும்பி விட்டான். கீழே பார்த்தால்........ஆ! தலை சுழலுகிறது! என்னவோ செய்கிறது! பாதாளத்திற்கு இதுதான் வழியோ?........இந்தப் பயங்கரமான வீழ்ச்சி அவனை நடுங்கச் செய்யவில்லை. அவனது நெஞ்சு வேகமாகவும் அடித்துக்கொள்ளவில்லை. முகத்தில் அமைதியே குடிகொண்டிருந்தது. மரண பயத்தின் சாயையும் அதில் படரவில்லை. அவன் செய்த பீஷ்ம பிரதிக்ஞையை இனி அவனால் தளர்த்தவே முடியாது. பரம்பொருளைத் தியானித்தான். பிறகு அவன் மரணத்திற்கு நல்வரவு கூறி கீழ் நோக்கிப் பாயப் போகும்போது........

“ வத்ஸா, யாது காரியம் செய்யப் புகுந்தாய்?” என்றது ஓர் குரல்.

அவன் சுற்று முற்றும் பார்த்தான். கொஞ்ச தூரத்தில் ஒரு குகை தென்பட்டது. அதனின்றும் ஒரு தேஜஸ்வி வெளிவந்தார். அவரைக் கண்ணுற்ற மாத்திரத்தில் நம் தற்கொலையாளிக்கு மனதில் பக்தியும் பயமும் ஒருங்கே தோன்றின. அவரைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். அவனை ஆசிர்வதித்த பின்னர் மஹரிஷியும் முன் விடுத்த கேள்வியையே கேட்டார்.

அவன் கூறினன் :—“ ஆர்யரே, நான் தீவிர ஆலோசனை செய்த பின்னரே இம் முடிவுக்கு வந்தேன். பகவதானுக்கிரஹம் இருந்தால்தான் நம் வாழ்க்கையில் அமைதி நிலவும். ஆனல் அந்த அனுக்கிரஹம் பெறுவதற்கு நம்மிடம் சில யோக்கியதாம்சங்கள் இருக்க வேண்டும். உதாரணமாக,ஆத்மவசப்பட்டது மனது. ஆனல் மனது ஆத்ம வசப்பட்டு வர வேண்டுமானல் நம் பிரயத்தனங்கள் மாத்திரம் போதா. ஆண்டவன் அருளும் வேண்டும். அந்த அருள் கிடைப்பதற்கு நாம் தகுதியானவர்களா யிருத்தல் வேண்டும். இது, ‘கலியாணமானல்தான் பைத்தியம் தெளியும்; பைத்தியம் தெளிந்தால்தான் கலியாணமாகும்’ என்ற ரீதியில் உள்ளது. எனது கர்ம ஞானேந்திரியங்களை நான் மிகவும் சிரமப்பட்டு அடக்குவதில் வெற்றி பெற்றேன். ஆனல் மனது விஷயானுபவங்களைப் பற்றி அடிக்கடி நினைத்துக் கொள்ளுகிறது. இவ்வாறிருக்கும்பொழுது நான் எவ்வாறு பரிசுத்தன் என்று சொல்லிக் கொள்ள முடியும்? மனத்திற்கு நானும் அடிக்கடி பெரியோர்களின் திரு உபதேசங்களை நினைப்பூட்டி வந்தேன். அது செவி சாய்க்கவில்லை. என் மனது என் அறிவைவிட சக்தி வாய்ந்தது போலும். இந்நிலைமையில், சமூகத்தில் நான் ஒரு அபாயகரமான மனிதனகத்தான் இருக்க முடியும் என்று எனக்குப்பட்டது. எனக்கு அவ்வாறு இருப்பதில் இஷ்டமில்லை. தியாகத்தின் மகிமையை நான் நன்கு அறிவேன்.”

ரிஷிபுங்கவர் ஒருதரம் தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

அவன் மேலும் பேசலானன் :—“ தியாகத்தினல் சித்தத் தெளிவும் பரிசுத்தமும் சாந்தியும் அடைய முடியும் என்பது எனக்குத் தெரியும். எனது சொத்துக்களைத் தர்ம காரியங்களுக்காகச் செலவு செய்தேன். கோயில்கள் கட்டினேன்; குளங்கள் வெட்டினேன்; சத்திரங்கள் சமைத்தேன்; சாலைகள் போட்டேன்; ஆங்கே, குளிர் நிழல் தரும் தருக்களைப் பயிராக்கினேன். இன்னும் இவைபோன்ற பல நற்காரியங்களில் ஈடுபட்டேன். ஆனல் போதிய அளவு நன்மைகள் கிட்டவில்லை. மனது தன்னைத் தானே அசுசிப்படுத்திக் கொள்

வதையும் நிறுத்தவில்லை. எனது சரீரத்தையே தியாகம் செய்து இந்த என் துர்மனதைச் சீர்திருத்த முடியும் என்று நம்புகிறேன். அதற்காகவே இங்கு வந்துள்ளேன்.''

ரிஷிபுங்கவர் :—மகனே, நீ பேசுவது எல்லாம் சரிதான். நீ இரு விஷயங்களைப் பற்றி யோசிக்கவேயில்லை. முதலில், சர்வேசுவரனின் சொத்தாகிய உனது உயிரை நீ மாய்த்துக்கொள்ள உனக்கு உரிமையில்லை. ஏனெனில், உன்னைக் கேட்டுக்கொண்டு நீ பிறக்கவில்லை. மற்றும் தற்கொலை செய்து கொள்வதில் பிரயோசனம் ஏதும் இல்லை. காரணம், இறந்த பின்னர், நீ உன் இதே மனதுடன்தான் மறு உடலில் புகுகிறாய். உன் மனதை அசுசிப்படுத்தும் இதே கெட்ட எண்ணங்கள் மறு ஜன்மத்திலும் உன்னைத் தொடருவது நிச்சயம். கெட்டவைகளை விலக்கச் சாவு ஓர் உபாயமாகாது. மனதில் எழும் ஒவ்வோர் எண்ணங்களையும் அலசிப் பார்த்து நல்லவைகளைப் போற்றிக் கெட்டவைகளை விலக்க வேண்டும். இடையிடையே தவறுதல்கள் ஏற்படலாம். அவைகளினால் உற்சாகமிழத்தல் கூடாது. ஒருபொழுதும் நம்பிக்கைக் குறைவு ஏற்படக்கூடாது. ஆத்ம வித்தைக்கு மனது ஒரு சாதனம். அதைப் பண்படுத்தல் அவசியம். பொறுமை இதற்கு மிகவும் தேவை. ஆகார விஷயங்களிலும் ஜாக்கிரதை வேண்டும். ஸாத்துவிக குணம் தரும் உணவுகளையே உட்கொள்ள வேண்டும். மனதை அடக்குதல் சிரமமான காரியம்தான். ஆனால் அந்த முயற்சியில் தோல்வி எய்தி தற்கொலையில் இறங்கினால், அது உனது பலஹீனத்தையே காட்டுகிறது.''

அவனும் விழித்துக் கொண்டான். அன்று முதல் அவன் அத்தபோதனரின் சிஷ்யனானான். குரு சேவையின் பலனாக மனதை அடக்குவதிலும் வெற்றி பெற்றான்.



ஸன்லைட் கெமிஸ்டு
சொல்லுகிறார் . . .

“அசுத்தமான ஆடைகளிலிருந்து அழுக்குகளை தானாகவே போக்கக்கூடிய நுரைக்கே சுயமாக வெளுக்கும் நுரை என்று பெயர். அது எப்படி வேலை செய்கிறது? ஸன்லைட் நுரையில் “பிராணசக்தி” வாய்ந்த சோப் இருக்கிறது. ‘பிராணசக்தி’ வாய்ந்த சோப்பிற்கு அழுக்கைப் போக்கக்கூடிய சக்தி நிறைந்திருக்கிறது. அது தொட்ட உடன் அழுக்கைப் பற்றிக்கொண்டு தன்னுடன் அழுக்கை எடுத்துவிடுகிறது. ஆகையால் அழுக்கடைந்த ஆடைகளை ஸன்லைட் நுரையினால் கசக்கினால் இந்த ‘பிராணசக்தி’ யானது உடனே வேலை செய்து நுரையை தண்ணீரில் அலசின உடன் அழுக்குப் போய்விடுகிறது.”

ஸன்லைட் சோப்

சுயமாக வெளுக்கும் நுரை உடையது

S. 62-33 TM

ஒரு லீவர் பிரதர்ஸ் தயாரிப்பு

'சக்தியுரு'க் கொள்கை

[குவாண்டம் தியரி]

[டி. பி. நவநீதகிருஷ்ணன், அண்ணாமலைநகர்]

எந்த சாஸ்திரத்திலும் மூலசித்தாந்தங்கள் எனப்படும் அடிப்படையான கருத்துக்கள் உண்டு. அதற்கேற்ப தங்கள் சாஸ்திரத்திலும் மூலசித்தாந்தங்கள் சில உண்டு என, பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவு வரையில் விஞ்ஞானிகள் சொல்லிவந்தார்கள். அப்படியானவற்றிலொன்று, இவ்வுலகில் நடைபெறும் விஞ்ஞானீயமான காரியங்கள் எல்லாவற்றிலும், முழுமையிலும் வித்தியாசப்பட்ட இரு குணங்கள் இருக்கின்றன என்பது. அவ்விரு குணங்கள் பொருண்மை (மாஸ்) என்பதும், சக்தி (எனர்ஜி) என்பதும். அக்குணங்கள் ஒவ்வொன்றைப்பற்றியும் சிறிது விரிவாகச் சொல்லலாம். நாம், சாதாரணமாக வஸ்துக்களை தொட்டுப் பார்க்கலாம். வாயு பதார்த்தங்கள் எனப்படுபவற்றையும், உறையச் செய்து தொட்டுப் பார்க்கலாம். வஸ்துக்களைக் கையில் தூக்கிப் பார்த்தால், அவை எடையுள்ளனவென வும் தெரிகின்றது. வஸ்துக்களிலுள்ள இப்படியான குணத்திற்கு 'பொருண்மை (மாஸ்)' என்று பெயர். மண்வெட்டியால் நிலத்தைக் கொத்தும்போது, நாம் வேலை செய்கிறோம். கிணற்றிலிருந்து தண்ணீர் இழுக்கவும் வேலை அவசியம். குசவன் சக்கரத்தைச் சுழற்றி வேலை செய்கிறான். மெஷின்களில் சக்கரங்கள் சுழன்று, அவை வேலை செய்கின்றன. இப்படி, வஸ்துக்களில் அசைவு அல்லது இயக்கம் ஏற்படும்போது, அவை வேலை செய்கின்றன. வேலை செய்ய சக்தி வேண்டும். சக்தி செலவிடப்பட்டு வேலை நடக்கின்றது. வேலையையாவது சக்தியையாவது கண்ணால் பார்க்கமுடியாது. தொட்டுப் பார்க்கவும் முடியாது. ஆனாலும் மும்முரமாய் வேலை நடப்பதற்கும், தாமதமாய் வேலை நடப்பதற்கும் வித்தியாசம் உண்டு என நமக்குத் தெரியும். அதாவது வஸ்துக்கள் வேலை செய்யும்போது வேகமாய் அல்லது மெதுவாய் அசைவதினின்று, செய்யப்படும் வேலையை அளவிடலாம். இம்முறையைத் திட்டமான விதமாய்ச் செய்து வேலையையும் சக்தியையும் அளவை செய்ய விஞ்ஞானிகளுக்குத் தெரியும். ஆகையால், காரியங்கள் நடைபெறுவதற்கு தொட்டுணரக் கூடிய பொருண்மையும், தொட்டுணர முடியாத சக்தியும் வேண்டும். அவை இயல்பிலேயே வேறானவை. ஆதலால் 'பொருண்மை என்றும் சக்தியாய் மாறமுடியாது. சக்தி என்றும் பொருண்மையாய் மாற முடியாது' என்பது பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவு வரையில், விஞ்ஞானிகளின் மூலசித்தாந்தங்களில் ஒன்றாயிருந்தது. இனி, பொருண்மைக்கும் சக்திக்கும் இடையுள்ள மற்றொரு வித்தியாசமென அவர்கள் காட்டியதைபற்றிச் சொல்லலாம். வஸ்துக்களைத் துண்டு துண்டாய் வெட்டி, தூளாய்ச் செய்யலாம். தூளாக்கிக் கொண்டே போனால், கடைசியில் அதற்குமேல் தூளாக்கமுடியாத சின்னஞ்சிறு தூள்கள் ஏற்படுகின்றன. சின்னஞ்சிறு தூளுக்கும் மிகக் கொஞ்சமான பொருண்மை உண்டு. ஆதலால், பொருண்மை அதிகமாகும்போது, அநேக சிறு பொருள்கள் முதலிலுள்ள பொருளுடன் சேர்கின்றன. பொருண்மை குறையும்போது, முதலிலுள்ள பொருளிலிருந்து சின்னஞ்சிறு பொருண்மைகள் பிரிந்து விடுகின்றன. அதாவது பொருண்மை மாறும்போது, மாறுதல் சின்னஞ்சிறு பொருள்களால் படிப்படியாய் ஏற்படுகின்றது. தொடர்ச்சியாய் ஏற்படுவதில்லை. தொடர்ச்சியாயில்லாமல், பகுதிப் பகுதியாய் மாறு

வதைத் தொடர்ச்சியில்லாத (டிஸ்கண்டிநுயஸ்) மாறுதல் என்பார்கள். இதனால் 'பொருண்மை' (மாஸ்) தனித்தனிப் பகுதிகளில் சேரும் தன்மையானது என்றும் அதன் மாற்றங்கள் தொடர்ச்சியின்றி நடைபெறும் என்றும் ஏற்பட்டது. இனி சக்தியைப்பற்றிக் கருதலாம். சக்தி செலவாகி வேலை நடைபெறுகின்றது. அதாவது, சக்தி குறைந்துகொண்டே போகும்; வேலை நடைபெற்றுக்கொண்டே யிருக்கும். ஆகவே, சக்தியின் மாறுதல் தொடர்ச்சியாயிருக்கும். சக்தியின் சின்னஞ்சிறு பகுதி யென ஒன்றும் இல்லை. சக்தியின் அளவு மாறும்போது, அம்மாறுதல் இடையறாது நடைபெறும். இப்படி இடையறாது நடைபெறும் மாறுதலுக்கு தொடர்வண்ண (கண்டிநுயஸ்) மாறுதல் என்று பெயர். இதுவரை சொல்லியதினின்று, பொருண்மை வேறுபாடுகள் தொடர்ச்சியில்லாது நடைபெறும் என்றும் மாறுதல்கள் தொடர் வண்ணமாய் நடைபெறும் என்றும் ஏற்பட்டது. இம்முடிவும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவு வரையில், விஞ்ஞானத்தின் மூல சித்தாந்தங்களில் ஒன்றாய் இருந்தது.

இவ்விருபதாம் நூற்றாண்டிற்கு முன்பு, விஞ்ஞானிகளால் கவனிக்க முடிந்த சங்கதிகள் பலவற்றிற்கும், விஞ்ஞானீயக் காரணங்களை எடுத்துச் சொல்வதற்கு, மேலே சொல்லப்பட்ட மூலசித்தாந்தங்கள் ஏற்றவையாய் இருந்தன. பின், விஞ்ஞானக் கருவிகளையும் மிகவும் நுட்பமான சங்கதிகளையும் கவனிக்கும் முறையில் அபிவிருத்தி செய்ய முடிந்தது. அவற்றைக் கொண்டு கவனிக்கப்பட்ட விஷயங்கள் சில, சக்தி தொடர்வண்ணமாய் மாறுகின்றது என்ற மூலசித்தாந்தத்தைக் கொண்டு காரணம் கூறமுடியாதபடி இருந்தன. இந்நெருக்கடியான நிலைமையில், ப்ளாங்க் என்ற விஞ்ஞான நிபுணர், சக்தியும் தொடர்ச்சியில்லாத சின்னஞ்சிறு பகுதிகளிலேயே மாறுகின்றது என்ற கருத்தைக் கொண்ட கொள்கை யொன்றை வெளியிட்டார். அவர் சக்தி மாறுதல்களுக்கு அடிப்படையான சின்னஞ்சிறு பகுதிக்கு 'சக்தியுரு' அல்லது 'குவாண்டம்' என்று பெயரிட்டார். அதனால் அக்கொள்கை 'சக்தியுருக் கொள்கை' (குவாண்டம் தியரி) என்றழைக்கப்படுகின்றது. அக்கொள்கையைக் கொண்டு, முன்னர் காரணங் கூற முடியாதிருந்த நுட்பமான விஷயங்களை விளக்க முடிந்தது. ஆனால், அக்கொள்கை விஞ்ஞானத்தின் மூலசித்தாந்தங்கள் எனப்பட்டவற்றை எதிர்த்ததா யிருந்தது. நாளடைவில் பழைய மூலசித்தாந்தங்களால் விளக்கமுடியாத விஷயங்கள் இன்னும் பலவும் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றிற்கும் 'குவாண்டம் தியரி' யால் காரணம் கூற முடிந்தது. ஆகையால், தங்கள் மூலசித்தாந்தங்களைக் கைவிட்டுவிட்டு, ப்ளாங்கின் 'குவாண்டம் தியரி'யை விஞ்ஞானிகள் அங்கீகரித்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் மூலசித்தாந்தங்களைக் கொண்டு காரணம் கூற முடியாத பலவற்றிற்கும் ப்ளாங்கின் குவாண்டம் தியரியால் காரணம் கூறமுடிந்தது. அவ்விஷயங்களில் முதன்மையானதொன்றைப் பற்றிச் சொல்லலாம். அவ்விஷயம் 'கரும்பொருளின் கதிர்வீச்சு' ('ப்ளாக்பாடிரேடியேஷன்') என்பதைப்பற்றின ஆராய்ச்சி. அதைப் பற்றிச் சற்று விவரமாய்க் கூறலாம்.

வெண்ணொளி வரும் வழியில் முப்பட்டைக் கண்ணாடியை வைத்தபோது, வெண்ணொளி மறைந்து பலநிற ஒளிகள் காணப்பட்டதை, நன்றாய்ச் சோதனை செய்து பார்த்து, வெண்ணொளியின் பகுதிகளே பலநிற ஒளிகள் எனக் கண்டுபிடிக்கப்பட்டது. இப்படி யேற்பட்ட பலநிற ஒளிப்பட்டைக்கு, நிறமாலை அல்லது ஸ்பெக்டாம் எனப் பெயரிடப்பட்டது. வேறு பல ஆராய்ச்சிகளினின்று, ஒளி ஓரிடமிருந்து மற்றோரிடம் பாயும்போது, அது நேர்க்கோடுகளில் செல்லவில்லை யென்றும், சிறு அலைகளாய்ச் செல்கின்றதெனவும் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்விரு விஷயங்களையும் கொண்டு, 'ஒளி அலைகளாலானது. அவ்வலைகளின் நீளங்களுக்கேற்றவாறு நிறங்கள் வேறுபடுகின்றன' எனவும் காட்டப்பட்டது.

சிவப்பு ஒளியின் அலைநீளம் சுமார் லக்ஷத்தில் மூன்று பங்கு (3/1,00000) அங்குலம், வயலட் ஒளியின் அலைநீளம் சுமாராக இரண்டு லக்ஷத்தில் மூன்று பங்கு (3/2,000,00) அங்குலம். சிவப்பு ஒளியின் அலைநீளத்திற்கும் வயலட் ஒளியின் அலைநீளத்திற்கும் இடைப்பட்ட, அதாவது, 3/2,000,00 அங்குலத்திற்கும், 3/1,000,00 அங்குலத்திற்கும் இடைப்பட்ட அலைநீளங்களுடன் உள்ள ஒளிகளைமட்டுமே கண் பார்க்க முடியும் எனவும் அறியப்பட்டது.

அதன்பின், சூடும் ஒளியைப் போன்றே அலையியக்கமாய் ஓரிடமிருந்து மற்றோரிடம் செல்கின்றது எனக் காட்டப்பட்டது. ஆனால், சூட்டலைகளின் நீளம் சிவப்பு ஒளியின் அலைகளின் நீளத்தைவிட அதிகமானவை யாதலால், அவை கண்ணுக்குப் புலப்படுவதில்லை. இருட்டறையில் ஒரு வஸ்துவை வைத்து, அதைக் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சூடேற்றிக் கொண்டே போனால், அவ்வஸ்து இருப்பதே முதலில் தெரியாது. கொஞ்சம் சூடேறின பின்பு, அது சிவப்பாய் நெருப்புபோல் தெரிகின்றது. அப்பொழுது அது ‘செந்தணல்’ (ரெட்-ஹீட்) நிலைமையில் உள்ளது. அப்பொழுதே, அது கண் காணக் கூடிய அலைகளை வீச ஆரம்பிக்கின்றது. மேலும் மேலும் சூடு அதிகரிக்கும்போது, சிவப்பு மஞ்சளாகி, கடைசியில், அவ்வஸ்து வெண்ணிறத்துடன் பிரகாசிக்கின்றது. அப்பொழுது, அது ‘வெந்தணல்’ (வொயிட் ஹீட்) நிலைமையிலுள்ளது. அப்பொழுது அது, சூட்டலைகளேயன்றி பல நிறங்களுக்கான ஒளி அலைகளையும் வீசுகின்றது. அப்பல நிற ஒளிகள் சேர்ந்து வெண்ணிற ஜோதி யேற்படுகின்றது. மேலும், ஒரு வஸ்துவின் சூட்டு நிலைக்கும் அல்லது வெப்ப நிலைக்கும் (டெம்பரேசருக்கும்) தகுந்தவாறு, அது வெளிப்படுத்தும் அலைகளின் நீளங்களும் உள்ளன. குறைந்த வெப்ப நிலையில், நீளமான சூட்டலைகள் மட்டுமே வருகின்றன. வெப்ப நிலை அதிகரிக்க அதிகரிக்க, குறைந்த அலை நீளங்களுள்ளவையும் கிளம்புகின்றன.

கருமையான வஸ்துவொன்று கருமையாய் இருப்பதற்குக் காரணம், அது தன்மீது படும் அலைகளெல்லாவற்றையும் உறிஞ்சிக் கொள்வதால் என்பதே. எல்லா அலைகளும் விழுங்கப்பட்டு மறைந்து விடுவதால், ஒளியற்ற இருண்ட கறுப்பு நிறம் காணப்படுகின்றது. வேறு வஸ்துக்கள் பல்வேறு நிறங்களுடன் இருப்பதற்குக் காரணம், அவை சில நிறங்களுக்கான அலைகளை மட்டுமே உறிஞ்சிக்கொண்டு, அவற்றின் மீது படும் மற்ற அலைகளைக் கக்கி விடுகின்றன என்பதே, வெவ்வேறு வஸ்துக்கள் வெவ்வேறான அலைகளை உறிஞ்சவும், கக்கவும் நேர்வதால், பல்வேறான நிறங்களுடன் வஸ்துக்கள் தோன்றுகின்றன. இதுவரை சொன்னது அலைகள் வஸ்துக்களின்மீது படும்போதுள்ள இயல்பு. வஸ்துக்கள் சூடாக்கப்படும்போது, அவற்றினின்றே அலைகள் கிளம்புகின்றன. ஆகையால் அவ்வலைகள், சூடாக்கப்பட்ட வஸ்துவின் தன்மையானவை. ஆதலால், அவற்றினின்று வெளிப்படும் அலைகள், அவற்றின்மீது அலைகள் படும்போது அவை கிரகித்துக் கொள்ளும் (அப்சார்ப் செய்துகொள்ளும்) அலைகளே. ஆனால், கரிய வஸ்து தன்மீது படும் எல்லா அலைகளையும் கிரகித்துக் கொள்ளும் தன்மையானது. ஆகவே, அது சூடாக்கப்படும்போது, அதுவுள்ள வெப்ப நிலைக்கு ஏற்றதான எல்லா அலைகளையும் வெளிப்படச் (எமிட்) செய்யும். இப்படி, ஒரு குறித்த வெப்ப நிலைக்கான எல்லா அலைகளையும் வெளிப்படச் (எமிட்) செய்யக்கூடிய வஸ்துவிற்குக் ‘கன்னங் கரேலான பதார்த்தம்’ (‘பர்பக்ட்லே ப்ளாக்பாடி’) யென்று பெயர்.

வெண்ணொளியைப் பல நிற ஒளிகளாய்ப் பிரிக்க முப்பட்டைக் கண்ணாடி உபயோகப்பட்டது. ஆனால் கண்ணாடி, சிவப்பு நிற அலைகளைவிட நீளமான சூட்டலைகளை கிரகித்துக் (அப்சார்ப் செய்து) கொள்ளும் இயல்பானது. ஆகையால்

கன்னங் கரேலென வஸ்துவினின்று வரும் அலைகளைப் பரிசோதிக்க முப்பட்டைக் கண்ணடி பிரயோஜனப்படாது. அவ்வலைகளைக் கிரகிக்காத (அப்சார்ப் செய்யாத) முப்பட்டையான கல்லுப்புக் கட்டி (ராக்சால்ட் பிரிஸ்ம்) கொண்டு சோதனைகள் செய்யப்படுகின்றன. கன்னங் கரேலென வஸ்துவினின்று எழும் அலைகள் எல்லாவற்றினுலும் ஆன தொகுதிக்கு ' கரும் பொருளின் கதிர் வீச்சு ' (ப்ளாக்பாடி ரேடியேஷன்) என்று பெயர். 'அக் கதிர்வீச்சைப் பற்றிப் பல நுட்பமான ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. கண் பார்க்க முடிந்த ஒளி அலைகளால் ஏற்பட்ட ' நிறமாலை ' (ஸ்பெக்டரத்தை)ப் பற்றி முன்பே சொல்லியுள்ளோம். அவ்வாறே, கரும் பொருளின் கதிர் வீச்சால் எழும் நிறமாலையை (ஸ்பெக்டரத்தை) ராக்சால்ட் பிரிஸ்ம் கொண்டு பெறலாம். கரும் பொருள் சற்றே சூடேற்றப்பட்டபோது, அதாவது, அதன் வெப்ப நிலை குறைவாயுள்ள போது, அதிலிருந்து சூட்டலைகள் மட்டுமே வெளிப்படுகின்றன. ஆகையால் அவற்ருல் ஏற்படும் நிறமாலை (ஸ்பெக்டரம்) கண்ணுக்குப் புலப்படாது. ஆனல் நிறமாலை (ஸ்பெக்டரம்) உள்ள இடம் சூட்டலைகள் படும் இடமாதலால், அங்கு சிறிது சூடிருக்கும். அதாவது, அந்த இடம் சுற்றிலுமுள்ள இடத்தைவிடச் சற்று அதிகமான வெப்ப நிலையினதாயிருக்கும். கரும் பொருளின் வெப்ப நிலை அதிகரிக்கும்போது, அதிலிருந்து கண் பார்க்கக்கூடிய ஒளி அலைகளும் கிளம்புவதால், அப்பொழுது கண் பார்க்கக் கூடிய நிறமாலையும் தோன்றும். இதிலுள்ள சிவப்பு நிற நுனிக்கு அப்பால் சூட்டலைகளாலான நிறமாலைப் பகுதியுள்ளது. கண்ணுல் பார்க்க முடிந்த நிறமாலைப் பகுதிக்கு 'கட்புலனும் நிறமாலை' (' விஸிபிள்ஸ்பெக்டரம் ') என்றும், கண் பார்க்க முடியாத நிறமாலைப் பகுதிக்கு ' கட்புலனுகா நிறமாலை ' (' இன்விஸிபிள் ஸ்பெக்டரம் ') என்றும் பெயர். விஞ்ஞானிகள், கட்புலனுகா நிறமாலையைப் பற்றியும் ஆராய்ச்சி செய்தனர். 'போலா மீடர்' என்பது மிக நுட்பமான வெப்ப நிலை வித்தியாசங்களையும் அளவிடக் கூடிய அற்புதமான கருவி. அதைக் கொண்டு பத்து லக்ஷத்திலொன்று (1/1,000,000) டிக்ரி வித்தியாசத்தையும் அளவிடலாம். அக்கருவியைக் கொண்டு கரும் பொருள் கதிர் வீச்சால் ஏற்பட்ட நிறமாலையின் பல பகுதிகளது வெப்ப நிலையை மிகவும் திட்டமாய் விஞ்ஞானிகள் அளவிட்டனர். ஒவ்வொரு பகுதியும் எவ்வலை நீளமானது எனவும் அளவிடலாம். இவற்ருல், கரும்பொருள் கதிர் வீச்சால் ஏற்பட்ட நிறமாலையில் அலை நீளத்திற்கேற்றவாறு, வெப்ப நிலை எவ்வாறு வேறுபடுகின்றது எனக் கண்டு பிடித்தார்கள்.

இக்காலத்தே, வஸ்துக்கள் உராய்வதால் சூடு உண்டாகின்றதைக் கவனித்த விஞ்ஞானிகள், இத்துறையில் பல ஆராய்ச்சிகள் செய்பலாயினர். தொடர்ந்தாப் போல் சூட்டைப் பெறுவதற்கு வஸ்துக்களும் உராயப்பட்டுக்கொண்டேயிருக்க வேண்டும். அப்படி உராய்ந்துகொண்டேயிருப்பதற்கு வேலைசெய்ய வேண்டும். வேலை செய்யச் சக்தி தேவையாகின்றது. ஆகையால், சூடும் ஒரு வகையான சக்தியேயென விஞ்ஞானிகள் காட்டினர்கள்.

இனி, கரும் பொருள் கதிர் வீச்சு நிறமாலையை மீண்டும் கவனிக்கலாம். அதில் வெப்ப நிலை வேறுபடுகின்றது என மேலே கூறினேம். வெப்பநிலை, சூட்டியலானது. சூடு சக்தியின் வகைகளிலொன்று. ஆகவே, கரும் பொருள் கதிர் வீச்சு நிறமாலையில் அலை நீளத்திற்கேற்றவாறு, சக்தி யளவும் வேறுபடுகின்றதென ஏற்பட்டது.

கரும் பொருள் கதிர் வீச்சைப் பற்றி விஞ்ஞானிகள் கண்டு பிடித்ததைப் பின் வருமாறு சுருக்கிக் கூறலாம். கரும் பொருள் கதிர் வீச்சின் வெப்ப நிலை அதிகரிக்கும்போது அதிலிருந்து எழும் அலைகள் வெப்ப நிலைக் கேற்றவாறு வேறுபடும் ; அதன் நிறமாலையில் அலை நீளத்திற் கேற்றவாறு சக்தியளவும் வேறுபடும் ; இப்படி அலை நீளத்திற்

கேற்றவாறு சக்தியளவும் வேறுபடும்; இப்படி அலை நீளத்திற்கேற்றவாறு சக்தி யளவு வேறுபடும் முறைமைக்கு 'ஒழுங்கு பிரிபாடு' (டிஸ்ட்ரிப்யூஷன்) என்று பெயர். ஒழுங்கு பிரிபாடு வெப்பநிலைக் கேற்ப வேறுபடும்.

சோதனை வழியே கண்டு பிடிக்கப் பட்ட மேற்கூறப்பட்ட விஷயங்களைத்தம் கொள்கைகளைக்கொண்டு விளக்க விஞ் ஞானிகள் முற்பட்டனர். ஆனால் அம் முயற்சி கைகூடவில்லை. எவ்வளவு முயற்சி கள் செய்தாலும், சக்தி தொடர்வண்ண மாய் மாறிவரும் என்ற மூல சித்தாந்தத் தைக்கொண்டு, மேற் கூறிய விஷயங் களுக்குக் காரணம் கூற முடியாது போயிற்று. காரணங் கூற இயலாது விஞ்ஞானிகள் திணறிக்கொண்டிருந்த போது, ப்ளாங்க் என்ற விஞ்ஞானி 'குவாண்டம் தியரி' யை வெளியிட்டார். சக்தி 'குவாண்டம்' என்ற தன் மூலப் பகுதிகளாலேயே தொடர்ச்சி இல்லாத முறையில் படிப்படியாய் மாறுகின்றது என்பது அக்கொள்கையின் மூலக்கருத்து. ப்ளாங்க், கரும் பொருள் கதிர் வீச்சின் பாற்பட்ட ஆராய்ச்சிகளினின்று கிடை த்த அளவைகளைக்கொண்டு தன் கொள் கையை யொட்டி குவாண்டம் ஒன்றின் அளவு எவ்வளவு என்பதையும் கணக் கிட்டார்.

இதன் பின், பௌதிக விஞ்ஞானத் தின் பாற்பட்ட மற்றப் பகுதிகளாகிய ஒளி மின்சாரம், அணுத்தத்வம் என்ற வற்றிலும், சக்தி, தொடர் வண்ண மாய் மாறுகின்றது என்ற மூல சித்தாந்தத்தைக் கொண்டு காரணங் கூறமுடியாத நுட்பமான விஷயங்கள் பல கண்டு பிடிக்கப்பட்டன. அவற்றை யும் குவாண்டம் கொள்கையைக்கொண்டு விளக்க முடிந்தது. 'குவாண்டம்' என் பது எவ்வளவென கணக்கிடவும் முடிந் தது. பல துறைகளிலும் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளினின்று, கிடைத்த குவாண் டத்தின் அளவைகள் ஒத்திருந்தன. தங்கள் முன் கொண்ட மூல சித்தாந்தங் கள் தவறானவை எனத் தள்ளிவிட்டு, குவாண்டம் கொள்கையை விஞ்ஞானி கள் அங்கீகரித்தனர்.

சக்தியின் குவாண்டம், சக்தி மாற்றம் ஏற்படும் நிலைமைக்கேற்றவாறு மாறு படும். அது சக்தி மாற்றமேற்படும் போதுள்ள அலைகளின் நீளத்தைப் பொருத்திருக்கும். அது, ஹெச் (h) என்ற மாறுதான் (கான்ஸ்டண்டையும்) 'ந்யூ' (u)வென்ற அலை நீளத்தின் பாற் பட்ட எண்ணையும் பெருக்குவதால் பெறப்படும் ஹெச்-ந்யூ (hu) என்பதாம். ஹெச் (h) என்பது 'ப்ளாங்க்ஸ் கான் ஸ்டன்ட்' என்று பெயர் பெற்றுள்ளது. பல அளவைகளினின்று, ஹெச் (h) $6{\cdot}55 + 10^{-29}$ எர்க்ஸிசெகண்ட் 7 எனக் கணக் கிடப்பட்டது. (எர்க்ஸ் என்பது எனர்ஜி யளக்கப்படும் யூனிட்) அதாவது ஒரு வஸ்துவின் நீளம் இவ்வளவு அங்குலங் கள் எனச் சொல்வதுபோல, சக்தி (எனர்ஜி) இவ்வளவு எர்க்ஸ் என்று அளவை செய்யப்படும். அங்குலம் நீள அளவையின் யூனிட். எர்க், எனர்ஜி அளவையின் யூனிட். 10^{-29}, என்றால், 1 போட்டு அதன்கீழ் கோடிட்டு, கோட் டின் கீழ், 1க்குப் பின் 29 பூஜ்யங்கள் போட்டால், கிடைக்கும் சிறு பின்னம்). சிவப்பு ஒளிக்கு ந்யூ (u)=சுமாராக 4×10^{15} (10^{15} என்றால் 1 பின் 15 பூஜ்யங் கள் போடுவதால் கிடைக்கப்பட்ட எண்). ஆகையால், சிவப்பு நிற ஒளியின் சக்தி குவாண்டம் 2620×10^{14} எர்க்ஸ்—செக கண்ட், அதாவது, சுமாராக லக்ஷக்கோடி யில் மூன்று பங்கு (3/1,00000,000000) எர்க்ஸ் ஸெகண்ட்.

குவாண்டம் அதி நுண்ணிதானது எனத் தெரிந்துகொள்ளலாம். எனவே குவாண்டம் முறையான சக்தி மாற்றம், ஒளியலை, சூட்டலை என்பது போன்ற நுட்பமான வகைகளில் ஏற்படும்போதே, அளவிடப்படுகின்றது. அதைக் காண வும் அளவிடவும் நுட்பமான கருவிகள் அவசியம். சாதாரணமான விஷயங்களை சாதாரணமான கருவிகளைக்கொண்டு அளவிட்டபோது, சக்தி மாற்றம் தொடர் வண்ணமாய் நடைபெறுவது போல் இருந்ததால், தொடர்வண்ண



மேன்மையான அகில இந்திய மயமாகிய ஐ. ஏ. எப்பில் நீங்கள் விரோதிகளை பலமாகவும் அதிவேகமாகவும் தாக்கலாம். ஆகாயத்தை சுடுவதற்காக கட்டப்பட்ட ஆகாய விமானங்களில் நீங்கள் பறந்து சண்டை போடலாம். நீங்கள் ஒரு ஜதை இரக்கைகள் "விங்ஸ்" அணிவீர்கள். அதை அடைய நீங்கள் விசேஷ முன்னவர்களாய் இருக்க வேண்டும். ஞானம்—பயிற்சி, படிப்பு—உண்மைகள் அல்லது சொந்த சக்தியை நீங்கள் என்னவென்று அழைத்தாலும் அது நீங்கள் இப்பொழுதே வேலை செய்தால் உங்களுடையதாக ஆகலாம். ஐ. ஏ. எப்பில் பறக்கும் பொறுக்கி எடுத்த இந்திய சிறுவர்களுடன் சேர்ந்து நீங்களும் உறுதியும் சற்குணமும் முள்ள மனிதராக ஆகுங்கள்.

உங்களுடைய பிற்கால வாழ்க்கையைப் பற்றி நினைப்பதற்கு இதுவே சமயம்!

- இந்திய ஆகாயப் படையில் அடையும் பயிற்சியும் அனுபவமும் அனேகருக்கு லாபகரமான சிவில் வாழ்க்கை நடத்த தேவையான யோக்யதாம்சங்களை கொடுக்கிறது என்பதற்கு சந்தேகமேயில்லை.
- யுத்தம் நடக்கும் வரை தங்கள் ஆதிக்கத்திலுள்ள அநேக வேலைகளை காலியாக வைத்திருப்பதாக சர்க்கார் வாக்களித்திருக்கின்றனர். இந்த வேலைகள் பிற்பாடு யுத்தசேவை செய்தவர்களைக் கொண்டு பூர்த்தி செய்யப்படும்.
- யுத்த சேவையிலிருந்தவர்களில் தேர்ந்தெடுத்தவர்களுக்கு குறிப்பிட்ட வியாபாரம் அல்லது தொழிலில் சர்க்கார் சிலவில் பிரத்யேக பயிற்சி அளிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் தயாராகி வருகிறது.
- தற்சமயம் பல்கலைக்கழகத்திலிருக்கும் மாணவர்களுக்கு யுத்த சேவையால் யுத்தத்திற்குப் பிறகு மதிப்பு உள்ள சலுகைகளை அடைவார்கள். அதன் மூலம் அவர்கள் மேற்கொண்டும் படிக்கலாம். சரியான விவரங்களை பல்கலைக்கழக அதிகாரிகளிடமிருந்து பெறலாம்.

இந்த கூப்பனை கத்தரித்து அதை உங்களுக்கு சமீபத்திலுள்ள G. D. (பைலட்டுகள்) ரெக்ரூட்டிங் ஆபீசருக்கு அனுப்புங்கள். அவர் உங்களுக்கு விண்ணப்ப பாரமும் இந்திய ஆகாயப் படையில் பைலட் சேவைக்கான விவரங்களையும் நிபந்தனைகளையும் அனுப்புவார்.

பெயர் ____________________

விலாசம் ____________________

ஐ. ஏ. எப்க்குத் தேவையானது

நல்ல திடசரீரமும், நல்ல பார்வை, காது கேட்குதல், 17½ முதல் 28 வயதுக்குள் இருக்கும் மனிதர்கள். அவர்கள் சுறுசுறுப்புள்ள யுத்த சேவையில் பறப்பதினால் ஏற்படும் பிரயாசத்தை தாங்கக் கூடியவர்களாய் இருக்கவேண்டும். நல்ல பொது அறிவுள்ள படிப்பும் ஆங்கிலம் நன்றாய் பேசவும் எழுதவும் தெரிந்திருக்க வேண்டும்.

உங்களது கூப்பனை சமீபத்திலுள்ள G. D. R. Oக்கு அனுப்புங்கள்

AAA—1532—TM

ஐ. ஏ. எப். ஜி. டி. (பைலட்ஸ்) ரிக்ரூடிங் ஆபீஸர்
புதுப்பேட் லேன்ஸ், மவுண்ட் ரோடு, மதராஸுக்கும்

ஐ. ஏ. எப். ஜி. டி. (பைலட்ஸ்) ரிக்ரூடிங் ஆபீஸர்
கப்பான் ரோடு, பெங்களூருக்கும்

முறையை யொட்டிய கணிதத்தைக் கொண்டு, சாதாரண விஷயங்களுக் கேற்றதான கொள்கையை விஞ்ஞானி கள் கையாண்டு வந்தனர். நுட்பமான கருவிகளைக் கொண்டு ஆராய்ந்தபோது, சக்தி மாற்றம் தொடர்ச்சியின்றி நடை பெறுகின்றது என்பதைக் கொண்ட கணித முறையையொட்டி குவாண்டம் கொள்கை யேற்பட்டது. குவாண்டம் கொள்கையைக் கொண்டு சாதாரண விஷயங்களுக்கும் காரணம் கூறலாம். ஆனால் பழைய கொள்கையால் நுட்ப மான விஷயங்களுக்குக் காரணம் கூற முடியாது. சாதாரண விஷயங் களைப்பற்றி, குவாண்டம் கொள் கையைக்கொண்டும், பழைய கொள்கை யைக் கொண்டும், அவைகளைப் பற்றின கணக்குகள் போடும்போது பெறப்படும் விடைகளினிடையுள்ள வித்தியாசம் மிக வும் கொஞ்சமே. அவ்வித்தியாசம், சாதாரணமான விஷயங்களைப்பற்றி அள வைகளைச் செய்ய உபயோகிக்கும் அள வைக் கருவிளால் அளவை செய்யமுடி யாத அவ்வளவு சிறிது. ஆகையால் சாதாரண விஷயங்களைப்பற்றிக் கருதும் போது, அதற்குள் குவாண்டம் கொள் கையைப் புகுத்த வேண்டியதில்லை. நுட்ப மானவற்றைப் பற்றியுள்ளபோதே, குவாண்டம் கொள்கை அவசியம் என, விஞ்ஞானிகள் அபிப்பிராயப்படுகின்ற னர். ஆகையால், குவாண்டம் கொள்கை அங்கீகரிக்கப்பட்டவுடன், விஞ்ஞானி கள் பழையகொள்கையை விஞ்ஞான எல்லைக்குள்ளிருந்து வெளியே தள்ளி விடவில்லை. அது எவ்விஷயங்களுக்குப் போதுமானதென அறிந்து அங்கே அதைக் கையாள்கின்றனர். சாதாரண விஷங்களைப் பொருத்தவரை, சக்தி கிட்டத்தட்ட தொடர்வண்ணமாய் மாறு வதால், அது தொடர்வண்ணமாய் மாறு கின்றது எனக்கொண்டு கணக்கிடுவதால் தவறில்லை. 'சக்தி தொடர்வண்ணமாய் தான் மாறவேண்டும்' என்று சித்தாந் தம் செய்ததே பெரும்பிழை.

குவாண்டம் கொள்கை, விஞ்ஞானத் தின் அடிப்படையான கருத்துக்களை மாற்றி, விஞ்ஞானத்தில் பெரும் புரட் சியை யுண்டாக்கி யுள்ளது. பத்தொன்ப தாம் நூற்றாண்டின் விஞ்ஞானிகள், என் றும் மாறாத மூல சித்தாந்தங்கள் (இம்பி யூடபிள் லாஸ்) விஞ்ஞானத்தில் உண்டு எனவும், அவற்றில் சிலவற்றைத் தாம் கண்டுபிடித்து விட்டதாகவும், மற்றவை யும் கண்டு பிடிக்கப்பட்டபின், விஞ் ஞானமும் முற்றுப்படும் எனவும், அதன் பின் விஞ்ஞானிகள் ஓய்வு எடுத்துக் கொள்ளலா மெனவும், மமதையுடன் சொன்னார்கள். இருபதாம் நூற்றாண் டில், அம்மூல சித்தாந்தங்களில் பல தவ றானவையென நிரூபிக்கப்பட்டது. இந் நூற்றாண்டின் விஞ்ஞானிகள், விஞ்ஞா னத்தில் மூல சித்தாந்தங்கள் உண்டு என்ற கருத்து அடியோடு சரியன்று எனவும், ஒருகாலத்தில் அதுவரை ஆராயப்பட்ட விஷயங்கள் எல்லாவற் றிற்கும் காரணம் எடுத்து உரைக்கும் பொது முறைமைகளும் (ஜெனரலை ஸேஷன்களும்) கொள்கைகளும் (தியரி களும்) இருக்கும் எனவும், அவையும் மேன்மேலும் செய்யப்படும் ஆராய்ச்சி களால் கண்டு பிடிக்கப்படும் புது விஷ யங்களைத் தம்முள் கொள்ளும் முறையில் காலத்திற் கேற்றவாறு விரிவடையும் எனவும் கூறுகின்றன. எனவே, பத் தொன்பதாம் நூற்றாண்டில் விஞ்ஞானி கள், விஞ்ஞான ஆராய்ச்சிகள் முடிவடை யும், நாளொன்றுண்டு என்றனர். இருப தாம் நூற்றாண்டின் விஞ்ஞானிகள், விஞ் ஞான ஆராய்ச்சிகள் எல்லையற்ற இயல் பானவை என்கின்றனர். இவ்வாறு விஞ் ஞானத்தின் நோக்கத்தையே முற்றும் மாற்றுவதில், முதன்மையா யிருந்தவை களில் சக்தியுரு (குவாண்டம்) கொள்கை முக்கியமான தொன்றும்.

க்ளூகோனேட்-D.

கால்ஸியம் க்ளூகோனேட் மாத்திரைகள் -

விடமின் D சேர்ந்தது

*

உட்கொள்ளக் கூடிய சாக்லட் வடிவில்

கர்ப்ப காலத்தில் கால்ஸியம் குறைவு, பலஹீனம், குழந்தைகளுக்கு எலும்பு ஏற்படுவது போன்ற எல்லா சந்தர்ப்பங்களுக்கும் சிபார்சு செய்யப்படுவது

*

I. T. L. தயாரிப்பு

கவர்ன்மெண்ட் இண்டஸ்டிரியல் & டெஸ்டிங்
லாபரடரி

மல்லேச்வரம் P. O. :: பெங்களூர்

சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள் :—

மெஸர்ஸ் : **பெஸ்ட் & கம்பெனி லிமிடெட்.**

தபாற் பெட்டி நெ. 63, — மதராஸ்.

"கனவு"

[தெ. நா. கிருஷ்ணமூர்த்தி]

இது ஒரு கனவுதான். இது நனவானால் என் மனது பூரிப்பை அடைவதோடுகூட, இந்த உலகத்தில் இப்பேர்ப்பட்ட இயக்கங்களை ஆரம்பிக்க முயலுபவர்கள் எவ்வளவு சந்தோஷம் அடைவார்கள் என்பது எண்ணத்துள் அடங்காது.

எனக்கு விவாகம் ஆகிவிட்டது. எனது பெற்றோர் எனக்காக மீத்து வைத்த பணத்தில், (பாரதியார் தனக்கு வேண்டுமென்று கேட்ட) ஒரு காணி நிலமும், குடியிருக்கத் தகுந்த ஒரு வீடும் தான் பாக்கி. மற்றவையெல்லாம் நான் பட்டாதாரியாக ஆனதிலும், உத்யோகத்திற்காக அலைந்ததிலும் என் ஜாதகத்தை ஜோஸ்யர்களிடம் கொடுத்துப் பார்க்கச் சொன்னதிலும் செலவழிந்துவிட்டது.

* * *

கடைசியாக ஒருநாள் ஒரு ஜோஸ்யர் வருகிறார். அவரிடமும் என் ஜாதகத்தைக் கொடுத்து "ஸ்வாமி, என்று எனக்கு நல்ல காலம் வரும்?" என்கிறேன்.

"ஐயா, நான் கூறினால் நம்புவீர்களோ, மாட்டீர்களோ ? உங்கள் முகக்குறியே உங்கள் ஜாதகத்தைக் காட்டிலும் நன்றாக நல்ல காலத்தைக் காட்டுகிறது.

" அப்படியா !"

"அதென்ன, அப்படி ஆச்சரியப்படுகிறீர்கள்?உங்கள் பெயரை உலக முழுவதிலும் போற்றப்போகிறார்கள். ஏழை எளியவர்கள், தனவந்தர்கள் எல்லோராலும் போற்றப்படப் போகிறீர்கள்."

" எப்படி ?"

" உன்னிடம் எவ்வளவு பணம் இருக்கிறது ?"

"ஸ்வாமி, ஒரு காணிநிலமும், இந்த வீடும்தான். இந்த யுத்த காலத்திலே கூட ரூபா 3000 தான் பெறும் அவ்வளவுதான்."

"கவலைப்படாதே! உறுதியான எண்ணங்கொண்டு நான் சொல்லுகிறபடி நீ கேட்பாயேயானால், உனக்கு வெற்றி. யோசனை செய்து சொல்."

" ஸ்வாமி, கடவுள்போல் வந்திருக்கிறீர்கள். தங்கள் உத்திரவுப்படி நடக்கிறேன்."

" இந்த வீட்டையும் அந்த நிலத்தையும் விற்றுவிடு. இதன்மூலம் வரும் பணத்தைக்கொண்டு, தறிச் சாலை ஒன்று ஏற்படுத்து. அதற்கு உன் இஷ்டம்போல் பெயர்கொடு. அதில் அநாதரவாக நிற்பவர்களுக்கும், உன்னைப்போல் வேலையில்லாமல் அலைபவர்களுக்கும் வேலை கொடு. நீயும் பாடுபடு. அதனால் இம்மையிலும் மறுமையிலும் பயனுண்டு.

" ஸ்வாமி, எனக்கும் என்னைப்போல் பட்டாதாரியாகி வேலைக்காக அலைபவர்களுக்கும், அநாதைகளுக்கும் நெசவைப் பற்றி ஒன்றும் தெரியாதே. இவர்களை வைத்துக்கொண்டு நீங்கள் சொல்லும் சேவை எப்படி நடைபெறும் ?"

" அப்பா, எனக்கு நெசவைப்பற்றி நன்கு தெரியும். எனக்கு நீ யாதொரு ஊதியமும் கொடுக்க வேண்டாம். இன்னும் வேலை தெரிந்த இருவர்களைச் சேர்த்துக் கொள்வோம். அத்துடன் ஊரில் உள்ள வேலையற்றோர்களைக் கூட்டி வேலையைக் கற்றுக்கொள்ளச் செய்வோம்.

" நல்ல உணவு உடைகளை வேலையாட்களுக்குக் கொடு. ஆனால் அவர்கள் கையில் பணத்தைக் கொடுக்காதே. மற்றும் அவர்களுடைய நேர்மையான ஒழுங்கான தேவைகளைப் பூர்த்தி செய். வேலையாட்களின் வீடுகளையும் (colony) தொழில் ஆலையையும் ஒரே இடத்தில் வை. உன் விடா முயற்சியால் பெரிய தொழிற் சாலையாக்கு. முயன்றால் முடியாத துண்டா? மண்ணுள் மறைந்து கிடக்கும் விதையினின்றே மரம் உண்டாகிறது. அதேபோல் மனிதனுடைய மனதிலிருக்கும் எண்ணங்களிலிருந்தே அவனது ஒவ்வொரு செயலும் உண்டாகிறது."

" ஸ்வாமி, தங்கள் ஆசியும், கடவுளின் கருணையும் என் முயற்சியை வெற்றியடையச் செய்யட்டும். "

" அப்பா, வள்ளுவர் ஏன் நெசவுத் தொழிலைக் கைக்கொண்டார்? " நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை காண் " என்பதனா லல்லவா? அதுபோல நீ " மானிடர் வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும்" என்ற நினைவுடன் ஆரம்பஞ் செய். உனக்கு வெற்றி."

" ஸ்வாமி......." என்று எழுந்தேன். ஒரே கும்மிருட்டு; இந்த என் கனவு நனவாகுமா?

பிணியாளர்களுக்கோர் தேறுதல்

மேல் நாட்டு மருந்துகளாலும் ஏனைய நம் நாட்டு மருந்துகளாலும் குணமடையாதிருக்கும் "குஷ்டம்" "படை" "மேகப்பற்று" முதலான சரும வியாதிகளுக்கு எமது

கந்தகராஜரஸாயனம்

உறுதியான பலனைக் கொடுக்கிறது

பவுண்டு விலை ரூ. 60—0—0

வாத வியாதி, மாதவிடாய் சம்பந்தமான கோளாறுகள், முதலான எவ்வித நோய்களையும் எமது மூலிகைகளால் செய்யப்பட்ட ஔடதங்கள் கண்டிக்கின்றன.

முழு விபரங்களுக்குத்

அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதுங்கள் :

மானேஜர்:

ஆர்ய வைத்தியசாலை,

கோட்டைக்கல், தென் மலையாளம்.

மூவர் அமுல்

[த்ருஷ்டகர்மா]

அத்தியாயம் 7

வந்த வழி

ரஸம், விபாகம், வீர்யம், ப்ரபாவம் என்று படிப்படியாக அமைந்துள்ள தன்மைகள் ஒரு த்ரவ்யத்தின் காரியத்தை உணர்த்த வல்லவை. வாத பித்த கபங்களை வ்ருத்தியடையவும் இவைகள்தான் சக்தியை யளிக்கின்றன என்று பகுத்தறிந்தார் டாக்டர் சுந்தரம். ரஸங்களில் தித்திப்பு, புளிப்பு, உப்பு இந்த மூன்றும் கபத்தையும் கசப்பு, காரம், துவர்ப்பு இந்த மூன்றும் வாதத்தையும் உப்பு, புளிப்பு காரம் இம்மூன்றும் பித்தத்தையும் பெருக்குகின்றன. மற்றைய மூன்றுகள் முறையே குறைக்கின்றன. இவ்விதம் பொதுவில் கூறப்பட்டாலும் சில திரவ்யங்கள் அவ்வாறு இயங்குவதில்லை. சுக்கு காரம் உள்ளதாக இருந்தாலும் வாதத்தை வ்ருத்தி செய்வதில்லை; குறைக்கிறது. ஏனென்று கேட்டால் அது விபாகத்தில் தித்திப்பு இல்லையா என்று கேட்கிறார்கள். ஆகவே விபாகம் என்பது இரஸம் பக்குவமாகும் பொழுது வேறொரு இரஸமாக மாறுகிறது என்பதைக் காட்டுவதும் தவிர இந்த விபாக இரஸமே இரஸத்தையும் மீறி இயங்கவல்லது என்றும் தெரிகிறது. இதேமாதிரி பல த்ரவ்யங்களும் வெளியில் ஓர் இரஸமும் ஜாடராக்னியினால் ஜீரணிக்கப்பட்டு இறுதியில் வேறொரு இரஸமுமாக மாறுவதைக் கூர்ந்து கவனித்து விபாக ரஸங்கள் மூன்று என்று தொகுத்தார்கள். அவைகளாவன :— தித்திப்பும், உப்பும் தித்திப்பாக பக்குவமடைகின்றன. புளிப்பு புளிப்பாகவே நிற்கும். கசப்பு, துவர்ப்பு, காரம் இவைகள் காரமாக மாறுகின்றன.

இப்படி விபாக ரஸத்தை ஆலோசித்துப் பார்த்தால் கசப்பு, துவர்ப்பு இரண்டும் விபாகத்தில் பொதுவாகக் காரம் என்ற நியதி. காரமோ பித்தத்தையும் வாதத்தையும் வ்ருத்திச் செய்யக்கூடியது ; அப்படிக்கிருக்க, பொதுவில் வாதத்தை வ்ருத்தி செய்கின்றன, பித்தத்தைக் குறைக்கின்றன ; ஏன் என்று கேட்டபொழுது, சீத வீர்யம் உள்ளவைகள் ; இந்த வீர்யம் ஜாடராக்னியினால் த்ரவ்யங்கள் பக்குவப் படுத்தப் படுகையிலும் மாறுவதது. ஆகவே பித்தத்தைக் குறைக்கவே சக்தி படைத்தன என்ற பதில் வரும்.

இதிலிருந்து விளங்குவதாவது :

த்ரவ்யங்களுக்கு இரஸங்களைப் போல் பல குணங்களும் இருக்கின்றன. இவைகள்தான் அவைகளின் சக்தி. இதன் பலத்திலேதான் அவைகள் தோஷங்களை குறைக்கவும் வருத்தியாக்கவும் கூடியவைகளாகின்றன. இந்த குணங்கள் "குரு, மந்தம், சீதம், ச்னிக்தம், ச்லக்ஷ்ணம் (மழமழப்பு), சாந்த்ரம் (நெகிழாமல் நிற்பது), ம்ருதுஸ்திரம், சூக்ஷ்மம், விசதம் (ஒட்டாமல் இருப்பது), லகு, தீக்ஷ்ணம், உஷ்ணம், ரூக்ஷ கரம் (சொர சொரப்பு), த்ரவம், கடினம் (கெட்டி), சரம் (நன்கு தேகத்தில் பரவும் சக்தி), ஸ்தூலம், பிச்சிலம் (கொழ கொழப்பு)" ஆக இருபது என்று வகுத்துள்ளார்கள்.

இந்த குணங்கள்தான் வீர்யம் என்று சொல்லப்படக் கூடியவை. வாத பித்த கபங்கள் இக்குணங்களில் சில படைத்தவை என்பது குறித்து சமான குணங்கள் உள்ள த்ரவ்யங்கள் இத்தோஷங்களைப் பெருக்க சக்தி படைத்தவை என்று கூறப்பட்டது. இவ்விதப் பாகுபாட்டில் பொதுவில் சுலபத்தில் அறியப்படும் இரஸங்கள் இருக்குமிடத்தில் எல்

அழகுப் பொக்கிஷம்

அழகு தானே கலே! அதைத்தான் மைசூர் சந்தன சோப் உங்களுக்கு அளிக்கிறது. நின்று மணக்கும் அதன் துல்லிய மணமும் மேனியை அழகு படுத்திக் காப்பாற்றும் அதன் குணமும் ஒப்பு உயர்வற்றவை.

மைசூர் சந்தன சோப்

கவர்ன்மெண்ட் சோப் பாக்டரி
பெங்களூர்

லாம் ஒரேமாதிரியான குணங்களும் காணப்பட்ட காரணத்தினால் பொதுவாக இக்குணங்கள் இரஸத்தின் குணங்களாக கொள்ளப்பட்டன என்ற விஷயம் ஏற்கெனவே கூறப்பட்டது. அதைத் தொடர்ந்து தொகுத்தால்

தித்திப்பு குரு, சீதம், ஸ்னிக்தம் என்ற குணங்களுடன் தோன்றுகிறது.

புளிப்பு ஸ்னிக்தம், லகு, உஷ்ணம் என்ற குணங்கள் கூடியது.

உப்பு குரு, ஸ்னிக்தம், தீக்ஷ்ணம், உஷ்ணம் கொண்டது.

கசப்பு சீதம், லகு, ரூக்ஷம் கூடியது.

காரம் லகு, ரூக்ஷம், உஷ்ணம் முதலிய குணங்களுடன் சேர்ந்து காணப்படும்.

துவர்ப்பு குரு, சீதம், ரூக்ஷம் இவைகளை சார்ந்திருக்கும்.

ஆகவே இரஸத்தைக் கூறின மாத்திரத்திலேயே ஒரு திரவ்யத்தின் குணங்களையும் ஊகிக்கச் சிறிது முயற்சிசெய்யலாம். இப்படி அறியப்படும் த்ரவ்யத்தின் குணங்கள்தான் வீர்யம் என்று கூறப்படுகின்றன. இவ்வீர்யம் இரஸம், விபாகம் இரண்டையும் கட்டுப்படுத்தித்தான் இயங்க வல்லது.

சில த்ரவ்யங்கள் இந்த வீர்யம் காட்டக் கூடிய வழியில்கூட இயங்குவதில்லை. யவை என்கிற தான்யம் குருகுணம் பொருந்தி இருந்தும், மதுர ரஸமும் விபாகமும் பெற்றிருந்தும், வாதத்தைக் குறைப்பதற்குப் பதில்வ்ருத்தி யாக்கவே உதவுகிறது. இது ஏன் என்று கேட்டால் ப்ரபாவம் என்பார்கள். ஏனோ தெரியாது. அதன் மகத்துவம் அது. அது வந்த வழி என்று கூறலாம்.

இவ்வித விஷயங்களை நன்கு படித்தறிந்த சுந்தரம் சர்மாவை தேடிச் சென்றார். பல சந்தேகங்கள் ஏககாலத்தில் அவர் மனதில் ஏற்பட்டன. ப்ரபாவம் எல்லாவற்றையும் உள்ளடக்கக் கூடியதாக இருக்கையில் ஏன் அனாவசியமாகத் த்ரவ்யங்களின் இரஸம், விபாகம், வீர்யம் இவைகளை அறிய சிரமப்பட வேண்டும்? அப்படியே அவசியம் என்றாலும், அறியும் வகை என்ன என்று ஏக்கமுற்றார். நவீன விஞ்ஞானிகள் விஞ்ஞானஆராய்ச்சியின் அபிவ்ருத்தியில் ஒரு நாள் (சுவை) இரஸத்தையும் (வாசனை) கந்தத்தையும் அளந்தும் பிரித்தும் அறியும் மார்க்கத்தை விளக்குவார்கள். அப்பொழுது இந்த ஜகத்தினுள்ள சகல த்ரவ்யங்களையும் ஆயுர்வேத அறிஞர்கள் எடுத்துக் கையாள உதவுமாறு பதார்த்த குணங்கள் தொகுக்கப்படும். அது வரையிலும் ஏட்டில் உள்ளதை அனுபவஸ்தர்கள் சரி பார்த்துச் சொல்லக் கேட்டு நாமும் அனுபவத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று ஓர் நிராசை பொருந்திய தீர்மானத்திற்கு வந்துவிட்டார். சர்மாவும் தெரிந்தால்தானே சொல்லப் போகிறார்? இது பெரிய தடங்கலாகி விட்டதே என்று ஏங்கினர். வைத்திய சாலையை அடைந்து புன்சிரிப்புடன் வரவேற்றார்.

சர்மா : சுந்தரம், ஒரு நிம்மதியான உண்மையை நான் கண்டுகொண்டேன். நீதான் அதைப் புலப்படச் செய்தவன். உனக்கு வந்தனம்!

சுந்தரம் : என்ன ! எனக்கொன்றும் புரியவில்லையே. பெருங் குழப்பம் உங்களாலும் தெளிவாக்க முடியாதென்று வருகிறேன். நீங்கள் பெரிய உண்மை என்கிறீர்களே; அவ்வளவு சுலபமாகவே புலப்பட்டு விட்டது!

சர்மா : ஆம். ஈச்வர மாயை எவ்வளவு பெரியது, தெரியுமா? அதைக் கடப்பது கஷ்டம். அது இன்னது என்று கூறுவதும் கஷ்டம், அறிவதும் கஷ்டம். ஆனால் அதைக் கடந்தால் ஒழிய ப்ரும்ம சாக்ஷாத்காரம் இல்லை. பெரியவர்கள் ஏதோ வழியை எல்லாம் எழுதி வைத்திருக்கிறார்கள். ஆனால் நம் போன்றவர்களுக்குப் புரிய மாட்டேனென்கிறது. இந்த மாயை கிடக்கட்டும். வேறு காரியங்களைக் கவனிப்போம் என்றுவதுபோக முடிகிறதா? ப்ரும்ம விசாரணை வேண்டாம் என்றால் அப்படிச் செய்யலாம். ஆனால் இப்பிறவி என்கிற வியாதியை (பவரோகத்தை) களைந்தெறிய வேறு மார்க்கமும் இல்லையே. என் செய்வது! திருப்பித் திருப்பி மாயை என்னவென்று

வேறு அலுவல்கள் இல்லாத

வீட்டு வேலை, சமூக சேவை இல்லாத ஒவ்வொரு பெண்ணும் தற்சமயம் பெண்கள் ஆகஸிலியரி கோர் (இந்தியா) விற்கு தேவையாய் இருக்கிறது. 17 முதல் 50 வயதுக்குள்ளும் ஆங்கிலம் நன்கு எழுதப் படிக்கத் தெரிந்திருக்கும் பெண்கள் மட்டிலுமே விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும். நல்ல சம்பளம். வேலை சுவாரஸ்யமுள்ளது.

வாசத்தின் தன்மை. பொது சேவையி லிருக்கும் W. A. C. (I) கள் தாங்களே W. A. C. (I) மெம்பர்களான பொறுப்பு வாய்ந்த பெண்களின் மேற்பார்வையில் இருக்கும் வசதியுள்ள ஹாஸ்டல்களில் குடியிருக்கச் செய்கிறார்கள்.

சமாதானம் சமாதானம் திரும்ப ஏற்பட்டதும் விரோதிகளிடமிருந்து நிபந்தனையற்ற சரணடைதலைப் பெறுவதற்குத் தங்களால் இயன்றதைச் செய்த இந்த இந்திய பெண்களுக்குத்தான் சமாதான பலன்களை அனுபவிக்க பெரும் பாத்தியதை உண்டு.

யுத்தத்திற்கு பிற்காலம். வியாபாரத்திலும் கைத்தொழிலிலும் இந்தியா அதி தீவிரமாக முன்னேறி வருகிறது. நிலைமை சமாதானத்திற்கு வந்ததும் சில உத்தியோகங்களுக்கு அநேக நன்குதேர்ச்சி பெற்ற ஆணும் பெண்ணும் தேவையாய் இருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. W.A.C. (I) யில்பெறும் பயிற்சியும் இந்த கோரில் வேலை செய்யும் சமயம் பெறும் அனுபவமும் அனேக பெண்களுக்கு யுத்தமில்லாத காலத்தில் வெற்றிகரமான ஜீவனோபாயம்பெற தேவையான யோக்யதாம்சங்களையும் நிர்வாக அனுபவத்தையும் கொடுக்கிறது.

விண்ணப்பித்துக்கொள்ள வேண்டிய முறை: உத்தியோகத்தின் நிபந்தனைகள் இன்னும் மற்ற விவரங்களையும் W.A.C. (I) யின மெம்பர்களான A.T.R.O'S/W.A.C. (I) களிடமிருந்து ஒருவித நிபந்தனை யின்றியும பெறலாம். உங்களுக்கு வேண்டிய W.A.C. (I) யைப்பற்றிய சகல தகவல்களையும் கொடுப்பதற்கு இந்தப் பெண்கள் ஆவலாய இருப்பார்கள்.

A.T.R.O'S/W.A.C. 1 விலாசங்கள்:

பம்பாய் A.F.I. பில்டிங், ஹாஸ்பிட்டல் லேன், டோபிடலாவ்.

கல்கத்தா C/O D.T.R.O. 28, தியேட்டர் ரோட். **லக்னோ** C/O T.R.O. ஈஸ்டர்ன் ஹைஸரத்கஞ்ச். **பாட்னா** C/O D.T.R.O. எக்ஸிபிஷன் ரோட். **ராவில்பிண்டி** க்வைன் தாமஸ் ரோட். **பெங்களூர்** கன்டோன்மென்ட் கப்பன் ரோட், **லாகூர்** 22, டேவிஸ் ரோட். **பூனா** ஸ்டார்ன்டன் ரோட். **மதராஸ்** 3/18 மவுன்ட் ரோட்.

பெண்கள் ஆக்ஸிலியரி கோர் (இந்தியா) வில் சேருங்கள்

AAA 1594 TM

விசாரித்து விலக்க வேண்டுமே ஒழிய ஒடிப்போக முடியாது. நாம் வந்த வழி எது என்று தேடத் தேட, ஜோதியொன்றுதானே உள்ளத்தில் விளங்கும். கருமேகத்தின் மத்தியில் மிக்க சிறிய மலரிதழையும்விட நுட்பமாய் ஸ்வர்ண மயமாகத் தோன்றும் அந்தஜோதி வளர்ந்து அகிலத்தையும் வ்யாபிக்கும். மும்மூர்த்திகளை அங்கு காணலாம். ஒரே மூர்த்தி பலராக விளங்கும் உண்மையையும் காணலாம். விராட் புருஷன் தோற்றமளிப்பான். அதேபோல்...........

சுந்தரம் : அதேபோல் த்ரவ்யங்கள் வந்த வழி பஞ்ச பூதத்தினிடமிருந்து என்று கூறியுள்ளார்கள். பூதங்களின் குணங்களைக் கூறியுள்ளார்கள். இப்பூதங்கள் எவ்வாறு ஒன்றோடொன்று சேர்ந்து, பல பொருள்கள் உண்டாகின்றன என்றும் கூறியுள்ளார்கள். உதாரணத்திற்காகப் பல பொருள்களின் குணதிசயங்களையும் கூறியுள்ளார்கள். இந்த விஷயங்களை வைத்துக்கொண்டு ஆயுர்வேததத்துவங்களைக் கிரகித்துக்கூடுமான வரையில் நடைமுறையில் உபயோகிக்கப் பாடுபடவேண்டுமே யொழிய புதிய புதிய வஸ்துக்களின் குணதிசயங்களைக் கண்டுபிடிக்க மார்க்கம் புலப்படும் வரையில் சாஸ்திரத்தை உபயோகப்படுத்தமாட்டேன் என்று கூறுவது வீண் பிரமையினல் ஏற்படும் கோழைத்தனம். சர்மா, நீங்கள் என் மனத்தில் இருந்த குழப்பத்தை ஆணித்தரமான உபமானத்தால் அகற்றிவிட்டீர்கள். ஈசுவராம்சம் உங்களிடம் மிகுந்து இருக்கிறது.

சர்மா : அதிகம் புகழாதே, சுந்தரம்! உன்னைப்போன்ற தீக்ஷ்ண புத்தியுள்ள ஒரு மாணக்கனுக்குப் போதிக்க சங்கல்பம் செய்துகொண்டு விட்டால், பிரும்ம விசாரணை செய்வது தவிர வேறு என்ன செய்யலாம் சொல்! அந்த தியானத்தில் உண்மை அறிவு புலப்படும். உலக வ்யவகாரங்களில் அதைப் பிரயோகித்தால் விஞ்ஞான வளர்ச்சியாகிறது.

ஆகவே எனக்குப் பட்டதைச் சொல்லுகிறேன், கேள். இன்றைய தினம் ஒரு த்ரவ்யத்தின் ரஸத்தையோ, விபாகத்தையோ, வீர்யத்தையோ, ப்ரபாவத்தையோ சொல்லை நம்பி நாம் அறியலாம். சிறிது உபயோகப்படுத்தப்படும்பொழுது கூர்ந்து கவனித்து அறிய முயலலாம். ஆனல் ஒரு தீர்மானமான ஆராய்ச்சியினல் அறிய அந்த முறைகளை அறிவாளிகள் இன்னும் நமக்கு வகுத்துத் தரவில்லை. பெரியோர்கள் "ஞானத்ருஷ்டி" யினல் அறிந்தார்கள். ஆனல் அந்த ஞானத்ருஷ்டி என்பது என்னவென்று கூட நாம் அறியும் நிலையில் இல்லை. இவ்வித நிலையில் கிடைத்த வரையினும் ஆதாரம் என்று ஒவ்வொருவரும் சாஸ்திர விசாரத்தில் இறங்கவேண்டியது தான்.

சுந்தரம் : நீங்கள் சொல்லுவது உண்மைதான். ஆகினும் எவ்வாறு விசாரம் செய்வது?

சர்மா : நவீன விஞ்ஞானிகள் இரஸாயன பௌதிக சாஸ்திரங்களில் முன்னேறிச் செல்லச்செல்ல பஞ்சபூதங்களை அறியும் நிலையை அடைந்துவிடுவார்கள். அப்பொழுது இரஸாயன ஆராய்ச்சிக்கு இப்பூதங்களும் கட்டுப்படும். பெரிய நக்ஷத்திரங்களின் எடைகளை அறிய ஓர் தராசு கண்டுபிடித்தவர்களுக்குப் பூதங்களை யறிய ஓர் ஆராய்ச்சிசாலையும் உபகரணங்களும் இந்த மனிதன் ஹ்ருதய ஆகாசம் ஒன்றுதான் என்கிற துணிபு வரும். அப்பொழுது நாம் அறியமுடியாமல் தவிக்கும் ஞானத்ருஷ்டியை விஞ்ஞானிகள் நமக்களிப்பார்கள். புதியதத்துவத்தைக் கண்டுபிடித்தவர்களுக்குத் தத்காலம் பட்டமளிப்பதுபோல் அப்பொழுதும் பட்டம் கொடுக்கப்படும். அவர்கள் ரிஷிகள் ஆவார்கள்.

இப்பொழுது நடக்கக் கூடியதைச் சொல்லுகிறேன், கேள். புஸ்தகத்தில் உள்ளதை வைத்துக் கொண்டு நவீன வைத்தியர்கள் த்ரவ்யகுணங்கள் சொல்லுவதையும் எடுத்துவைத்துக்கொண்டு ஒப்பிட்டு ஆராய்ச்சியை நடத்துவோம். எங்கெங்கு ஆயுர்வேத பரிபாஷைகள் கொண்டு நவீன ஔடத த்ரவ்யங்களை விளக்க முடியவில்லையோ அங்கெல்லாம் அவைகளின் வந்த வழி புரியும் வரை

விளம்பர யுகம்

(188-ம் பக்கத் தொடர்ச்சி)

காலச் சிறப்புகள் என்ன என்று நாம் அவைகளிலிருந்து நன்கறியலாம். உதாரணமாக, ஒரு விளம்பரம் கூறுகின்றது. "இருபது வயதுள்ள பிராமணப் பெண். நாட்டியம் அபிநயம் தெரிய வேணும். வரனுக்கு வயது 35. நாட்டிய அபிநயத் தேர்ச்சியுள்ளவர்."

இது மட்டுமல்ல. கிரிக்கெட் பந்தாட்டம், டென்னிஸ் பந்தாட்டம், ஆடல் பாடல், மதுபான விசேஷங்கள், சினிமா நட்சத்திரங்கள், மோட்டார் வண்டிகள், நிலங்கள், வீடுகள், காந்தி ஜோஸ்யர் முதலிய ஜோதிஷப் பிரமுகர்கள், மில்கள், பாங்கிகள், கம்பெனிகள், மின்சார விளக்குகள், மின்சார விசிறிகள், யந்திரங்கள், மந்திர ரக்ஷைகள் என்று சொல்லிக் கொண்டே போனால் ஹனுமார் வால் போல் நீண்டுகொண்டே போகும். விளம்பர உலகத்தில் உட்படாதது எதுவாகிலும் உண்டா? இல்லவே இல்லை. இருக்க முடியாது. இதைப்பற்றி நினைக்கும்பொழுது ஒரு சிறிய பழங்கதை நினைவுக்கு வருகின்றது. ஒரு சிறுவன் மற்றொரு சிறுவனை கடவுள் உள்ள இடத்தைக் கூறும்படி கேட்டான். இரண்டாவது சிறுவன் முற்கூறிய சிறுவனை கடவுள் இல்லாத இடத்தைக் கூறும்படி கேட்டான். அப்படியே நானும் வினவுகின்றேன்: விளம்பரத்திற்கு உட்படாத பொருளைக் கடவுளால் சிருஷ்டிக்க முடியுமா? அவருடைய உற்சவங்களுமே விளம்பர வலையில் சிக்கியிருப்பதை மறுக்க முடியுமா, மறக்க முடியுமா?"

யிலும் நீங்கள் ஆராய்ந்தறிந்த குணாதிசயங்களை ப்ருபாவம் என்று நாமம் சூட்டி ஸ்வீகாரம் செய்வோம். பிறகு ஞானம் பெருகும்பொழுது ரஸம், விபாகம் வீர்யம் என்று பிரித்துச் சொல்லுவோம்.

சுந்தரம்: பேஷ். சரியான சமரஸம். அபிவிருத்திக்கு உண்மையில் உதவும் யோசனை உங்கள் வந்தவழி விமர்சனம்.

வாழ்க்கையிலே முக்கியமான வாலிபப் பருவத்தினராக இன்று நீங்கள் இருக்கிறீர்கள். நாள் முழுதும் வேலை செய்தாலும் குதூகலமாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறீர்கள். இது நீங்கள் இந்த வாழ்க்கையை விரும்புவதால் தான்.

ஆனால் எதிர்கால, அதாவது 25 வருஷங்களுக்குப் பிறகு, நீங்கள் வாழ்க்கையை எப்படி விரும்புவீர்களென யோஜித்ததுண்டோ?

நீண்ட மும்முரமான வாழ்க்கைக்குபின், பாசமற்ற, நிம்மதியான வாழ்வை அமைதியாக ஓரிடத்தில் கழிக்க விரும்புவீர்கள்.

இதற்கு நாங்கள் யோசனை கூறுகிறோம்

விவரங்களுக்கு:

நேஷனல்

இன்ஷூரன்ஸ் கோ., லிட்.

* * *

நெருப்பு, விபத்து, மோட்டார், மற்றும் சகல விதமான இன்ஷூரன்ஸ்களுக்கு

நேஷனல் பயர் அண்ட் ஜெனரல் இன்ஷூரன்ஸ் கோ., லிட்.

7, கௌன்ஸில் ஹவுஸ் தெரு — கல்கத்தா.

மதராஸ் பிராஞ்சு:

'நேஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்'

362, சைனா பஜார் ரோட்—எஸ்ப்ளனேட்

சப் - ஆபீஸ்கள்: பெங்களூர் & மதுரை

துரைத்தன விற்பனை நிலையம்

திருவனந்தபுரம்

*

பெயர்பெற்ற திருவாங்கூர் குடிசை தொழில் உற்பத்தி பொருள்களை வாங்க உகந்த இடம்.

*

எழுத வேண்டிய விலாசம் :

தொழில் இலாகா டைரெக்டர்,

திருவனந்தபுரம்,

திருவாங்கூர்.

பூனை வால்

[சூடாமணி]

முன்னொரு காலத்திலே பூனைகள் நடை உடை நாகரிகக் கலாசாலையில் பட்டம் பெற்றுப் பண்டிதசிரோமணி ஆகிறதற்காகப் படிக்கச் சென்றன. அந்தப் பள்ளிக்கூடத்தில், அந்தப் பூனையைப் போல் வேறு எத்தனையோ பூனைப் பெண்களும் பூனைப்பையன்களும் படித்துக் கொண்டு இருந்தார்கள். ஒரு நாள் பூனை நாகரிகக் கலாசாலையிலே நாகரிகப் பாடம் நடத்தற வாத்தியார், மாணுக்கர்களைப் பார்த்து,

> " மாணவர்களே இந்த உலகத்து நாகரிகப் போக்குக்குக் காரணமாக இருக்கிறவர்கள் மூன்று பேர்கள். அவர்கள் அம்பட்டன், தையல்காரன், நெசவுகாரன். நீங்கள் முக மேனி மினுக்கு சாஸ்திரங்கள் எல்லாம் கற்றுவிட்டீர்கள். ஆனல், உங்கள் நாகரிகப் போக்கெல்லாம் இப்போது நான் சொன்ன மூன்று பேர்களிடத்திலே தான் இருக்கிறது. நீங்கள் உங்கள் இஷ்டப்படி அவர்கள் காலந்தோறும் புகுத்துகிற உடவேற்றுமைகளை ஏற்றுக்கொண்டு உங்கள் பட்டங்களைப் பெறலாம் "

என்று கடைசி பிரசங்கத்தைப் பண்ணி முடிச்சார்.

பூனைகள் எல்லாம் நாகரிக சாஸ்திரத்திலே தேர்ச்சி பெற்றுத் திரும்பிவந்தன. அந்தப் பூனைகள், தினந்தோறும் பல தடவை முகங்களை மினுக்கிக் கொள்ளும். தங்கள் உடம்பை எல்லாம் நல்லா ப்ரஷ் பண்ணிக்கொள்ளும். எப்போதும் ரொம்ப சுத்தமாக ரொம்ப ஸ்டைலா நடக்கும். ஆனா, அந்தக் கலாசாலையிலே படிச்ச பெண் பூனைகளுக்கெல்லாம் தங்கள் மீசைகளைப்பற்றி ரொம்ப வெட்கமாக இருந்தது. ஆண் பூனைகள் பெண் பூனைகள், இதற்கு என்ன செய்யலாம் என்று யோசிச்சது. கடைசியா, அம்பட்டனிடத்திலே போய் தங்கள் மீசைகளை எல்லாம் நன்ரு வழுக்கையாகச் செரச்சுண்டு வந்துடணும் என்று தீர்மானம் பண்ணித்து. அந்தத் தீர்மானத்தின்படியே பூனைகள் அம்பட்டனிடம் போய்த் தங்கள்மீசைகளைச் செரச்சுண்டு வரத் தொடங்கித்து. அப்படி இருக்கிறபோது, ஒருநாள் ஒரு பெண் பூனை ஒரு அம்பட்டனிடம் தன் மீசையைச் செரச்சுக்கறத்துக்காக வந்தது. அந்த அம்பட்டன், அந்தப்பூனையிடம்,

> " பூனை அம்மா, பெண் பூனைகளுக்கு வால் அழகே இல்லை. வாலை ஒட்ட வெட்டிட்டா, ஆண் பூனைகள் ஒங்களை ரொம்ப மரியாதை பண்ணுவா."

என்று சொன்னன். அந்தப் பெண் பூனைக்கு ரொம்ப அழகான வால் இருந்தது. முதலிலே அந்தப் பூனைக்குத் தன் வாலை இழக்கறத்துக்கு இஷ்டமே இல்லை. ஆனலும், ஆண் பூனைகள் தன்னை மற்றெல்லாப் பூனைகளிலும் அதிகமாக மதிக்கிறத்துக்காக ஆசைப்பட்டு, சரி தான் என்று சம்மதிச்சுது. அந்த அம்பட்டன், அந்தப் பெண் பூனையின் வாலை ஒட்ட அறுத்துவிட்டான். அந்தப் பெண் பூனை தன்னைக் கண்ட ஆண் பூனைகள் ரொம்ப மதிப்பா என்று நினைச்சுண்டு, ஆண் பூனைகள் முன்னே ரொம்பப் பெருமையா நடந்தது. ஆண் பூனைகள் எல்லாம், 'அட, இதென்ன? மகா அவலக்ஷணமாக

இருக்கே' என்று அதைக் கண்டவுடனே விலகிப்போய் விட்டன. அப்போ இந்தப் பெண் பூனை,

"ஐஐயோ! அந்த அம்பட்டன் பேச்சைக் கேட்டு வாலை இழந்து தன் மதிப்பிழந்தேனே. இனி என்ன செய்யலாம்? அந்த அம்பட்டனிடம் போய், அறுந்த வாலையும்கத்தியையும்வாங்கிண்டுவறேன்.

என்று சொல்லிண்டே அம்பட்டனிடம் வந்தது. அப்போ அம்பட்டன் எங்கேயோ வெளியே போயிருந்தான். அது நல்ல சமயந்தான் என்று நினைச்சுண்டு, தன் வாலையும் கத்தியையும் எடுத்துண்டு வந்தது. சாயங்காலமாயுடுத்து, இரவும் வந்தது. பூனைக்ள் எல்லாம் தங்கள் எலி வேட்டை உத்தியோகங்கள் எல்லாம் முடிச்சுட்டு, பொழுது விடியற நேரத்திலே அடுப்பங்கரை, சந்து பொந்து கூரைகளிலே சுருண்டு மடங்கிப் படுத்துத் தூங்கப் போய்விட்டன. அப்போ வால் இழந்த பூனை, அதுதான் சரியான சமயம் என்று நினைச்சு படுத்துண்டு இருந்த பெண் பூனைகள் வாலை எல்லாம் ஒழுங்கா ஒட்ட வெட்டி எடுத்து மூட்டையாகக் கட்டிக்கொண்டது. அப்போ வாலிழந்த பெண் பூனைகள் எல்லாம் அதைக் கொல்லறத்துக்காக அதைத் தொடர்ந்து ஓடித்து வாலைச் சொமந்துண்டு ஓடின பூனை, போகும் போதே,

"இந்தா ஒன் வால்! இந்தா ஒன்வால்!" என்று சொல்லிண்டே, காம்பு நிலத்திலே எல்லாம் எறிஞ்சுண்டே போச்சு. அப்படி எறிஞ்ச வாலை எடுக்கப் பெண் பூனைகள் போனபோது, வால் விழுந்த இடத்திலே எல்லாம் ஒரு விதமான புல் முளச்சுது. அந்தப் பெண் பூனைகள் அங்கேயே தங்கள் வாலை நினைச்சு அழுதுண்டே இருந்தது. அப்போ, அந்தப் புல்லிலே இருந்து, பூனை வாலாட்டமாக் கதிகள் கிளம்பின. அதைக் கண்டவுடனே பெண் பூனைகள் எல்லாம் தங்கள் வால்கள் தான் முளைச்சு வந்துடுத்து என்று சந்தோஷப்பட்டுண்டு இருந்தது. அப்போ, சில மனிதர்கள் வந்து அந்தப் புல்லை எல்லாம் அறுத்துத் தொடப்பமாகக் கட்டி அதை தெருத்தெருவாகக் கொண்டு போய் தொடைப்பம் வாங்கலையோ தொடைப்பம் என்று கூவி வித்தா. அப்போ வீட்டிலே இருந்த பாட்டிமார்கள் அம்மாமார்கள், அதை வாங்கினா. அவா, அந்தத் தொடைப்பத்தாலே வீடுகளைப் பெருக்கத் தொடங்கினா. ஆனால், எந்தப் பூனையாவது தங்கள் வால் போனத்தைப் பத்தி ரொம்பத் துக்கப்பட்டு, மியாவ்! மியாவ்! என்று கத்தினாலே, அதே பூனவால் தொடைப்பத்தாலே, அந்தப் பூனைகளையும் பூனைக் குட்டிகளையும் அடிச்சு வெளியே தள்ளி, 'ஓயாமல் வீட்டுக்குள்ளே இருந்து கத்துகிறாயா?' என்று சொல்லி ஓட்டிடுவா. இப்படியா, பெண் பூனைகள் தங்கள் நாகரிகத் தேர்ச்சியாலே தங்களையே அடிச்சுத் தொரத்தும்படி தொடைப்பத்துக்காக வாலைக் கொடுத்துவிட்டன. கதை முடிஞ்சுது. கத்திரிக்காயும் காச்சுது.

Estd. 1904

விஜயபுரம்

K.T.R.

புகழ்பெற்ற

பன்னீர் தினுசுகள்

குளிர்ச்சியுடைய

சந்தனாதி & அரைக்கீரை விதைத் தைலங்கள், ஹேராயில்

கிருஷ்ண அகர் பத்தி; ராஜா பற்பொடி

மார்க்கெட்டில் நற்கியாதி வாய்ந்தது

எங்கும் கிடைக்கும்

TELE Ketior

சித்தௌஷதங்களின் தெய்வீக தன்மை

பல்வேறு வகைகளிலும் முயற்சி பலிதமாகாத கஷ்ட சாத்யமான வியாதிகளிலும் குணம் கொடுக்கும் சாதனங்கள்

பெருமைக்குரியவை! நிலைமை பெறுபவை! குணமளிப்பவை!

நவதாம்பிரம் :

கை கால் முடக்கல், பிடிப்பு, சதை பிரட்டல், வாதம், தலை சுற்றல், இரத்தக் கொதிப்பு, மேகப் படைகள், நீர் சம்பந்தமான தடிப்புகள், உணர்ச்சி இன்மை, ஸ்திரீகளின் மேதஸ் விருத்தி, சூதகவாயு கோளாறுகள் நரம்பு ஸ்தானங்களின் பலஹீனத்தாலும் (Motor and sensory nerves) கெடுதலடைந்து உண்டாகும் அபஸ்மாரம் முதலிய வியாதிகளிலும் குணம் அளிக்கின்றது. அடியிற்கண்ட அத்தாக்ஷிகள் அதன் மதிப்பை விளக்கும் :

பாரிசவாதம்—Paralysis

தஞ்சாவூர் போலீஸ் 1114 ஸ்ரீ இராமசாமி அய்யர் அவர்கள் 15-10-38-ல் எழுதுகிறார் : தங்கள் நவதாம்பிரம் விஷமுஷ்டி தைலம் இவைகளால் நான் பூரண குணமடைந்தேன். என்னைக்கொண்டு என் பூரண சௌக்கியத்தைப் பார்த்து சந்தோஷப்படாதவர்கள் இல்லை. தஞ்சை - D. M. O. அவர்களால் பரிசோதிக்கப் பட்டு நான் பூரண சௌக்கியம் அடைந்து விட்டதாக கவனித்து என்னை வேலைக்கு போகும்படி உத்திரவிட்டதன்பேரில் இப்பொழுது வேலையில் இருக்கிறேன்.

கீல் வாயு-வாயு பிடிப்புகள்—Rheumatism (acute)

எவனதல்குடி (Retired Deputy Collector) ஸ்ரீ P. கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள், B. A. 3-8-40ல் எழுதுகிறார் : எனது குமாரன் இப்பொழுது பூரணகுண மடைந்து சௌக்கியமாக இருக்கிறான். (நவதாம்பிரம் விஷமுஷ்டி தைலம் இவை களின் உபயோகத்தால்) என்பதை சந்தோஷத்துடன் தெரிவிக்கின்றேன்.

சதை பிரட்டல்—Muscular Twitching

சீயாழி - மிராசுதாரர் & கன்ட்ராக்டர் ஸ்ரீ மூவேலி நடேச அய்யர் அவர்கள் எழுதுகிறார் : கெண்டைக் கால் சதையில் சதை பிரட்டல் என்று நினைத்து அநேகம் சிகிச்சைகளில் கட்டுப்படாத சிரங்காக ஆகக்கூடிய வீக்கம் வலி முற்றிலும் வடிந்து நவதாம்பிரத்தால் பூரண குணத்தை அடைந்துவிட்ட சந்தோஷ சமாசாரத்தை தெரிவிக்கின்றேன்.

காக்கை வலிப்பு—Epileptic Fits

(Diseases of the nervous system)

தஞ்சாவூர் - Retired Police Inspector ஸ்ரீ இரத்தினகிரீச அய்யர் அவர்கள் 31-5-43ல் எழுதுகிறார்: * * * எங்கள் அதிர்ஷ்ட வசத்தால் சீயாழி கோபால ஔஷதாலயம் டாக்டர் T. M. நாராயணசாமி அய்யர் அவர்களால் அவர்களின் நவதாம்பிரம், ஸாரிபா, விஷமுஷ்டி தைலம் இவைகளின் உபயோகத் தால் பூரணமான குணமடைந்து இப்பொழுதும் சௌக்கியமாக இருக்கிறான்.

விமர்சனம்

தினமணி வெளியீடுகள்

[டாக்டர் டி. வி. இராதாகிருஷ்ண சாஸ்திரி]

இலக்கிய ஆலோசனையாளர்களின் உன்னத கூட்டுறவுடன் ஆசிரியர் பி. ஸ்ரீ. அவர்களால் பதிப்பித்து வெளி வரும் இவ்விதழ்கள் தமிழ்நாட்டிற்கு அரிய ஸேவை என்று மதிக்கப்பட வேண்டியவை. எல்லா புத்தகங்களுமே உயர்ந்த நோக்கம் கொண்டு அனைவரும் படித்து மகிழும் வண்ணம் இயற்றப் பட்டவைகள். பலர் எழுதியுள்ள இப் புத்தகங்களில் ஓர் அம்சம் பொதுவில் விளங்குகிறது. நம் நாடு நலம் பெற எல்லாத் துறைகளிலும் மேம்பாடடைய உதவும் விஷயங்களைப் போதிக்க வேண் டும். இந்த ஒரே நோக்கம் அனைவரையும் இயக்குகிறது. இவ்விதம் பலரையும் ஒன்றுகூட்டி ஆசிரியர்களின் ஸத்லங்கம் ஒன்றைக் கூட்டுகிறார்கள் தினமணி வெளியிட்டார்கள் என்று சொல்லுவது மிகையாகாது.

இலக்கியத் துறையில் தெளிவான உணர்ச்சியை யூட்டும் வகையில் அமைந் தது. வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி களின் "நவரஸங்கள்" உணர்ச்சி பெருக் கில் ஊறுவது இன்பம். இதை யனுப விக்கும் வகையால் உணர்ச்சியைப் பெருக் குவதே காவியத்தின் கைங்கர்யம். லோகமும், வீரமும், ஹாஸ்யத்தைப் போலவே இன்பம் பயப்பது என்றவை போன்ற உண்மைகளை விளக்கிக் காட்டி ஒன்பது வகையில் இன்பம் சுரக்கச் செய் கிற ஒன்பது இரஸங்கள் என்று நம் தமிழ் எழுத்தாளர்களின் கவனத்தைக் கவர்கிறார்.

சரித்திர சித்திரங்களில் ஒன்றை யொன்று மிஞ்ச முடியுமா என்று போட்டியிடும் வகையில் அமைந்தன. கபீர்தாஸர், தளவாய் தாத்தா, தஞ்சை நாயக்கர், மௌலானா ஆஜாத் ஆகிய கிரந் தங்கள். கோ. கிருஷ்ணமூர்த்தி விவரிக் கும் கபீர்தாஸர் சரித்திரம் பாமரர் களுக்கும் ஆன்மஞானமும் சமரஸ புத்தி யும் சித்திக்கும் வகையில் அமைந்துள் ளது. ஆராய்ச்சி மனப்பான்மையுடன் வாசிப்பவர்களுக்கும் மிக்க உதவும் வகை யில் சித்தரித்திருக்கிறார்.

ஸ்ரீ. எம். எஸ். சுப்பிரமணிய அய்யர் தீட்டிய சரித்திர வரலாறுகள் தளவாய்த் தாத்தாவும், தஞ்சை நாயக்கரும் தேச பக்தியும் நிர்மாண சக்தியும் தமிழன் உள்ளத்தில் கங்குகரையில்லாமல் பாய வேறு சாதனங்களும் வேண்டுமோ! எக் காலத்திலும் பெரியோர்கள் ஒரே வகை யினர். அவர்கள் வேலைத்திறனும் ஒரே மாண்புடையது என்று அறிய இச்சரித்திரங்களில் காண்கிற அரிய நாயகரின் தொண்டின் பெருமையையும் கோவிந்ததீக்ஷிதரின் கைங்கரியத்தின் திறனையும் ஊன்றிப் படிக்கவேண்டும்.

ஆர். தாஸ் அண்ட் கோ.

எஸ். பி. டில்லி

உயர்தர கடியார பட்டைகள்

உற்பத்தி செய்பவர்கள்

மொத்தமாய் வாங்கக்கூடியவர்கள் தேவை

இல்லாதவிடங்களில் ஏஜண்டுகள் தேவை

R. DASS & Co.

S. B. DELHI

Makers of
High Class Watch Bands

Enquiries from Wholesale Purchasers Solicited

(Agency open for unrepresented areas)

பாரதியாரின் தமிழ் நாடு நம் கண்களுக்கு முன் மறுபடியும் காட்சியளிக்கும். மூச்சினிலே ஒரு சக்தி பிறக்கும். ஆசிரியர் சுப்பிரமணிய அய்யர் ஒரு தேச பக்தர் என்று இப்புத்தகங்களே சாக்ஷி சொல்லும்.

ஸ்ரீ எம். எம். இஸ்மாயில் எம். ஏ. நமக்களித்திருக்கும் "மௌலானு அஜாத்" என்ற புத்தகம் தற்காலம் மிக்க பயன்படக்கூடியது. நடை, விஷயம் எல்லாம் மனதைக் கவரும். ஹிந்து முஸ்லிம் சமரஸம் ஏற்பட ஆஜாத்தின் வாழ்க்கையைச் சகலரும் படித்துணரும் படி விவரித்து எழுதுவதே ஒரு பெருந் தொண்டாகும். எவ்வளவு அந்தரங்கச் சுத்தியுடன் மௌலாஞ ஆஜாத் இந்தியா பூராவும் இஸ்லாம் ஆக வேண்டும் என்கிறார். உலகத்திலுள்ள எல்லா மதமும் இஸ்லாமே! அவருக்கு மத மாற்றம் அவசியம் இல்லை. தூய வாழ்வே இஸ்லாம் போதிப்பது. சத்தியாக்கிரகம் குரான் போதிப்பது என்றெல்லாம் சொல்லுகையில் சமரஸ பாவம் உச்ச நிலையை அடைகிறது. தண்டனை ஏற்கையில் விடுத்த மாஜிஸ்ரேட்டிற்கு அறிக்கை ஒரு வேத ஸாரம். படிக்கப் படிக்க உணர்ச்சி பொங்கும். அந்த சமயம் நாம் ஆஜாத் என்றே எண்ணுவோம். இஸ்மேயிலின் எழுத்தின் திறமையா, ஆஜாத்தின் வாழ்க்கையின் பெருமையா? படிப்பவர்கள் இரண்டும்தான் என்போம்.

தேசிய ஸ்வதந்திரத்திற்கு உழைப்பவர்கள் பிற நாடுகள் முன்னேற்றம் அடையும் வழிகளையும் அவசியம் படித்துப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அப்படிப் பெரும் போர்களைப்போல் சரித்திர புத்தகங்கள் குவிந்திருக்கையில் படிப்பதற்குப் பிரமைத் தட்டும். இதை நன்குணர்ந்தே தமிழர்களுக்கு உதவ வி. எஸ். நாராயணன் அவர்கள் "வீர ரஷ்யா" (இரண்டு பாகங்கள்) என்று நமக்களிக்கும் புத்தகத்தில் ரஷ்யர்கள் நிலையை படிப்படியாக நன்கு விவரிக்கிறார். நம் தேசத்தைப் போலவே பல பூசல்களும் ஊழல்களும் மிளிர்ந்திருந்த ரஷ்யாவை உறுதியான கொள்கைகளைக் கடைப்பிடித்த லெனினும் ஸ்டாலினும் எவ்விதம் ஆச்சரியப்படும் விதமாக வீர ரஷ்யாவாக்கி இருக்கிறார்கள் என்று விளக்குகிறார். அவர்கள் தேடிய ஸ்வதந்திரத்தைக் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையில் சிருஷ்டித்துக் காப்பாற்றப் பயன்படும் வகையில் எவ்வாறு சமூகத்தைத் திருத்தி யமைத்தார்கள் என்று விளக்குகிறார்.

வி. மஹாலிங்கம் எம். ஏ., அவர்கள் சித்தரித்துள்ள 'ஐசுவரிய அமெரிக்கா' இவ்வித கைங்கர்யத்தில் மற்றுமொரு சான்று. அமெரிக்கா நாட்டில் செல்வம் பெருகிய விதமும் ராஜ்யம் உருவாகிய விதமும் தெளிவாக நமக்கு விளக்கப்படுகிறது. அனைவரும் படித்துப் பயன் பெறலாம்.

இவ்வாறு உணர்ச்சியையும் முறைகளையும் பெறும்படியான புத்தகங்கள்

M.R.S. & CO.

MAYAVARAM

DRINK M. R. S.'s

SWEET AND COOL DRINKS FOR VITALITY AND FRESH ENERGY. WATER STERILISED. HYGENICALLY PREPARED.

Sole Prop:

M. R. SUBRAMANIYAM,

Mayavaram.

Bharata Mani—April 1945

ஒருபுறமிருக்க நாம் தற்காலம் எத்திசையிலும் பார்க்கும் யுத்தத்தின் கொடுமை தாங்கக்கூடியதாக இல்லை. இவ்விதம் பயங்கர யுத்தமாக எவ்விதம் அமைந்தது ? அந்த ஆயுத பலத்தின் பெருக்கும் எப்படி ஏற்பட்டதென்று எண்ணிடுபவர்களுக்குப் பதில் சொல்லும்வகையில் அமைந்தது "தற்காலப் போர்க் கருவிகள்." ஆசிரியர் சூடாமணி தெள்ளிய நடையில் வெகு சரளமாக இதன் நுட்பங்களையும் வளர்ச்சியையும் விளக்குகிறார். கத்தி முனையில் நடப்பது என்கிற பழமொழியைப் போல் இக்கஷ்ட சாத்தியமான வேலையை வெகு நன்றாக செய்திருக்கிறார். யுத்தகால சட்டத்தைச் சிறிதும் மீறாது நமக்கு வேண்டிய பல விளக்கங்களைத் தெளிவாகக் கொடுக்கிறார்.

வரப்பெற்றோம்

(1) தளவாய்த் தாத்தா (M. S. சுப்பிரமணிய ஐயர்) விலை அணா 12.

(2) மௌலானா ஆஜாத் (எம். எம். இஸ்மாயில், எம். ஏ.) விலை ரூ. 1.

(3) நவ ரஸங்கள் (வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரியார் விலை அணா 12.

(4) வீர ரஷ்யா (வி.எஸ். நாராயணன்) பாகம் 1. விலை அணா 12; பாகம் 2. விலை அணா 8.

(5) தஞ்சை நாயக்கர், (எம். எஸ். சுப்பிரமணிய அய்யர் 8 அணா.)

(6) தற்காலப் போர் கருவிகள், (சூடாமணி ரூ 1.)

(7) கதாநாடக மஞ்சரி, (எஸ். கே. யக்ஞ நாராயணய்யர் 8 அணா.)

(8) ஐசுவரிய அமெரிக்கா, (வி. மஹாலிங்கம் எப். ஏ., 8 அணா.)

(9) கபீர்தாஸர், (கோ. கிருஷ்ணமூர்த்தி 8 அணா.)

எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை !

ஆர்டர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்